# வெளிச்சம்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்

சித்திரை – ஆனி, 2005

விலை ரூபா 50/=



வெளிவந்துவிட்டது.

# பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்




கடந்த பத்தாண்டுகளாக
கவிஞர் புதுவை இரத்தினதுரை
எழுதிய கவிதைகளின்
தேர்ந்த தொகுப்பு இது.

- காலப் பதிவான கவிதைகள்.
- பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரை.
- தமிழக ஓவியர் ட்ரொஸ்கி மருதுவின் ஓவியங்கள்.
- தாயகக்கலைஞர் அமரதாசின் ஒளிப்படங்கள்.
- 450 பக்கங்களில் அழகிய பதிப்பு.
- விலை: ரூபா 550.00

தொடர்புகளுக்கு:

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்
யாழ்.மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 3897

அஞ்சலிகள்



மாமனிதர்
டி.சிவராம்



நாட்டுப்பற்றாளர்
செம்பியன் செல்வன்.



பேராசிரியர்
செ.சிவஞானசுந்தரம்
(நந்தி)



சோக சோபித சொர்ணக் கவிக்குயில்
'சந்திரமதி' இரத்தினம்

## தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன்..

### கட்டுரைகள்
பேராசிரியர் கா.சிவத்தம்பி
தி.திருக்குமரன்
தூயவன்
யதீந்திரா
ஞானரதன்
அ.அன்ரனி

### நேர்காணல்
கவிஞர் சு.வில்வரெத்தினம்

### கவிதைகள்
மாலிகா
புதுவை இரத்தினதுரை
த.ஜெயசீலன்
வேல்.லவன்
வி.குணபாலா
வேலணையூர் சுரேஷ்
க.சந்திரா
வேரற்கேணியன்
துவாரகன்

### மொழிபெயர்ப்பு
வின்சென்ற் புளோறன்ஸ்

### சிறுகதைகள்
முத்து இராதாகிருஸ்ணன்
செ.யோகநாதன்
தாட்சாயணி

தூரிகையால் மனிதம் வரையும் புகழேந்தி,
குறிப்புகள், புதிய வரவுகள் இன்னும்பல...



புத்தபெருமானே! திருகோணமலைக்கு வந்த உம்மைப்போவெனச் சொல்வது அநாகரிகமானது.
ஆனால், நீர் வந்த வழியிருக்கிறதே அது போவெனச் சொல்வதிலும் பார்க்க அசிங்கமானது.

# தலைவாசல்

இதழ் 91 சித்திரை - ஆனி 2005.

## புத்தர்பெருமானை முன்னிறுத்தியா யுத்தம் ஆரம்பிப்பது?

அரச போகத்தை வெறுத்தொதுக்கி, அரியணைக் கட்டிலை நிராகரித்து, அரசியலே வேண்டாமெனத் துறவுபூண்டவர் சித்தார்த்தர். 'ஒரு எறும்புக்கும் ஊறு செய்யாதே' என்று மக்களுக்குப் போதித்தவர் புத்தர்பெருமான். அன்பு, அகிம்சை, அனைத்தின் மேலும் காதல் என்று ஈரம் சுவறிய தத்துவத்தை எமக்கருளியவர் அவர். உலகமெங்கும் அவரின் சிந்தனைகளும், உபதேசங்களும் ஒன்றாகவும், இலங்கையில் மட்டும் வேறொன்றாகவும் கடைப்பிடித்தொழுகுவது வரலாற்றுக்காலத்திலிருந்தே தொடரியாக நீள்கிறது. புத்தர்பெருமானும், பௌத்தமத வழிபாடும் சிங்களவர்களுக்கு மட்டுமான சொத்தல்ல. இலங்கையில் நீண்ட காலத்துக்கு முன்னிருந்தே தமிழர்கள் பௌத்தர்களாகவும் இருந்தாரென்பதற்கு தொல்லியற் சான்றுகள் உண்டு. தமிழில் பௌத்த கருத்துக்களை அடியாதாரமாகக் கொண்ட இலக்கியங்களும் இருக்கின்றன. இத்தனையையும் கொண்ட தமிழினத்தின்மீது மீண்டுமொரு யுத்தத்தை புத்தர்பெருமானின் பேரிலேயே தொடங்குவதற்குச் சிங்களப் பேரினவாதம் கங்கணங் கட்டி நிற்கிறது.

திருகோணமலையில் இரவோடிரவாக தமிழர்கள் செறிந்து வாழும் நகர்ப்பகுதியில் திடீரெனப் புத்தர்பெருமானின் சிலையை நிறுவியதும், அதுவும் சித்தார்த்தன் பரிநிர்வாணமடைந்த விசாகப் பெருநாளையொட்டி முளைக்கச் செய்ததின் அரசியற் பின்னணியை மிகச் சாதாரணனாலேயே விளங்கிக்கொள்ள முடியும். இலங்கையில் இனப்பிரச்சினைக்கு ஏதாவதொரு வழியில் தீர்வு எட்டப்படும் நேரம் கனிகையில் சிங்களப் பேரினவாதம் இப்படித்தான் பௌத்தத்தைக் கையிலெடுத்து எட்டும் தீர்வுகளைச் செயலிழக்கச் செய்வது ஆரம்பத்திலிருந்தே நாம் அறிந்த ஒன்றேதான்.

இன்றும் அதுதான் ஆரம்பமாகியுள்ளது. சுனாமி வந்து எம்கரைகளைத் தொட்டழித்து ஆறு மாதங்களாகிவிட்டன. பேரழிவு ஏற்பட்ட பல நாடுகளில் புனர்நிர்மாணப்பணிகள் பாதி முடிந்துவிட்டன. இங்கு மட்டுமே இன்னும் பணிகளை ஆரம்பிப்பதற்கான கட்டமைப்பையே உருவாக்க முடியவில்லை. ஏன்? எதிலும் அரசியல். எல்லாவற்றிலும் இனவாதம். 'தமிழர்களுக்கு ஈயிருக்கும் இடம்கூட இல்லை' என்ற ஆதிக்கவெறி எப்படித் தீர்வு எட்டும்? என்னென்று அமைதி பூக்கும்? எவரால் சமரசத்தை ஏற்படுத்த முடியும்?

திருகோணமலையின் நகர மத்தியில் திடீரென வந்த புத்தர்பெருமானை போவெனச் சொல்வது அநாகரிமாகப்படலாம். ஆனால், சித்தார்த்தன் திருமலைக்கு வந்த வழியிருக்கிறதே அது போவெனச் சொல்வதிலும் பார்க்க அசிங்கமானது. அரசியலை வெறுத்தொதுக்கி அரண்மனையை விட்டு வெறியேறியவரின் பெயரால் இங்கு அரசியல் நடத்தப்படுகிறது. அதற்கெதிராகப் போரிடுவது, புத்தர்பெருமானுக்கெதிரான போராட்டமாகக் கொள்ள முடியாது. அது அடக்குமுறைக்கெதிரான போராட்டமாகவே கொள்ளவேண்டும். இதைப் புத்தர்பெருமானே ஏற்றுக்கொள்வார்.

**தொகுப்பும் அமைப்பும்**
ஆசிரியர் குழு

**ஒளிப்படங்கள்**
இ.சோபிதன்.

**ஓவியங்கள்**
ட்ரொஸ்கி மருது.

**அச்சுப்பதிப்பு**
நிலா, பதிப்பகம்
கிளிநொச்சி

**வெளியீடு**
விடுதலைப் புலிகள்
கலை,பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்.

இணையத்தில் வெளிச்சம்
WWW.Velichcham.com

தொடர்புகளுக்கு:
**வெளிச்சம்**
புதுக்குடியிருப்பு-04
முல்லைத்தீவு.

**வெளிச்சம்**
விடுதலைப்புலிகள்
கலை,பண்பாட்டுக்கழகம்
மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி, கோண்டாவில்
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212223897

# எந்தச் சவாலையும் ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை



இன்று நாம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்தச் சவாலுக்கும் நாம் முகங்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். எமது மன உறுதிக்கு எதிரி சவால்விடுகின்றான். இந்தச் சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத்தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை. சிங்கள அரசானது ஒருபுறம் போர்க்கொடியை உயர்த்திக்கொண்டு மறுபுறம் சமாதானச் சமிக்ஞைகளைக் காட்டுகிறது. நாம் சமாதானத்துக்கும் தயார்; போருக்கும் தயார். நாம் சமாதானத்தின் வழியைத் திறப்பதா? அல்லது யுத்தத்தின் பாதையிற் செல்வதா? என்பதை எதிரிதான் தீர்மானிக்கவேண்டும். நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கின்றோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடாத்த நாம் தயார். எந்தவித அழுத்தங்களுமின்றி, எந்தவித ஆதிக்கமுமின்றி, சமத்துவத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் நிபந்தனையின்றிப் பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் என்றும் தயார். எமது கொள்கையை, எமது நிலைப்பாட்டை, எமது தேசியப் போராட்டத்துக்கு ஆதாரமான அடிப்படைகளைச் சிங்கள அரசுக்கும், உலகுக்கும் எடுத்து விளக்கப் பேச்சுவார்த்தைகள் வாய்ப்பளிக்கும். நாம் இனத்துவேசிகளல்ல. போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்ல. நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டைக் கௌரவிக்கின்றோம். சிங்கள மீக்களின் தேசிய வாழ்வில் அவர்களது சுதந்திரத்தில் நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை. நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம். 'எம்மை நிம்மதியாக வாழவிடுங் கள்' என்பதுதான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாஷை. இந்த நியாயமான, நீதியான, நாகரிகமான எமது மக்களின் வேண்டுகோளைச் சிங்கள அரசு எப்போது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுதுதான் ஒரு நிரந்தர சமாதானமும் தீர்வும் ஏற்பட வாய்ப்புண்டு.

தமிழீழத் தேசியத் தலைவர்.

1991 ஆம் ஆண்டு மாவீரர் தினத்தையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் விடுத்த அறிக்கையிலிருந்து.

# மாலிகா கவிதை

மிகு தொலைவுப் பயணம்.
பகலிரவு பகுத்துணரா வேகநடை
தொடர்ந்தும் நடக்கின்றன கால்கள்.
களைப்பறியாவண்ணம் எல்லோர் வாயிலும்
பாடல் வழிகிறது.
வயல்வெளிகள் கடந்தும்
ஊருக்குள்ளான தெருக்கள் முடித்தும்
மலைமுகடுகளில் ஏறியிறங்கியும்
நதிகளில் கால்நனைத்தும்
இருந்தது இதுவரையான பயணம்.
இடைக்கிடை பூக்களைக் காணவும்
குயில்களின் பாடலைக் கேட்கவும்
இரவில் சில்வண்டின் தாலாட்டில் மயலுறவும்
வரம் சித்தித்ததாயிருந்தது கடந்த வழி.
எதிர்வருவது பாலை
சுடுநிலம்.
இனித்தான் வலியும் வதையும் அறிவதாயிருக்கும்.
உள்ளோடி உயிர்வரைகீறி முள்ளேற்றும்.
தட்டாமாலை சுற்றி மயக்கும்.
தொடரக் கால்கள் ஏவாது களைப்புறும்.
ஏன் புறப்பட்டோமெனும் மறுமதிப்பீடுகள்
இடைக்கிடை தளர்ச்சியுறச் செய்யும்.
கிடைக்கும் ஏதாவது சிறு நிழலையே
நிரந்தரமாக்கத் துடிக்கும் மனம்.
பிள்ளைகளிடமோ, பேரர்களிடமோ
நேர்த்திக்கடனை ஒப்புக்கொடுத்துத் தப்பிக்க எண்ணும்.
ஒருதுளி நீருக்காய் பேரம்பேசத் தூண்டும்.
பசி உலுப்பும்போது எதையுமிழந்து
பருக்கைத் துணிக்கைக்காய்க் கையேந்த நிர்ப்பந்திக்கும்.
உம்மை விழுத்துவேனெனும் சங்கல்பத்துடன்
முன்னே வரவேற்கிறது சுடுபாலை.
இனி விடுதலைப் பாடலை
உரத்து,
மிகவுரத்து
உச்சஸ்தாயியில் எல்லோரும் பாடுவோம்
பாலையையும் கடப்போமெனும்
பெருநம்பிக்கையில்.





# தமிழர் உரிமைப்போராட்டத்தில் பத்திரிகையாளர் சிவராமின் பங்கும் அத்துறையில் தொழிற்படும் தமிழ் பத்திரிகையாளர்களை இன்று எதிர்நோக்கும் சவால்களும்

## — ஒரு சுருக்கக் குறிப்பு

■ பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

பத்திரிகையாளர் சிவராமின் மறைவு இலங்கையின் தமிழ் மக்களுடைய உரிமைப்போராட்டத்தை ஆழமான சர்வதேச கவனத்திற்குள்ளே கொண்டுவந்துள்ளது. அமெரிக்கா முதல் ஜப்பான்வரை ஊடகவியலாளர் முதல் நீதித்துறை விற்பன்னர்கள்வரை தமிழர் உரிமைப்போராட்டத்தை ஆதரிக்கின்றவர்கள் முதல் எதிர்க்கின்றவர்கள் வரை ஏறத்தாழ எல்லோருமே சிவராமின் மறைவு பத்திரிகை உலகுக்கு ஏற்பட்ட பேரிழப்பு என்றே கருதுகின்றனர். இந்த விடயத்தினை இரண்டு மட்டங்களில் வைத்துப் பார்த்தல் வேண்டும்.

முதலாவது, சிவராமிடமிருந்த பகைவரும் போற்றும் பத்திரிகைத்துறைத் திறமையாகும். இரண்டாவது இலங்கைத்தமிழரின் உரிமைப் போராட்டத்தைத் தெரிவிப்பதிலும் (REPORTING) அதன் நியாயப்பாட்டைப் பரப்புரை செய்வதிலும் அவர் காட்டிய திறமையாகும். பத்திரிகையாளர்களிடமிருந்து தமிழர் உரிமைப்போராட்டம் சம்பந்தமாக எதிர்பார்க்கப்படும் பங்களிப்பு முதலில் எந்தளவு பத்திரிகையாளராக இருப்பதென்பதிலேயே தங்கியுள்ளது. முதலாவது தொடர்பாக சிவராமிடம் காணப்பட்ட திறமைகளைப் பின்வருமாறு அடையாளப்படுத்திக்

கொள்ளலாம்.

(1)

I. தான் ஈடுபாடுகொண்டுள்ள விடயம்பற்றிய மிக ஆழமான அறிவு.
II. எடுத்துக்கூறும் திறன்.
III. மொழித்தேர்ச்சியும், கையாளுகைத் திறனும்.
IV. சக ஊடகவியலாளர்களோடிருந்த தொடர்பு.
V. குறைபாடுகளை எடுத்துக்கூறும் வீரம்.
VI. மற்றையோருடைய கருத்து நிலைப்பாட்டை கௌரவப்படுத்தல். அவர்கள்பக்க நியாயங் களைப் பார்க்கத் தயாராயிருத்தல்.
VII. மானிட நிலை நின்று தொழிற்படுதல்.

(2)

I. இரண்டாவது அம்சம் சம்பந்தமாக சிவரா மிடத்து காணப்பட்ட திறமைக்கான ஊற் றுக்கால் உரிமைப்போராட்டம் பற்றியுள்ள கருத்து நிலைக் கடப்பாட்டுணர்வு.

II. இலக்கு வாசகர்கள் பற்றிய கருத்துத் தெளி வும் ஆகும்.

•

மேற்கூறியவற்றைத் தொகுத்துக் கூறினால் கருத்துநிலைக் கடப்பாட்டுடனான தொழில்மை உன்னதம். (IDIALOGICAL COMITMENT WITH PROFESSIONAL EXCEALLENCE ) அவரிடத்து காணப்பட்டதெனலாம்.

இதற்குமேல் அவர்தம் பணியினை ஆற்றிய முறைபற்றிப் படிநிலைப்படுத்தி எ்டுத்துக்கூறல் அவசியமாகிறது. 1980களின் முதற்கூற்றில் சிவராம், தராக்கி என்னும் புனைபெயருடன் தீவிரவாத தமிழ் இளைஞர்களின் அரசியல் போராட்டங்களப் பற்றி ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினார். (தாரகை என்னும் சொல்லே ஆங்கில உச்சரிப்பில் தராக்கி என நின்றது)

சிவராமினுடைய எழுத்துக்களின் முக்கியத்து வம்பற்றி காலஞ்சென்ற பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர் மேவின் டி. சில்வா 1980களில் கூறியவற்றை இங்கு நினைவுகூறல் பொருத்த மானதாகும்.

தராக்கியின் எழுத்துக்கள் வடகிழக்குப் போரைப்பற்றிய எங்கள் பார்வையினை மாற்றி யுள்ளன. அங்கு நடைபெறுவனவற்றில் ஆழமும் அகலமும் நமக்கு இப்பொழுதுதான் புலப்படு கின்றன என்ற கருத்துப்படக் கூறி தராக்கியை ஒரு புதிய நட்சத்திரம் என்ற அளவிற்குக் கூறலாம் என்றார். அக்கூற்று முற்றிலும் உண்மையானதே. தராக்கியின் எழுத்துக்கள் ஆங்கில மொழியின் தொடர்பாடற் பரிமாணங்களுக்குள்ளே நின்று கொண்டு தீவிரவாதத் தமிழ் இளைஞர்களின் போராட்ட நுணுக்கங்களை எடுத்துக்கூறின. ஐலன்ட் பத்திரிகையில் வந்த அந்தக் கட்டுரை களை வாசித்தவர்கள் இலங்கையினுள் ஒரு புதிய போராட்டச்சக்தி நுழைந்துவிட்டது என்பதை உணர்ந்தனர். அந்தப் போராட்டத்தின் பாரதூரத் தன்மையை உணர்ந்துகொள்ள அவர்கள் தவற வில்லை. தராக்கி தமிழர் போராட்டத்தை விடு தலைப் போர்களில் ஈடுபட்டள்ள சர்வதேச அணி யினருக்குரிய மொழியில் எடுத்துக்கூறினார்.

தராக்கியின் எழுத்துக்கள் இந்தப் போராட்டங் களோடும் போராளிகளோடும் சம்பந்தப்பட வேண்டிய சர்வதேசிய பிராந்திய சக்திகளுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்துவதாக இருந்தன. குறிப்பாக புகலிட நாடுகளில் வாழும் ஆங்கிலம் தெரிந்த தமிழர்களுக்கு இவரது எழுத்துக்கள் தேன்போல இனித்தன.

இந்த எழுத்துவன்மை காரணமாக இந்தப் போரினை விளங்கிக்கொள்ள விரும்பிய அரசு கள் அவ் அரசுகளின் முக்கிய திணைக்களங்க ளுக்கு இவர் இப்போராட்டங்கள் பற்றிய "தூது வரானார்" அத்தகைய அரச மட்டத்தொடர்புகள் ஊடாட்டங்கள் இவரது எழுத்துக்களை அகலப் படுத்தின.

இதனால் இவரது எழுத்துக்களுக்கான வாச கக் கவர்ச்சியும் வட்டமும் பெரிதாகின. தராக்கி யின் மிகப்பெரிய பங்களிப்பு எனக்கொள்ளத் தக்கது தமிழ்த்தேசியம் என்ற அரசியற்கருத்து நிலையை அவர் செழுமைப்படுத்திய, செம்மைப் படுத்திய முறைமையாகும். ஆங்கிலத்தில் இலங்கைத் தமிழ்த்தேசியத்தின் முக்கியத்து வத்தை எடுத்துக்கூறிய இவர் தமிழில் அச்சொற் றொடரின் கருத்துநிலைப் பரவல் தமிழ்நிலை வட்டங்களிலே நன்கு விளங்கிக்கொள்ளப்படு வதற்கும் தெளிந்துகொ்ள்ளப்படுவதற்கும் சரி நிகரில் இவர் எழுதிய கட்டுரைகள் பெரிதும் உதவின. உண்மையில் தமிழ்த்தேசியம் என்ற அரசியற் கருத்துநிலை தமிழர்களின் உரிமைப் போர் சம்பந்தமாக ஈடுபட்டவர் எல்லோர் மனநிலை யிலும் மிகஆழமாகப் பதிவதற்கு இவருடைய

இந்தக் கட்டுரைகள் உதவின. அண்மைக்காலத்தில் வீரகேசரியில் வெளிவந்த தமிழ்த்தேசியம் பற்றிய கட்டுரைகள் அக்கருத்து எவ்வாறு ஒரு சமூகப்போராட்டத்திற்கான ஆயுதமாக இருக்க வேண்டும் என்று எடுத்துக்கூறியுள்ளார்.

சிவராம் என்ற தமிழ் உரிமைப்போராட்ட பத்திரிகையாளனின் மிக முக்கியமான பங்களிப்புக்களுள் ஒன்று இந்த விடுதலைப்போரையும் வேட்கையையும் தமிழரது போர்நாட்டப்பாங்குடன் தொடர்புடையது என்பதை நிறுவியமையே ஆகும். தமிழ் மிலிற்றரிசம் என்ற தலைப்பில் இவர் லங்கா காடியனில் எழுதிய ஆங்கிலக்கட்டுரைகள் மிக முக்கியமானவையாகும். *(? 1985, 1986)*

தமிழரிடம் இயல்பான ஒரு போர்க்குணம் உண்டென்பதை அவர்களுடைய வரலாற்றில் இருந்தும் மானிடவியல் தரவுகளில் இருந்தும் அவர் எடுத்துக்காட்டியபொழுது போராளிகளின் வீரமும் தலைமைச் சக்திகளின் தீட்சண்யமும் தமிழரல்லாத பொது வாசகர்களுக்கு முதல் தடவையாக எடுத்துக்கூறப்பட்டது. தமிழர்களின் புறத்திணைப் பாரம்பரியத்தையும் பிரிட்டிஸ் காலணித்துவத்தினால் கிரிமினல் குலக்குழுக்கள் *(Criminal Tribes)* எனப் பெயரிடப்பட்டு ஓரங்கட்டப்பெற்ற சாதிக் குடும்பங்கள் பற்றியும் அவர் எழுதினார். இதுகாலவரை பயன்படுத்தப்பட்ட எடுத்துரைப்பு மொழியில் இருந்து இதுமுற்றிலும் வேறுபட்டதாக அமைந்தது. தமிழர்களின் வீர உரிமைப்போர் போருக்கான ஊற்று அகிம்சையன்று; அடுக்குத் தமிழுமன்று என்று அவர் எடுத்துக்காட்டியதும் ஒரு புது வியப்பு ஏற்பட்டது. ஏனெனில், அப்பொழுது அரசியல் போராட்டம் மேடைப் பிரசங்கத்திலே தங்கியிருந்தது என்று கருதப்பட்டது.

சிவராமினுடைய பத்திரிகை எழுத்தாற்றலில் பெரிதும் எடுத்துக்கூறப்பட வேண்டியது அவருடைய போரியல் பற்றிய ஆழமான அறிவாகும். யுத்த நடைமுறைகளையும் யுத்த தந்திரோபாயங்களையும் நன்கு ஆராய்ந்து ஏறத்தாழ ஒரு சிறப்புத்துறைபோன்று அவற்றைப் பயின்றார். இதனால் அவரது கட்டுரைகள் போரியலின் அடிப்படையம்சங்களை விளக்குகின்ற விஞ்ஞான பூர்வமான எழுத்துக்களாகவும் விளங்கின.

இவை யாவற்றுக்கும் மேலாக சிவராமின் மிகப்பெரிய பங்களிப்பு இப்போராட்டத்தை இணையத்தள ஊடகம்மூலம் சர்வதேசமயப்படுத்தியமையாகும். தமிழ்நெற் (Tamil net) எனும் இணையத்தளம் ஈழத்தமிழரின் உரிமைப்போராட்டம்பற்றிய அதிகாரபூர்வ குரலுடைய ஊடகமாக விளங்குகின்றது. தமிழ்நெற்றை அவர் ஒழுங்கமைத்துக்கொண்ட முறைமை குறிப்பாக செய்திச் சேகரிப்பில் அது முன்னணியில் நிற்பதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் பலராலும் வியந்து போற்றப்படுவனவாகும்.

அவருடைய ஒழுங்கமைப்புத்திறனில் நான் அவதானித்த முக்கிய அம்சம் அவர் தன்னை முக்கியப்படுத்திக்கொள்ளாத முறைமையாகும். அந்த நடைமுறையால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பங்குதாரர்களாகத் தொழிற்படும் ஓர் அனுபவமே மேலோங்கி நின்றது.

இதுவரை சிவராம் என்ற பத்தரிகையாளனின் திறமை, முக்கியத்துவம் ஆகியன பற்றி மிகவும் சுருக்கமாக நோக்கினோம். அடுத்து அவர் அகால மரணத்திற்கு ஆளாகியுள்ள இன்றைய சூழலில் தமிழர் உரிமைப்போராட்டம் தொடர்பாக தொழிற்படும் தமிழ் பத்திரிகையாளர்களை எதிர்நோக்கி நிற்கும் சவால்கள் பற்றி மிக மிகச் சுருக்கமாக சில விடயங்களை நோக்குதல் பொருத்தமாக இருக்கும்.

முதலில் கருத்து நிலைத்தளம்பற்றி நோக்குவதே பொருத்தமானதாகும். தமிழ்த்தேசியமெனும் அரசியற் கருத்துநிலைபற்றிய விளக்கம் அடிப்படையானது என்று கருதுகிறேன். இந்த விடயம்பற்றி வீரகேசரிமூலம் சிவராம் தமிழ் வாசகர்களின் சிந்தனைகளைப் பெரிதும் கிளறிவிட்டிருந்தார் என்பதையும் மறந்துவிடக் கூடாது. இல்ங்கைத்தீவின் தமிழர் உரிமைப் போராட்டத்தின் அடித்தளம் தமிழ்த்தேசியம்தான். இந்தத் தமிழ்த்தேசியம்தான் இப்போராட்டத்தின் இலக்குகளையும் இயல்புகளையும் தீர்மானிக்கிறது. இத்தெளிவு பத்திரிகையாளருக்கு இருத்தல் வேண்டும்.

தமிழ்த்தேசியத்தின் இயங்குதளம் புவியியல் ஒருமைப்பாடும் தமிழ் மக்களின் ஒருங்கிணைவும்தான். சற்று உன்னிப்பாக நோக்கும்பொழுது இவையிரண்டுமே இன்றைய நிலையிற் சில பிரச்சினைகளை உள்ளடக்கி நிற்கின்றன என்று தெரியவரும். புவியியல் ஒருங்கிணைவிலேதான்

இக்கருத்து நிலையின் நிறைவு இருக்கின்றதென் பதை உணர்ந்துகொள்ளல் அவசியம். அதே வேளையில் காலணித்துவ வரலாற்று ரீதியான தடைநிலைகளும் எதிராளிகளின் பேதப்படுத்து கைகளும் அச்சுறுத்தும் அதேவேளையில் ஒருங் கியைவை வளர்ப்பதற்கும் உறுதிப்படுத்துவதற் கும் வேண்டியனபற்றி தெளிவிருத்தல் வேண்டும். செடியின் பிரச்சினைகள் இலையில் தெரியலாம். ஆனால், அவை வேரையே பாதிக்கும். பிரச்சி னைத் தீர்வுக்காக வேரோடு பிடுங்கக்கூடிய செடி யல்ல இது.

இன்றைய நிலையில் இதுபற்றிய தெளிவு தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு அவசியம். புவி யியல் ஒருமைப்பாடு எந்தளவிற்கு முக்கியமோ

உண்மையில் இன்றைய வரலாற்றுச் சூழ்நிலை யில் தமிழர்கள் தங்கள் அரசியல் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைப் போராட்டத் திற்கான ஒருங்கியையவே ஆகும். அந்த உரி மைப்போருக்கு வேண்டிய ஒற்றுமையும் உரி மைப்போராட்டத்தின் ஊடே ஒற்றுமையை வளர்த்த லென்பதும் இரு பிரதான அம்சங்களாகும்.

உண்மையில் உரிமைப்போராட்டம் என்ற அர சியல் நிலைப்பாட்டைப் பேணுவதும் அதற்கு மேலே அது தன் இலக்குகளை அடைவதற்காக அதனை ஊக்கப்படுத்துவதும், வேண்டுமான இடங்களில் ஆற்றுப்படுத்துவதும் அத்தியாவசி யப் பணிகளாகும்.



**தராக்கியின் எழுத்துக்கள் இந்தப் போராட்டங்களோடும், போராளிகளோடும் சம்பந்தப்படவேண்டிய சர்வதேசிய, பிராந்திய சக்திகளுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்துவதாக இருந்தன.**

அந்தளவிற்கு பிரதேச தனித்துவங்களும் முக்கி யம். இவை ஒன்று மற்றொன்றை நிராகரித்தல் கூடாது. இணைநிலையைப் போற்றுவதென்பது பத்திரிகையாளர்கள் சிந்தனைத் தெளிவுடன் செய்யவேண்டியதொன்றாகும்.

பிரதேச நிலையில் தமிழர் ஒருங்கியையவு போற்றப்படும் அதேவேளை இங்கு ஒரு இனக் குழுமச் சகசீவனமும் உண்டு என்பதை மறந்து விடக்கூடாது.

புவியியல் நிலைப்பட்ட இச்சிக்கலுக்கு அப் பால் ஆனால் அதனைத் தளமாகக் கொண்டி ருப்பதுதான் தமிழர் ஒருங்கியைவுபற்றிய பிரச் சினையாகும்.

தமிழர் ஒருங்கியைவு என பேசும்பொழுது அது தனியே ஒரு எண்கணித வரையறைக்குள் நின்றுவிடுவதல்ல. தமிழர் ஒருங்கியைவு என்பது

தமிழர் உரிமைப்போராட்டம் இன்று பெற் றுள்ள சர்வதேசிய வலுவையும் அந்த வலு ஏற்பட்ட வரலாற்றையும் புறந்தள்ளிவிட்டு இந்த உரிமைப்போராட்டத்தை மேற்கொண்டு செல்ல முடியாதென்பது நன்கு விளங்கிக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். சுற்றிவரச் சோவென மழை பெய்யும் பொழுது குஞ்சுகளின் பாதுகாப் பிற்காக இருக்கின்ற ஒரே இடத்தையும் பிடுங்கப் பார்க்கும் அரசியற் திசை திருப்பிகள்பற்றிய பாரிய கவனம் இருத்தல் வேண்டும்.

உண்மையில் மேற்கூறியவை எவையும் கற் பனைத் திருஸ்டாந்தங்களல்ல நடைமுறைப் பய முறுத்தல்களாக உள்ளன என்பதை விளங்கிக் கொள்ளல்வேண்டும்.

தமிழ்த்தேசியம் பற்றிய இன்னுமொரு முக்கி யமான பரிமாணம் பற்றிய சிரத்தை அவசிய மாகியுள்ளது. தமிழ்த்தேசியம் என்ற இந்தப்

பெயர் பல்வேறு வரலாற்றுத் தொடர்புகள் காரணமாக மொழிநிலைப்பட்ட புகழ்ச்சிகளுக்கும் ஒதுக்கற்பாடுகளிற்கும்கூட இடமளித்துவிடும். இலங்கையில், ஈழத்து இளைஞர் இயக்கங்களின் வழியாக வலுவுடன் வளர்த்தெடுக்கப்பட்டு விடுதலைப்போரின் இன்றைய கட்டத்தில் மிகுந்த தெளிவுடனும் தன்நம்பிக்கையுடனும் உச்சரிக்கப்படும் தமிழ்த்தேசியத்தில் சமூக இலக்குகள் பற்றிய தெளிவு இருத்தல் அவசியம்.

இதனை இன்னொருவகையிலும் கூறலாம். இன்றைய நிலையில் தமிழ்த்தேசியம் என்ற அரசியற்கோஷம் ஒரு சாதாரண சீவற்தொழிலாளிக்கு, விவசாயத் தொழிலாளிக்கு, கடற்தொழிலாளிக்கு, கணவனையிழந்து குடும்பப்பாரத்தைச் சுமக்கும் விதவைக்கு, பத்துப்பன்னிரண்டு வருடங்களாக அகதி முகாம்களிலேயே வசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலேயுள்ள அகதிகளுக்கு எத்தகைய விமோசனத்தைத் தரும் என்பது பற்றித் தெளிவுபடுத்தப்படுவது அத்தியாவசியமாகும். இந்த தெளிவுபடுத்துகையையும் அதன் பின்னர் அதன் நிறைவேற்றுகையையும் உறுதிப்படுத்துபவர்கள் பத்திரிகையாளர்களே.

மேலே கூறியவை சிவராம் மறைவின் பின்புலத்தில் ஏற்பட்டுள்ள பத்திரிகைப் பணிகளின் முக்கித்துவம் பற்றி மிகச்சுருக்கமாக எடுத்துக் கூறுகின்றன.

இறுதியாக ஒருவிடயம் எடுத்துக்கூறப்பட வேண்டிய அவசியம் உள்ளது. தொடர்பியல் மாணவன் என்ற வகையில் இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை உலகில் நான் அவதானிக்கும் பிரதான பண்பு இலங்கையில் தமிழ்ப்பத்திரிகையாளர் என்ற வகையில் பத்திரிகையாளர்கள் தம்மைத் தயார் செய்வதற்கும் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் வேண்டிய, போதிய தொழின்மை வசதிகள் இல்லாமையே ஆகும்.

பத்திரிகையியற் பயிற்றுகைக்கோ அல்லது பத்திரிகையிற் தொழிற்படும் அமைப்புக்களை வலுவாக நிறுவுவதற்கோ வேண்டிய வசதிகள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது. சிவராம் மறைவையொட்டி கிளம்பிய பத்திரிகையாளர்களின் கூட்டொளியிலே சிங்களப் பத்திரிகையாளர்களிடையே காணப்படும் தொழின்மை நிறுவனங்களின் பலம் நன்கு புலப்படுகிறது.

இவ்விடயத்திலே தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு சில சிறப்புப் பிரச்சினைகள் உள்ளன. இவர்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளையில் அங்கு நிலவும் பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. தலைநகர் மட்டத்திலோ தேசிய மட்டத்திலோ தெரியப்பட்ட மிகச்சில தமிழ்ப்பத்திரிகையாளரைத் தவிர மற்றையவர்கள் ஏறத்தாழ புறக்கணிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

பத்திரிகையியற் பயிற்சிக்கென தொழிற்படும் பயிற்சி நிறுவனங்கள் பலவற்றில் சிங்கள பத்திரிகைத்துறை மாணவர்களுக்குக் கிடைக்கும் பயிற்சியிலே பாதிதானும் கிடைப்பதில்லை. பத்திரிகைத்துறைக்கான சிறப்புத் தேர்ச்சிகளையுடைய அச்சு ஊடக தொடர்பியல் வல்லுநர்கள் நம்மிடையே இல்லையென கூறப்படுமளவிற்கு மிகக் குறைவாகவே உள்ளனர்.

(இக்கட்டுரையை படியெடுத்து எழுதி உதவிய செல்வி சுஜாந்தினி சங்கரப்பிள்ளைக்கு நன்றி உரித்து)

## விழிப்பு

காவலரண்களில்
நேற்றுவரை விழித்திருந்தோம்
சமாதானம் வருமென்று?
வரவில்லை வரவேயில்லை
இன்றும் விழித்திருக்கின்றோம்
சண்டை வருமோ என்று?
நாளையும் விழித்திருப்போம்
பிறகும் விழித்திருப்போம்.
விடுதலை வருமென்பதால்!
ஏன் தெரியுமா
விழிப்புத் தானே
விடுதலைக்கு முதற்படி!

❑ வேலணையூர் சுரேஷ்

# சாவுக்குப் பின்னும் தன் எழுத்தால்வாழும் தவம் பலித்தவன்

❑ புதுவை இரத்திதுரை

மாயக்குயவன் வனைந்த மட்பாத்திரமொன்று
கைதவறிப் போனதெனச்
சித்தர்மொழியிற் செப்பி
ஆறமுடியவில்லை என்னால்.
என்றோ ஒருநாள் இறப்புவரும்
இன்றுனக்கது சித்தித்ததெனச் சொல்லி
மீளமுடியவில்லை உன் பிரிவுதரும்
சோகத்திலிருந்து.
வந்தான் வானமரன்
வரலாறொன்றெழுதிவிட்டுச்
சென்றானெனப் பொய்யைச் சோடித்து
கல்வெட்டொன்றெழுதவும் கையேவவில்லை.



செம்பியன்செல்வா!
இப்படியா அந்தரிக்கவிடுவது நண்பனை?
உனக்கும் எனக்குமான முப்பத்தைந்து வருட
விழுதிறக்கிய உறவின் வெளியில்
கைபிணைந்து உலவினோம்
நீ கொழும்புசெல்ல விடைபெறும்வரை.
பிரிந்து போகின்றேனென ஒற்றைச்
சொல்லிலாவது
அன்று சொல்லிப்போயிருந்தால்
கொஞ்சம் ஆறியிருக்கலாம்.
"டேய்" எனவும்
"மச்சான்" என்றும்
காதுரசி அழைத்து உறவிழைக்க
எனக்கினி யாருண்டு?
உன்னை அள்ளிச்சென்ற நோயை
முற்றும் அறிந்தவன் நான்.
அண்மையிற்தான்
அதிலிருந்து மீண்டுவரமுடிந்தது என்னால்
தற்காலிகமாக.
இன்று உன்னைக் கூட்டிச்சென்றது நிரந்தரமாக.
போய்விட்டாய் நீ
தனித்தேன் நான்.
"அமைதியின் இறகுகள்" தரித்து உயரப்
பறந்தவனே!
சுமையற்றிருந்தாய் எம்முடன்.
உனக்குக் கனவுகள் பெரிதாயில்லை
ஆசைகளும் அதிகமில்லை.
குழந்தையொன்றைப்போல
தனித்த ஞானி ஒருவனைப்போல இருந்தாய்

குதுகலச்சிரிப்புடன் கழிந்தது உன் நாளாந்தம்.
உன் நெஞ்சின் மடிப்புகளுக்குள்ளேயும்
துயரச்செமும்பு படிந்திருக்கலாம்
வெளியே எமக்கது தெரியவரவில்லை.
உன் எழுத்து வலியது.
"நாணலின் கீதை"யைத் தொட்டுணர
சாதாரணன் பலபடிகள் ஏறிவரவேண்டும்
அது திருமந்திரம்போல.
ஒற்றைச் சொல்லுக்குள் ஓராயிரம்
அர்த்தம்பொதித்து
நீபடைத்த சிற்பம் அது.
எழுத்தால் சாவுக்குப்பின்னும் வாழப்போகும்
தவம் பலித்தவன் நீ.
ஈழத்தமிழரின் இடர்
வதை, வலி என்பவற்றின்
வேரையறிந்த வித்தகன் நீ.
விடுதலையை அவாவிய வெளிச்சம் நீ.
கண்ணிவெடி அகற்றிய காணியைப்போல
சகல தளைகளும் அகலும் காலத்துக்கு
காத்திருந்த மானுடன் நீ.
காத்திருப்பதென்பதாய் நீ கைகளைக்கட்டிப்
பார்த்திருக்கவில்லை.
காலத்துக்கான சிலுவையைச் சுமந்தாய்
முள்முடி தரித்தாய்.
உன்னாலான வகையில்
தோளமுத்திய பாரம்சுமந்து நடந்தாய்.
எழுத்தேயென் ஆயுதமெனச் சொல்லி
வெறும் இரங்கற்பா எழுதியவனல்ல நீ.
விடுதலை வெளிச்சத்துடன் சேர்ந்து நடந்தாய்
இன்று போய்விட்டாய்.
செல்வா!
மெல்லிய வைகாசிக்காற்றாய் உலவிய
வெள்ளை மனிதனே!
பிறர்வலியை நின்வலியாய் உருவகித்து
துடிக்கும் மனம்படைத்த தூயவா
போகவா போகிறாய் எம்மைவிட்டு?
நீ நீட்டிப் படுத்திருப்பதைப் பார்க்க
என் நெஞ்சு தாங்காது.
சரிஞ போய்வருக நண்பனே!
பிரிந்தோம்
மீண்டும் சந்திப்போம்.
□□

# அஞ்சலி



நாட்டுப்பற்றாளர்

## செம்பியன் செல்வன்

*(ஆறுமுகம் - இராஜகோபால்)*

**யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த ஆறுமுகம் இராஜகோபால் என்ற செம்பியன் செல்வன் ஈழத்தமிழ்ப் பரப்பில் விழுதெறிந்த இலக்கிய விருட்சமாக நின்றவர். ஆரம்ப காலத்திலிருந்தே விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்துடனும், வெளிச்சம் சஞ்சிகையுடனும் முற்றாகவே தன்னை இணைத்து இரண்டினதும் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் இவர் ஆற்றிய பணி அளப்பரியது. வெளிச்சம் சஞ்சிகையின் தொடர் வரவுக்கு இவரின் எழுத்துக்களும் அடியாதாரமாகின. ஆளுமைமிக்க இவரின் எழுத்து தமிழ்த் தேசியத்துக்கு உரம்போட்டு வளர்த்து நல்ல விளைச்சலையும் தந்தது. எங்கும் அறியப்பட்ட எழுத்தாளர் என்றான பின்னும் அமைதி, அடக்கம், அனைவரையும் அணைத்துச்செல்லும் பாங்கு, இளைய தலைமுறையைத் தூக்கியெடுத்து நெறிப்படுத்தும் மனம் எனப் பல மேன்மைகளின் உருவமாகி எம்முடன் இருந்தார். ஆரம்ப காலம் தொட்டே ஈழத்தமிழ்த் தேசியத்தையும், அத்தேசியத்தை முன்னெடுக்கும் எமது தேசியத் தலைவரின் தலைமையையும், வழிகாட்டலையும் ஏற்று எந்தவேளையும் நிலை தளராது காலக்கடமையில் வழுவாது நின்றார். எழுத்துப்பணி, கல்விப்பணி, பத்திரிகைப்பணி, சமூகப் பணி என்று பலதரப்பட்ட அடுக்குகளிலும் தன் இறப்புவரை இடையறாத பங்களிப்பை நல்கினார். இவரின் இன, மொழி, மண்பற்றையும், மானிட நேசிப்பையும் கௌரவிக்கும் முகமாக எமது தேசியத் தலைவர் 'நாட்டுப்பற்றாளர்' என்ற விருதளித்துள்ளார். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினருடனும், சக கலை, இலக்கியப் படைப்பாளிகளுடனும் வெளிச்சமும் இணைந்து கொள்கிறது.**

**வெளிச்சம்**

# கூழ்ப்பானை

❑ முத்து.இராதாகிருஷ்ணன்



**சில நேரங்களில் நடக்கவே முடியாது என்று நினைக்கும் விடயங்கள் நடந்துவிடும்போது ஏற்படும் மலைப்புத்தான் வசந்தனுக்கும் ஏற்பட்டது அந்தச் செய்தியைக் கேட்டு.**

சுதாகரித்துக்கொண்டு மீண்டும் வினாவினான்.

என்ன சொன்னாய்?...

சேர் சங்கரலிங்கம் அண்ணர் ஆக்கள் வந்திருக்கினம்... படலத் திறப்பை வாங்கட்டுமாம். சிவனருள் சைக்கிளில் நின்றபடி இரைந்தான்.

...... வசந்தன் திடுக்கிட்டான்...

சங்கரலிங்கத்தார் எப்ப வந்தவயள் என வினா்வினான்.

அவயள் பதினொருமணி லோஞ் சில வெளிக்கிட்டு வந்திட்டினம்... ஜெற்றியில இருந்து லான் மாஸ்டரில (சிறிய ட்ரக்டர்) வருகினம். என்னப் போய் திறப்ப வேண்டி வீட்டைத் திறக்கச் சொன்னவயள்... சிவனருள் விலாவாரியாகச் சொன்னான்.

வசந்துக்கு இருண்டுபோனது

இரண்டு நாளுக்கு முதல் கூழ் குடிக்க வேணும் என்று கணேசலிங்கம் ஆசைப்பட்டு கதைச்சதுதான் இப்ப எல்லா வில்லங்கத்துக்கும் காரண

மாப் போச்சுது. ரெண்டு நாளுக்கு முதல் தோன்றின எண்ணம் நிறைவேறினது என்னவோ முதல் நாள் இரவுதான்.

மச்சான் ஒடியல் கூழ் காய்ச்சிக் குடிப்பமே...

மாலையில் ஒன்றாக இருந்து கதைத்தவேளை கணேசலிங்கத்திற்குத் தோன்றின ஆசை இது.

ஓமடா கொஞ்சம் மீனும், இறாலும், நண்டும் எடுத்தா அலுவல் முடிஞ்சுடும். ஆமோதித்தான் சுகராஜ்...

அந்தத் தீவில் இதெல்லாம் பெரிய பிரச்சனையே இல்லை. ஆளைக் கூட்டிக்கொண்டுபோயே மீன்பிடிக்கலாம். அவ்வளவு பெடியளும் அவரது மாணவர்கள்தான். தீவின் மத்தியில் இருந்த பெரிய பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்களாக அவர்கள் கடமை புரிந்தனர். நியமனம் கிடைத்த போது இந்தத் தீவிற்குத்தான் என்று எழுதிக்கொடுத்துவிட்டார்கள். வசந்தன், சுகராஜ், கணேசலிங்கம், தேவர் அதிபருடன் சேர்ந்து ஐந்துபேர்.... அதிபரும் முப்பது வயதுக்குட்பட்டவர்தான். இரண்டு வரிசம் சீனியர். எல்லோரும் சங்கரலிங்கத்தார் வீட்டிலேயே குடியிருந்தனர். சங்கரலிங்கத்தார் குடும்பத்துடன் நகரத்துக்குப்போய் செட்டிலாகி விட்டார். ஆனாலும், இடையிடையே ஏதாவது கோயில் விஷேசங்களைச் சாட்டாக வைத்து வந்திறங்குவார். அந்த வீட்டின் தாய் அறையையும் சமையலறையையும் அவர்கள் அவ்வேளைகளில் பயன்படுத்துவர். மற்றைய நேரங்களில் அவையிரண்டும் பூட்டப்பட்டு திறப்பு அவர்களுடனேயே நகரத்துக்குச் சென்றுவிடும். தட்டுமுட்டுச் சாமான்கள் முதல் பெறுமதியான சாமான்கள் வரை அவர்களின் தேட்டம் முழுவதும் அந்த அறைகளிலேயே.

ஒரு படுக்கை அறையையும், விறாந்தையையும், முற்றத்தில் இருந்த நீண்ட மாலயும், (கொட்டில்) சிறிய வெளிப்புற சமையல் பகுதியையும் வாடகைக்கு விட்டிருந்தனர்.

தேவர் சமையல் செய்வதில் கில்லாடி. பெரிய அடுக்குகள் எல்லாம் செய்து சமையலைத் தொடங்குவார். ஆனால் சாப்பிடும்போது உப்புடன்தான் எல்லோரும் இருக்கவேண்டும். மாலையில் பெடியன் நண்டும் மீனும் கொண்டுவந்தபிறகுதான் கூழுக்கான அடுக்குகள் நடந்தன. நண்டுக்கும் இறாலுக்கும் கைகால் முறித்து கழுவி வைத்தாயிற்று. உப்புப்போட்டு முதலில் அவிய விட்டு பிறகு மீனைப் போடுவம்.

மீனை அவிச்சு முள் எடுக்க வேணும். பரபரப்பாகத் தேவர் சமையலில் இறங்கிவிட்டார். பிறகு ஆரும் சும்மா நிக்கேலாது.

எல்லாம் சரி கமலனும் வருவானாம், நமசியும் வாறான். கிட்டத்தட்ட எட்டுப்பேருக்கு உந்தச் சின்னப்பானையில காணுமே? வசந்தன் கேட்ட பிறகுதான். எல்லோரும் ஆளையாள் பாத்து ஆமோதிச்சினம்.



கறியப்போடவே உது காணாது. பிறகு தண்ணிவிட்டுக் கூழை எங்க காய்ச்சிறது... சுவராஜ் சிரித்தான். எல்லோருக்குமே சிரிப்பு வந்துவிட்டது.

பக்கத்துவீட்டு சிவசு மாமி யிட்ட பானை ஏதும் கிடக்கோ எண்டு கேள்.

தேவர் சுகாவைப் பணித்தார். மச்சான் அந்த மனிசி விடுப்பு விடுப்பாகக் கேட்டுக்கொண்டிருக்கும் எல்லோருக்கும் கூழ் கிடைச்சமாதிரித்தான். சுவராஜ் மறுத்தான்.

ஏன் அங்கை இங்கையெண்டு அலையிறியள் நான் ஐடியாத் தாறன். எங்கட வீட்டுக்காரரின்ர குசினிக்குள்ள பெரிய கூழ்ப் பானை கிடக்கு. போற நேரத்தில ஆச்சியம்மாளுக்கு ஏதோ காய்ச்சி வைச்சவயள். மூச்சு விடாமல் சொல்லி நிறுத்தினான்.

சரி அதுகள் குசினியைப் பூட்டிப்போட்டு போட்டுதுகள். பிறகு ஏன் பிரயோசனம் இல்லாமல் கதைக்கிறியள். சொன்ன தேவர் ஒரு வழியும் இல்ல.... ரெண்டு முறை காச்சுவம் என்றார் முடிவாக. இல்ல தேவர் கொஞ்சம் பொறுங்கோ என்ற வசந்தன் சுகராசனை அழைத்துக்கொண்டு படுக்கையறைக்குள் சென்றான். படுக்கையறைக்குப் பக்கத்தி

லேயே சமையலறை உள்ளது.

மச்சான் சுகா இந்தப் பெட்டியில கால்வச்சு உள் சுவரில் ஏறிப்பார் அங்கால் பூட்டின சமையலறைக்குள்ள பானை கிடக்கோ என்று..... வசந்தன் வரிஞ்சு கட்டிக்கொண்டு காரியத்தில் இறங்கிவிட்டான்.

ஓமடா கணக்கான சைசில பானை ஒன்று கிடக்குது. ஆனா மேலயிருந்து பார்கத் தலை சுத்துது. என்னாலை இறங்கேலாது. நீ இறங்கி எடு.

சுகராஜ் மெல்ல இறங்கினான். விறுவிறுவென்று பெட்டியில் ஏறி அறைச்சுவருக்குத் தாவின வசந்தன் சமையலறைக்குள் இறங்க முதல் சுகாவைப் பார்த்தான். மச்சான் நாங்கள் களவுதான் செய்யிறம் அலுவல் முடிச்சவுடனேயே கழுவித் திரும்ப வச்சுப் போட வேணும். வசந்தனின் கருத்தை ஆமோதித்த சுகராஜ் நீ ஏன் யோசிக்கிறாய்.. அதுகள் நாளைக்கு வரவா போகுதுகள்.. வசந்தன் மெதுவாக இறங்கினான். குப்பென்று புளுதி மணத்தது. இருட்டில் கைகள் பரபரத்து அந்தப் பெரிய பானையைத் தடவிப் பற்றின.

& & &

சேர்.... சிவனருள் உறுக்கினான். சுதாகரித்துக்கொண்ட வசந்தன் சட்டென்று சுகராஜைக் கூப்பிட்டான். மச்சான் வரவா போயினமென்று நேற்றுக்கேட்டது அதுகளுக்கு கேட்டிட்டுது போல. வந்து இறங்கிவிட்டுதுகளாம். புரியாமல் முழித்த சுகாவிற்கு கூழ்ப்பானை கழுவப்படாமல் கிணற்றடியில் கிடக்கும் விஷயத்தை ஞாபகமூட்டினான். சுகாவிற்கு உறைத்தது. பள்ளிக்கூடத்தில் போட்டது போட்டபடி இருக்க துரிதமாக வீடுநோக்கிச் சென்றனர்.

கூழ்ப்பானை விஷயம் வீட்டுக்காரருக்குத் தெரிஞ்சுபோச்செண்டால் எங்களை மனிசராய் மதிப்பினமே... செய்யிறது களவு பாக்கிறது வாத்தியார் வேலை என்று காறித்துப்பிப்போட்டுப் போடுங்கள். வீட்டாலையும் எழுப்பிவிட்டுடுங்கள்.

சுகா வேகமாகச் சைக்கிளை மிதித்தான். பின்னாலேயே சிவனருள் வந்துகொண்டிருக்கிறான். டேய் சிவா நீ போ நாங்கள் வீட்டிலபோய் நிக்கிறம் அவையள் வரட்டும் சரியா..... கூறிய வசந்தன் அவையள் எங்கினேக்க வருகினம்? எனக்கேட்டான். சைக்கிளைத் திருப்பிய சிவனருள் சரசுவளவுப் பக்கமாக லான்ட் மாஸ்ரர் தாண்டியிருக்கும் எனக் கூறிவிட்டுச் சென்றான்.

சரசுவளவெண்டால் இன்னும் ஏழு எட்டு நிமிசத்தில வந்திடுங்கள்.

வசந்தன் பரபரத்தான். படலையைத் திறந்து வளவுக்குள் ஓடினான். சுகராஜ் பின்னால் சைக்கிளை உருட்டியபடி....



மச்சான் சுகா படலையடியில நிண்டுபார். வீட்டுக்காரர் வந்தா உடன உள்ளுக்குள்ள வரவிடாத... சரியா. சொல்லிக்கொண்டே வசந்தன் கிணற்றடிக்குச் சென்றான். அங்க அந்தப் பெரிய கூழ்ப்பானை கசகசவென்று கிடந்தது. தண்ணீர் ஊற்றிவைத்திருந்தபடியால் கழுவ இலகுவாக இருக்கும். தென்னந்தும்பை எடுத்துப் பானையைத் தேய்த்துக் கழுவினான். கிணற்றில் தண்ணீர் மொண்டு ஊற்றினான். பானை பளிச்சென்று இருந்தது. திருப்தி வந்தது. ஐயனாரே வீட்டுக்காரரைக் கொஞ்சம் தாமதிக்கவை. பானை கழுவுவது ஒன்றும் கடினமாகப் படவில்லை. கழுவிய பானையைத் தூக்கியபடி மாலுக்குள் (கொட்டில்) ஓடினான். பானையை ஈரம்போகத் துடைக்க வேணும். அவையள் வாறதுக்குள்ள வைக்கவேணும்.

பானையில் ஈரமும் இருக்கக் கூடாதே அவசரத்துக்குத் துணி ஒன்றும் அகப்படவில்லை.

கொடியில் கிடந்த ஒரு பெனியனை இழுத்தான். விறுவிறுவென்று துடைத்தான். படலையில் சத்தம் கேட்டது. பாய்ந்து எட்டிப்பார்த்தான்.

தேவர் வந்துகொண்டிருந்தார். ஓ அவரும் கூழ் குடிச்சவர் தானே. சுகராஜ் தேவரைப் படலையில் மறித்துவிட்டு தான் மாலுக்குள் ஓடிவந்தான்.

தேவர் கதைவிடக்கூடிய ஆள் வீட்டுக்காரரைக் கொஞ்சம் மடக்கிக் கதைகுடுத்து மினக்கெடுத்தக்கூடியவர்தான். சுகராஜ் உள்ளுக்குள் ஓடிவந்தான். வசந்தன் பானையை நன்

றாகத் துடைத்துவிட்டான். இனிப் பானையைக் கொண்டுபோய் பூட்டின சமையலறைக்குள்ள வைக்கவேணும். படுக்கையறைக்குள்ளால ஏறி அங்கால பூட்டின சமையலறைக்குள்ள இறங்க வேணும். மச்சான் நான் இறங்கிறன் நீ பானையைத் தா. பெட்டியில் ஏறி சுவருக்குப் போனான் வசந்தன். படலையடியில் லான்ட்மாஸ் ரர் சத்தமும் ஆட்கள் இறங்கிற சத்தமும் கேட்டது. தேவர் ஏதோ கதைப்பதுவும் கேட்டுக்கொண்டி ருந்தது.

வசந்தன் பானையைக் கையில் பிடித்தபடி சமையலறைக்குள் இறங்கினான். கைநடுங்கியது. எடுத்த இடத்தில் பானையை வைத்தான். அப்பா விஷயம் முடிஞ்சுது. மனதில் ஒரு நிம்மதி தோன் றியது. பெரிதாக வாய்விட்டுச் சிரிக்கவேண்டும் போல் தோன்றியது.

அப்ப பள்ளியில இன்டர்வெல் விட்டுப்போட்டுது போல எல்லோரும் இஞ்ச நிக்கிறியள் எங்கட பிரச்சினையில யுத்தநிறுத்தம் ஏற்பட்ட மாதிரி ஹா... ஹா... சங்கரலிங்கத்தாரின் தடித்தகுரலும், சிரிப்பும் மாலுக்கு வெளியில முற்றத்தில் மிக அருகில் கேட்டது. வசந்தன் பரபரவென்று மீண்டும் தொங்கி படுக்கையறைப் பக்கம் சென்று பெட்டி யால் இறங்கினார். தேவர் ஏதோ மினக்கெடுத்து வதற்காக இனப்பிரச்சினை பற்றி ஒரு கதையைத் தொடக்கிவிட்டிருப்பார். சங்கரலிங்கத்தார் பிரச் சினையைத் தேவரோட சேர்த்துக்கொண்டுவந் திட்டார். வசந்தன் படுக்கையறைக்கு வெளியா லவர சங்கரலிங்கத்தார் விறாந்தையில ஏறினார்.

சுகராஜும் தேவரும் வசந்தை நோக்கினர். வசந்தன் கண்களால் சரி என்றான்.

ஓ எல்லாம்சரி பானையைத் திருப்பி வச்சாச்சு என்ற நிம்மதி எல்லோர் முகத்திலும் தோன்றியது. ஓ கொஞ்சநேரம் பட்டபாட்டை எண்ணிப்பார்க்க மனம் கூசியது.

சங்கரலிங்கத்தார் விறாந்தையால் சென்று சமையலறை வாசலுக்கு வந்தார். மாஸ்ரர் நான் உங்களுக்கு ஒண்டு சொல்ல மறந்துபோட்டன். நான் போனமுறை வந்துபோனபோது இந்த சமை யல்கட்டு அறையைப் பூட்டமறந்திட்டுப் போயிட் டன். அதனால என்ன? நீங்கள் இருக்கிறியள் தானே எண்டு விட்டுட்டுப்போட்டன் எனச் சொல் லியபடி சமையல் அறைக்கதவைத் தள்ளித் திறந் தார்.

O

# அஞ்சலி



பேராசிரியர் செல்லத்துரை – சிவஞானசுந்தரம்

*நந்தி*

மருத்துவப் பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந் தரம் எனவும், இலக்கியப் படைப்பாளி நந்தி என்றும் எல் லோராலும் அறியப்பட்ட பேரறிஞர் இவர். மருத்துவராக எம்மண்ணுக்கு இவர் ஆற்றிய பணி பன்முகப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் வழியாக பல துறைசார் நிபுணர்களை உருவாக்குவதில் இவரின் பங்கு அளப்பரியது. அதேபோல் ஈழத்துக் கலை, இலக்கி யப் பணிகளிலும் இவரின் பங்களிப்புக் கணிசமானது. சிறுகதையாசிரியராக, நாவலாசிரியராக, அரங்காற்று கைக் கலைஞனாக பல அவதாரங்கள் எடுத்து இவர் உயர்ந்து நின்றார். வெளிச்சத்தில் இவரின் பல படைப்புக் கள் வெளியாகியுள்ளன. அப்படைப்புக்கள் மூலம் சமூகத் தின் மீதான தன் அக்கறையையும், விரிப்பையும் அவர் இனங்காட்டியிருந்தார். ஒரு மருத்துவராகவும் இலக்கியப் படைப்பாளியாகவும் மட்டுமல்லாது சமூகத்தின் பல மட்டங்களுடனும் இவருக்கு நிறையத் தொடர்பிருந்தது. மக்கள் கூட்டத்துடன் இணைந்திருப்பதென்பதில் இவர் மிகவும் அக்கறை காட்டினார். அறிவுஜீவிகள் தனித்திருப் பார்கள் என்ற கருத்தை இல்லாதொழித்து தான் வாழ்ந்த சமூகத்துடன் முற்றாக இணைந்திருந்து பல பணிகளை இவர் முன்னெடுத்தார். ஈழத் தமிழ்மக்களின் இன்னல்க ளும், இழப்புக்களும், அடக்குமுறையாளர்களின் ஆதிக் கங்களும், அதற்கெதிரான விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாடும் இவரின் படைப்புக்களின் அடியாதாரமாயி ருந்தன. அன்னாரின் இழப்பில் துயருறும் குடும்பத்தின ருடனும், கலை,இலக்கியப் படைப்பாளிகளுடனும், மருத் துவச் சமூகத்துடனும், வெளிச்சம் இணைந்துகொள்கிறது.

வெளிச்சம்

## கவிதை

# ஒரு கலைஞனின் இழப்பில் இல்லாமற்போனவர் பலர்





❑ புதுவை இரத்தினதுரை

"சோக சோபித சொர்ணக் கவிக்குயில்"
பாடிப்பறந்தது.
அது இருந்து பாடிய மரங்கள் யாவும்
காற்றில் அசையாது உறைய
இலைகளில் வழிகிறது கண்ணீர்.
ஒவ்வொன்றாய் உதிர்ந்து சொரிய
இறுதியாய் இருந்தது ஒரு பூ
அதுவும் இல்லையென்றானது இன்று.
லோகிதாசனை எரிக்கவென இரந்து
மயானத்தரசனிடம் மண்டியிட்ட சந்திரமதியையும்
முழத்துண்டும்
காற்பணமுமில்லாது
வெறும் வாய்க்கரிசியுடன் தீயிட்டுத் திரும்பியாயிற்று.
இனிச் சந்திரமதியை எங்கு தேடுவது?
எவரில் காண்பது?
எமக்கென இருந்த அரங்கு வெறிச்சோட
யாருமற்றுப் போனது கோயில்வெளி.
சந்திரமதியும்
சாவித்திரியும்
அழகவல்லியும், ஆரியமாலாவும்
உயிர்ப்புற்றுலவிய உடலைத் தொலைத்தோம்.
மாயாவிந்தையென
பெண்புகுந்த ஆணாய் உலவிய கலைஞன்
கைதவறிப்போனான்.
பாமா விஜயத்தையும்
பக்த பிரகலாதனையும்
இனி எவர் ஆடுவது?
எவர் நாடுவது?
'சந்திரமதி இரத்தினம்'
ஆடியதைப் பார்த்துச் சிலிர்த்ததும்
அழுவதைப் பார்த்து அழுததும்
சின்னவயதின் சேமிப்பாய்க் கிடக்கிறது
இன்னும் நெஞ்சில்.
"யாரடி கள்ளி" யென்று
வைரமுத்தண்ணர் வந்து விரட்ட
இரத்தினமண்ணர் பாடத்தொடங்குவார்.
சோகம் தெளிக்கும் இராகம் பரவி

விழிகனத்துச் சொரியும் கண்ணீரால்
ஊர்கூடிய வயல்வெளி ஈரமாகும்.
அரியாலை இரத்தினம்
நல்ல நடிகன் மட்டுமல்ல
நல்ல மனிதனும்கூட.
எனக்கும் அவருக்குமான உறவு வலியது
அவர் கட்டிய வீடுகளின் அத்திவாரங்கள்போல.
காணும் பொழுதுகளில் கண்ணாற் சிரித்து
நெஞ்சாற் பேசி
என்னில் இறங்கிய கலைஞனிவன்.
“வா ஐயா” என்று வாஞ்சையுடன் அழைக்கும்
‘சந்திரமதி’யைச் சாவுக்குக்கொடுத்துத் தனியனானேன்.
இனியொருவர் இல்லையென்றாக
நாடகமேடையைத் திரைமூட இருள் கவிந்தது.
இரத்தினமண்ணர்
என்னே மனிதன்!
என்னே கலைஞன்!
என்னே அற்புதஅழகன்!
சந்திரமதி இரத்தினமென்ற
ஒற்றையொரு கலைஞனின் சாவில்
சந்திரமதி
சாவித்திரி
கண்ணகி
ஞானசௌந்தரி
நல்லதங்காள்
பவளக்கொடி
பாமா, ருக்மணியென
எத்தனைபேர் இல்லாமற்போய்விட்டனர்.
எத்தனைபேர் தனித்துக்கிடக்கிறோம்.
நிரப்பமுடியாத இடைவெளி வைத்துப்போனாய்
ஒருவரில்லை உன்னிடத்தை ஈடுசெய்ய.
விடைதந்தோம்
சாவுக்குப் பின்னும் வாழ்வாய் ‘சந்திரமதி’.
அரிச்சந்திரனைக் காண்பாய் அல்லவா?
சுகம் கேட்டதாய்ச் சொல்லவும்.
பிரிந்தோம் மீண்டும் சந்திப்போம்
சந்திக்க வேண்டும் அண்ணனே!
போய்வருக.

□□

# அஞ்சலி



சோக சோபித சொர்ணக் கவிக்குயில்
அரியாலை வி.கே.இரத்தினம்

அரியாலையைச் சேர்ந்த இசைநாடகக் கலைஞர் வி.கே.இரத்தினம் அவர்கள் எமது பண்பாட்டுக்கலைகளின் ஆணிவேராகி நிலத்தில் ஆழ நின்றவர். இரண்டு தசாப்தங்களின் முன்னான காலத்தில் தினசரி ஏதாவது ஒரு கிராமத்தில் இவரின் குரல் அரங்கிலிருந்து எழும். அதைக் காணவும் மெய்மறக்கவும் பல்லாயிரம் மக்கள் கூடியிருப்பர். விடியவிடிய இந்தச் ‘சந்திரமதி’யைக் காண்பதற்கு வண்டில்கட்டி வந்து விழித்திருக்கும் ஊர்கள். நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களை அரிச்சந்திரனாகவும், சோகசோபித சொர்ணக்கவிக்குயில் வி.கே. இரத்தினம் அவர்களைச் சந்திரமதியாகவும் மேடையில் கண்டு இந்தமண் மெய்சிலிர்த்த காலமொன்றிருந்தது. தன் பெண்பாத்திர நடிப்பாலும் இசையாலும் இவரைப் போல் மக்களை வசீகரித்த இன்னொரு கலைஞன் இதுவரை இல்லையென்றே கூறமுடியும். கலைக்காகவே தன் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்த இக்கலைஞனின் காலப்பதிவுகள் பின்வந்த புதிய தலைமுறைக்குச் சரியாகவே இன்னும் இனங்காட்டப்படாமலே இருக்கிறது. புகழ்பூத்த பெருங்கலைஞர்களின் இணைவாக ஒரு அரங்காடிகள் குழு ‘அரியாலை கலைமகள் நாடக சபா’ என்ற பெயரில் கொடிபோட்டிருந்தது ஒரு காலம். கலைப்பணியிலும், சமூகப்பணியிலும் இவர் ‘தான் கலந்து’ நின்றார். அற்புதமான இந்தக் கலைஞனின் இழப்பு எம் மண்ணுக்குப் பெரும் இழப்பாகிப்போனது. அன்னாரின் இழப்பில் துயருறும் அவரின் குடும்பத்தினருடனும் கலைஞர்களுடனும் வெளிச்சமும் இணைந்து கொள்கிறது.

வெளிச்சம்

மாமனிதர் டி.சிவராம்

# சில நினைவுப் பதிவுகள்

❑ தி.திருக்குமரன்

என்னோடு நீ கதைத்த இறுதி மணிநேரங்கள் இப்போதும் என் காதிற்குள் கேட்கிறது. வழமையாக கிழமைக்கு ஒரு முறையோ, இரு முறையோ தொடர்பு கொள்கின்ற நாம் 28.04.2005 வியாழக்கிழமை மட்டும் மூன்று தடவைகள் தொடர்புகொண்டோம். எப்ப இனி யாழ்ப்பாணப் பக்கம் என்று கேட்டபோது போக்குவரத்துச் செய்ய எனக்கிப்ப உடல் ஏலாதென்றும், நடக்கவே களைக்குதென்றும், உன் உடல் நலம் பற்றியே வழமைக்கு மாறாகப் பேசினாய். அந்தக் குரலோசை என் காதைவிட்டுப் போவதற்குள் இந்தா! பத்திரிகை ஒன்றின் முன்பக்கத்தில் நீ வழமையாக அணிகின்ற அந்த அரைக்கை சேட்டுடன் வாய் கட்டப்பட்டபடி மல்லாந்து போய்க்கிடக்கிறாய்.

"என்னோடு நீ கதைத்த இறுதி மணிநேரங்கள் இப்போதும் என் காதிற்குள் கேட்கிறது. வழமையாக கிழமைக்கு ஒருமுறையோ, இருமுறையோ தொடர்பு கொள்கின்ற நாம் 28.04.2005 வியாழக்கிழமை மட்டும் மூன்று தடவைகள் தொடர்புகொண்டோம். எப்ப இனி யாழ்ப்பாணப் பக்கம் என்று கேட்டபோது போக்குவரத்துச் செய்ய எனக்கிப்ப உடல் ஏலாதென்றும், நடக்கவே களைக்குதென்றும் உன் உடல் நலம் பற்றியே வழமைக்கு மாறாகப் பேசினாய்."



உனக்கிருக்கின்ற சர்வதேச, உயர்மட்டத் தொடர்புகள் பற்றியும், இராணுவ விடயங்களை உனக்கேயான மொழி நடையில் எழுதுவது பற்றியும் நான் சொல்லி ஒன்றும் தெரியவேண்டியதில்லை. இப்போது உலகெங்கும் பரந்திருக்கின்ற தமிழ் ஊடகவியலாளர்களிடையே, ஆங்கிலத்தையும் தமிழையும் ஒரே மாதிரியாகப் பேசத் தெரிந்த, அனைத்து மட்டத்தொடர்புகளையும் உடையவன். இப்போது இருக்கின்றவர்களில் நீ ஒருவன் மட்டுமே என் பதில் எவருக்குமே எந்த மாறுபாடும் கிடையாது.

மட்டக்களப்பில் கேட்கப்பட்ட பாகப்பிரிவினை மயக்கத்தால் உருவான புரிந்துணர்வற்ற 'குரற் சேர்வு' நீ உரியவனுக்கு பத்திரிகை ஊடாக எழுதிய கடிதத்தின் பின்னர்தான் நலிவடைந்தது. சிவராம் சொன்னால் அது சரியாகத்தான் இருக்கும் என்று அப்பிரதேச மக்கள் நம்பியதால்தான் எல்லாமே எளிதாக நடைபெற்றது என்பதை யாரும் இலகுவில் மறந்துவிடமுடியாது.

தவிரவும் சேது சமுத்திரத் திட்டத்தினை இந்திய அரசு அமுல்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு மாநாடொன்றினை நடாத்தும் பொருட்டு, நானும் என்னுடைய நண்பரான ஐங்கரநேசனும் வெள்ளைவத்தையில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் இரவுவேளையில் உன்னைச் சந்தித்தோம். சேது திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டால் ஏற்படும் கடற்பிராந்திய பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக கட்டுரை ஒன்றினை வாசிக்குமாறு உன்னைக் கேட்டோம். உடனே அதற்குச் சம்மதம் தெரிவித்ததுடன் அது தொடர்பில் பூகோள ரீதி

யில் எமக்கு ஏற்படும் ஆபத்துக்குறித்தும், அது நடைமுறைப்படுத்தப்பட்டால் உருவாகும் சர்வதேச அரசியல் வலைப்பின்னல் எம்முடைய இருப்பையும், கடற்படையின் நடமாட்டத்தினையும் எந்தளவிற்குப் பாதிக்கும் என்றும் அதனை நாம் எவ்வாறு கையாளவேண்டும் என்றும் நீசொல்லிய முறையினை அன்று விருந்து முடிந்து போகும்போது மட்டுமல்ல, நீ கடத்தப்பட்ட இரவன்றும், ஏன் இதனை எழுதும் போதும் கூட நானும் ஐங்கரநேசனும் பேசிக்கொள்கிறோம்.

சேது திட்டம் தொடர்பாக நடைபெறவுள்ள மாநாட்டில் இனி யார் கடல் பாதுகாப்புத் தொடர்பாகவும் அதன் பின்புல ஆழ ஊடுருவும் நிலை பற்றியும் பேசப்போகிறார்கள்?

எத்தனையோ பெறுமதியான தொடர்புகளையும் விடயங்களையும் வைத்திருந்த உன் தலையில் சுடுவதற்கு அவர்களுக்கு எவ்வாறு முடிந்தது நண்பனே....

சேது தொடர்பான உரையாடல் முடிந்து புறப்படும் வேளையில் நீ மிகவும் குழம்பிய மனநிலையில் இருந்தாய். எனக்குச் சாவு வந்துவிட்டதென்றும், எனக்கு ஏதும் நடந்தால் நீங்கள்தான் நான் தமிழ்ச் சமூகத்துக்குச் செய்தவற்றை உலகிற்குச் சொல்வதோடு மட்டுமல்லாமல் முன்னெடுத்தும் செல்லவேண்டும் என்றும் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாகப் பேனா பிடிக்கின்ற ஓர் இளைஞர் கட்டுரையாளர் படையை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாய்.

அத்துடன் இன்றுள்ள இளைஞர்கள் தனியே செய்தி கொடுப்பதோடு மட்டும் நின்றுவிட்டால் ஆயுள் வரைக்கும் ***By Line*** தான். நிறைய வாசிக்க வேண்டும். ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் மிகுந்த தெளிவுடன் பேசினாய். அந்தச் சந்திப்பு நடந்து இப்போது மூன்று நான்கு மாதங்கள் இருக்கும் என்று நினைக்கின்றேன்.

அப்போதுதான் தேசியத் தலைவர் உன்னைச் சந்தித்தமை தொடர்பாகவும், அறிவுறுத்தியமை குறித்தும் எமக்குக் கூறினாய். வேறென்னவெல்லாம் சொன்னார் என நாம் விடுத்துக்கேட்டபொழுது தமிழ்த் தேசியம் பற்றி ***Open***ஆக எழுதத் தொடங்கிவிட்டாய் இனி வெடிகிடி விழும் கவனமாய்த்திரி என அறிவுரை கூறினார் என்றும் உனக்கேயான மொழியில் கூறினாய்.

அதன் பின்பு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற புத்தக வெளியீடொன்றின் போது நிகழ்வு முடிந்து எல்லோரும் போகும் நேரத்தில் "பெடியள் மட்டும் என்னோட வாங்கோ கிழடுகள் வேண்டாம்" என்றபடி வெள்ளைவத்தையில் அமைந்துள்ள உணவு விடுதிக்கு எம்மை அழைத்துச் சென்றாய். இரண்டு மூன்றுமணிநேரம் தொடர்ந்த அந்த விருந்தில், ஓர் ஆசிரியன்போல பலவற்றை விபரித்தாய். கைதுடைக்கும் ரிசூவில், இந்தப் புத்தகத்தை எடுத்து வாசி, இந்த வெப் விலாசத்தில் இந்த விடயத்தைப் பார், என்று பல விடயங்களை நீயாகவே கைப்பட எழுதித்தந்தாய். சொந்தப் பெயரில்தான் கட்டுரை எழுத வேண்டும் என்றும், விடயம் உண்மையெனில் ஏன் புனைபெயர் சூடவேண்டும் என்றும் கூறினாய். பேராசிரியர் கா.சிவத்தம்பியையும் சொந்தப்பெயரில் எழுதும்படி பலமுறை நீ வற்புறுத்தியுள்ளதாகக் கூறினாய்.

கடத்தப்பட்ட செய்தி வந்ததிலிருந்து இந்த நிமிடம்வரை அரைமணிக்கொருமுறை உன்பற்றிய செய்தியும் யார் செய்திருப்பார்? எவ்வாறு மனம்வந்தது? இனியார் இப்படித் தரமாக எமக்காக எழுதுவார்கள்? என்றெல்லாம் பேசிக்கொள்கிறோம்.

கடந்த 29 ஆம் திகதி எனது அலுவலக வேலை தொடர்பாக, யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சின் முன்னைய செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோவைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் பேசும்போது எதார்த்தமாக சிவராம் கடந்தஇரவு கடத்தப்பட்டது பற்றிக் குறிப்பிட்டேன். மிகவும் பதற்றமடைந்த அவர் கூட்டத்தின் இடையே எழுந்து ஊடகவியலாளர் 'லசந்த' வுடன் தொலைபேசி மூலம் கதைத்துவிட்டு, கவலை தோய்ந்த முகத்துடன் சிவராம் சுடப்பட்டுவிட்டதாகவும், மேற்படி உயர்மட்ட ஆட்கடத்தல்களும், கொலைகளும் ஜனாதிபதிக்கோ இலங்கை அரச புலனாய்வுப் பிரிவிற்கோ தெரியாமல் நடக்க வாய்ப்பில்லை என்றும் கூறிய அவர் கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்க்கவேண்டும் -

இவ்வாறான 'ஆய்வறிவாளர்களை' எல்லாம் கொலை செய்வதானது, காலப்போக்கில் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது நாட்டினது பெறுமானத்தை மிகவும் பாதிக்கும் என்பதுடன் மடையர்களே நாட்டில் உலவும் நிலையையும் தோற்றுவிக்கும். அத்துடன் இக்கொலைக்கான எதிர்த்தாக்கத்தினை நாடு மிக விரைவில் அனுபவிக்கும் எனத் தெரிவித்த அவர் சிவராம் தனது மரியாதைக்குரிய நண்பர் என்றும் குறிப்பிட்டார்.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால் சிவராம் தான்வாழும் காலத்தில் சகல மட்டங்களுடனும் தன்னை மதிக்கத்தக்க தொடர்புகளைப் பேணியதோடல்லாமல் நல்லதொரு நண்பராகவும் விளங்கினார் என்பதாகும்.

அத்துடன் கடந்த சனிக்கிழமை பேராசிரியர் கா.சிவத்தம்பி வீட்டில் நான் இருக்கும்போது தொலைபேசியூடாக பேராசிரியரைத் தொடர்புகொண்டு முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றியும் அவர்கள் தமிழ்த்தேசியத்துக்கு இலக்கியப் படைப்புகள் ஊடாக என்ன செய்திருக்கிறார்கள் என்றும் வாதிட்ட சிவராம், பிம்பமா? விம்பமா? சரியான தமிழ் என்றும் வினவினார். நிறைந்த விளக்கங்களுடனும் சமாளிப்புக்களுடனும் பதிலளித்த பேராசிரியர் சிவராம் கதைத்துவிட்டு வைத்தவுடன் நான் சும்மா மேலோட்டமாகத்தான் சொன்னனான். அவன் என்ன வடிவாகவும் விளக்கமாகவும் எழுதுவான் பார் என்றார். அந்தக் கட்டுரையினை சிவராம் எழுதிவிட்டாரோ அல்லது இன்னும் பிரசுரமாகவில்லையோ தெரியவில்லை. உண்மையில் தன்னுடைய அரசியல் கட்டுரைகளில் தகவற் செறிவில் மட்டுமல்ல மொழி நேர்த்தியிலும் சிவராம் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார்.

பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதும் பொருட்டு சில முக்கியமான தகவல்களைச் சிவராமிடம் அன்றைய தினம் மதியவேளையின்போது வினவினேன். கடத்தப்படுவதற்கு ஓரிரு மணித்தியாலங்களின் முன் தனது கையடக்கத் தொலைபேசியிலிருந்து அழைத்த சிவராம் தான் இப்போது ஓரிடத்திற்கு நடந்து போய்க்கொண்டிருப்பதாகவும் விடயம் கிடைத்தவுடன் தானே அழைத்துச் சொல்வதாகவும் கூறினார்.

ஆனால் அதற்கிடையில் என்னென்னவோ எல்லாம் நடந்துவிட்டது சிவராம். மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் நடந்துகொள்ளும் நீ அன்றுமட்டும் ஏன் சற்று நிதானிக்காமல் விட்டாய்? உன்னுடைய சிந்தனை முழுவதும் அந்நேரத்தில் வந்த அழைப்புக்குப் பதிலளிப் பதிலேயே இருந்ததால்தான் அவர்களுக்குக் காரியம் இலகுவானது என்று நினைக்கிறேன். இறுதியாக எங்கிருந்து அழைப்பு வந்தது. அது உண்மையில் கவனத்தைத் திசைதிருப்பும் அழைப்புத்தானா? வெறுமனே ஒப்புவிக்கும் செய்திகளால் நிரம்பியிருந்த தமிழ் பத்திரிகை உலகம் உன்னுடைய கட்டுரைகளால் அல்லவா உயிர்பெற்றது! அதுவும் நேற்றோடு இல்லை என்றாயிற்று.

இனப்பிரச்சினைகளால் நாட்டைவிட்டோடிய 'தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கெதிரான' தமிழ்க்குழு உறுப்பினர்களைத் தேடிப் பிடித்து, ஒருங்கிணைத்து நடைபெறுகின்ற தற்போதைய உளவுப்போர்களையும், நகர்வுகளையும், நகர்த்துபவர்களையும், நகர்விடங்களின் அங்குலங்களையும், உன்னையன்றி யார்தான் இன்று தெளிவாக அறிவோம்? 'தமிழ்ப் பத்திரிகை உலகின் யுகப்பிரிகோடே' பொறுத்த நேரத்தில் உன்னை நாம் இழந்துவிட்டோம்.

மனச்சாந்திக்காக என்னுடைய கையடக்கத் தொலைபேசியை எடுத்துப்பார்க்கிறேன். அழைப்புகள் உள்வருகைக்கான பகுதியில் நீ என்னுடன் பேசிய நேரமும், திகதியும், தொலைபேசி இலக்கமும் இன்னமும் அழியாமல் அப்படியே கிடக்கிறது. ஆயினும், அதன் பின் உள்வந்த அழைப்புகளால் அது சற்றுக் கீழே போயுள்ளது. நாளாக நாளாக உள்வரும் அழைப்புகள் அதிகரிக்க தொலைபேசிப் பொறிமுறைக்கேற்ப அந்த 'ஆதார நினைவும்' அழிந்து போய்விடும் என்று தொலைபேசியோடு பிறந்து வளர்ந்தவர்கள் கூறுகிறார்கள்.

எது எவ்வாறு மறையினும், என் நினைவு தப்பாதவரை உன்னுடன் நான் பழகிய காலங்களும், பேசிய தனிப்பட்ட விடயங்களும், பகிர்ந்த ஆறுதல்களும், புரிந்த ஆளுமைகளும் என்றுமே என்னைவிட்டு அகலாது- சிவராம்.

ஓர் இனம் தன்னுடைய விடுதலைக்காகப் போராடிய முக்கியமான காலகட்டத்தில் அதன் தூண்களாய் இருந்தவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்கின்ற திருப்தியும், நினைவும் மிகப்பெரிது.



# பலி

தாட்சாயணி

“வெறும் றோசாப்பூப்படம் போட்ட கொப்பி..... இதுக்கு ஏன் இத்தினை சண்டை....?”

அம்மாவுக்கு இப்படித்தான் சொல்லத்தெரியும். அம்மாவுக்கு வேறு என்னதான் தெரியும் சமைப்பதைத் தவிர.

இந்தக்கொப்பியை வகுப்புக்குக் கொண்டுபோனால் எத்தனை பேருக்கு ‘எடுப்பு’க் காட்டலாம். இந்த றோசாப் பூப்படம் போட்ட கொப்பியை வைத்துக்கொண்டுதானே அன்றைக்கு குமார் அவ்வளவு ஆட்டம் போட்டான். இதை இவன் நாளைக்குக் கொண்டுபோய்க் காட்டாவிட்டால் தலையே வெடித்துவிடும் போலிருந்தது. அதனால்தான் அடுத்த வருடத்துக்குத் தேவையான கொப்பிகளை அடுக்கடுக்காய் அப்பா வாங்கிவந்தவுடன் அதற்குள் நடுநாயகமாய் ஜொலித்த இந்த றோசாப்பூக் கொப்பியை எடுத்து படக்கென்று “இது எனக்கு” என்றான்.

அவன் சொன்ன விதத்தில் எல்லாம் பிழைத்துப் போயிற்று. இவன் சொன்ன விதத்தைப் பார்த்தவுடன் அதில் ஏதோ விஷயமிருப்பதாக உஷாவின் சின்ன மூளை கிரகித்துக்கொண்டது.

“எனக்கும் அதுதான் வேணும்..” அவள் வில்லங்கத்திற்கு நிற்பவள்போல் நின்றாள்.

“உஷா அச்சாக்குட்டியெல்லே எனக்கு இதைத் தந்திடவேணும், அடுத்தமுறை இப்பிடி வந்தால் உனக்குத்தான் தருவன்”

“இல்லை இது எனக்குத்தான்...”

உஷா பேய்க்கூத்து ஆடத்தொடங்கினாள். உஷா கத்தத்தொடங்கினால் அதிலிருந்து மீள்வது பெருங்கஷ்டம்.

"நீதானை பெரியவன். விட்டுக்குடனப்பு. அதென்னத்துக்கு உனக்கு றோசாப்பூப்படம் - பெடியன் உனக்கு கார்ப்படம்போட்ட கொப்பி தானை நல்லம்..."

அம்மாவின் குரல் சமாதானம் பேசியது. இவனது மனது சமாதானமாகவில்லை. குமாரது கர்வத்தை ஒடுக்கிவிடவேண்டும். அதற்கு இதைவிட்டால் வேறு சந்தர்ப்பமும் கிடைக்கப் போவதில்லை. அதை இந்த மாய்மாலக்காறி உஷா புரிந்துகொண்டால் தானே.



"அம்மா இனிப்பு வாங்கத் தந்த காசை உனக்குத் தருவன் உஷா..."

"எனக்கு வேண்டாம் இனிப்பு..."

"தோடம்பழ இனிப்பு வாங்கித் தாறனடி..."

"எவ்வளவு..?" கண்களை நிமிர்த்திக் கேட்டாள்.

"அஞ்சு..."

"ம்.. ஹூம்..."

"பத்து..."

"எனக்கு.... நூ...று.... வேணும் தருவியோ..?"

அவன் கண்களில் லேசாய்ச் சிரிப்பு.

"போடி உனக்கு உவ்வளவு தாறதைவிட நான் புதுக்கொப்பி வாங்கிப்போடுவன்"

அவன் ஆத்திரமாய் அவளை உறுத்தான்.

எவ்வளவு தூரம் அவளை வசியப்படுத்த முனைந்தாலும் அவள் அதற்கு வளைந்து கொடுக்கவில்லை. அவன் ஆசை காட்டக் காட்ட அந்தப் பூப்போட்ட கொப்பியின் மதிப்பு அவள் மனதில் இன்னும் இன்னுமாய்ப் பெருக அதை நெஞ்சோடு சேர்த்துக் கட்டிக்கொண்டாள் உஷா.

"இது என்ரை கொப்பி. நான் தரமாட்டன்..." என்றவள் கண்களில் சிரிப்போடு சொன்னாள்,

"அம்மா இனிப்பு வாங்க எனக்குத் தாற காசை நான் தாறன். நீ இனிப்பு வாங்கிச் சாப்பிடு அண்ணா என்ன... அஞ்சோ... பத்தோ வேணும்...?"

பெரிய மனுஷித் தோரணையில் அவள் பேச அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இழுத்துப் பறித்துக் கொப்பியைக் கொண்டோடி விடலாம். பிறகு அவளைச் சமாளிப்பது பெரிய காரியமாகிவிடும். அம்மா நாள் முழுவதும் அவனையே திட்டித் தீர்த்துக் கொண்டிருப்பாள். இவன் ஆத்திரமாய் அவளைத் திட்டித் தீர்த்துவிட்டு எழுந்துபோனான். அவளை என்ன செய்தாலும் தகும்போறப்பட்டது.

மாலையில் திரும்பவும் சண்டை வந்து விட்டது. சண்டை என்னவோ சின்னதுதான். என்றாலும் அம்மா எப்போதும் உஷா பக்கமே நிற்பது இவனுக்கு ஆத்திரத்தைத் தந்தது. அப்பா வரட்டும் நியாயம் கேட்கவேண்டும்.

அவன்தானே முதலில் அந்தக் கொப்பியை எடுத்தான். எடுத்தவுடன் அவளுக்கு அதன் மேல் ஆசை வந்துவிட்டது. இனிமேல் எது தனக்குப் பிடிக்கவில்லையோ அதைத்தான் தேடி எடுக்கவேண்டும். அப்போதுதானே அவள் அதை நல்லதென எண்ணி எடுத்துக்கொள்வாள்.

அப்பா வந்தபோது அப்பாவின் களைப்

புக்கிடையில் இவர்கள் சொல்வதைக் கேட்கும் அவகாசம் அவருக்கு இருக்கவில்லை. நாளை இதேபோல இன்னொரு கொப்பி வாங்கித் தருவதாகச் சொன்னவர் ஒருவிதமாய் அந்தச் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்த திருப்தி யில் அப்பால் போய்விட்டார். இவன் ஆசை தீரப் புதுக்கொப்பிகளை எடுத்து முகர்ந்து வாசம் பார்த்தான். வாசம் தீர்ந்து போகப் போக அவன் அந்தப் பூப்போட்ட கொப்பி யைத் தரும்படி ஆசையோடு கேட்டான்.

"போடா உன்ரை கொப்பிலை எல்லாம் வாசம் போட்டுது... என்ரையைப் புத்தம் புதுசா வைச்சிருக்கிறன்.. அதையும் பழசாக்கப் போறியோ..."

உஷா எல்லாவற்றையும் பொத்தி எடுத்துக்கொண்டாள்.

"புதுக்கொப்பி வரட்டுக்கும் நான் அவ வுக்கு எடுப்புக்காட்டுறன்."

இவன் பற்களை நெறுமியபடி மறுநாளுக் காகக் காத்திருந்தான்.

அடுத்தநாள் அவள் எல்லாம் மறந்தது போல அருகில் வந்தாள். அந்த அதிகாலைப் பொழுது எவ்வளவு அமைதியாக இருந்தது. எவ்வளவு குளுமையாக அவள் அவனோடு கதைக்க விரும்பினாள்.

"அண்ணா, என்ரை கொப்பிலை பேர் வடிவா எழுதித்தா அண்ணா" சின்னத் தயக் கத்தோடு நேற்றைய சண்டையை மறக்க விரும்பிய முகபாவத்தோடு நின்றாள்.

இவனுக்குள் கோபம் குமுறியது. நேர காலம் தெரியாமல் ஏன் அப்படி அவனுக்குக் கோபம் வந்ததோ...?

நேற்று முழுக்க அடம்பிடிச்சு ஆக்கினை பண்ணீற்று இப்ப ஒண்டும் தெரியாத பாப்பா மாதிரி வாறா..

"போ... நான் எழுதித்தரன்..."

கோபமாய் விசிறினான்.

கொப்பி விழுந்த வேகத்தில் அவள் அமைதி தணிந்து கோபம் எகிறியது.

"போடா சனியன்..." திட்டியவாறே கொப் பியை நோக்கி ஓடினாள் உஷா.

குபீரென்று வெளியே ஒரு இரைச்சல் உஷாவின் குரலையும் மீறிக் கேட்டது. அவனிடம் திடீரென்று ஆச்சரியத்துடனான பீதி பரவிற்று. வயிறு கலங்கினாற் போலி ருந்தது. வெளியேயிருந்து உஷாவின் குரல் ஒரு அவலத்தோடு மேலெழும்பிற்று. இவன் யன்னலால் வெளியே பார்க்கையில் பெரிதாய் பேரலை ஒன்று உறுமிக்கொண்டு வந்தது.



"உள்ளுக்கு வா உஷா..." இவன் கத்திய கத்தலுக்குப் பதி லாக "ஐயோ என்ரை றோசாப் பூக் கொப்பி" என்ற அவலக் குரலே அவனுக் குப் பதிலாகக் கிடைத்தது.

அலை இழுத்த கொப் பியின் பின்னால் ஓடிய உஷாவை அடுத்த அலை கௌவி இழுத்துப்போனது. அலையில் அள் ளுண்டு அந்த றோசாப்பூப் படம்போட்ட கொப் பியோடு உஷா மல்லாடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"உஷா, கொப்பியும் வேண்டாம், ஒண் டும் வேண்டாம் உஷா... நீமட்டும் வந்திடு உஷா...."

அவனது குரல் கடலோரப் பிராந்தியம்

எங்கும் அவலமாய் ஒலித்தபடியிருந்தது. ஆனால், உஷா மட்டும் திரும்பிவரவில்லை. சிலநாட்களின் பின் அந்தக் கொப்பியின் றோசாப்பூ அட்டை மட்டும் கரையோரமாய் நசுங்கிக் கிடந்தது.

♦ ♦ ♦

உஷாவைக் கொண்டுபோன அந்த அலைக்கு 'சுனாமி' என்று பெயராம். இது வரை ஒரு காலமுமே அப்படி ஒரு பேரலை ஊரைத் தாக்கியதில்லையாம். இவனது காது பட எல்லாரும் இப்படித்தான் பேசிக்கொள் கிறார்கள். அவனோ அகதிமுகாம் மூலைக் குள் ஒடுங்கிக் கிடக்கிறான். அவன் ஒரு மூலைக்குள். அம்மா ஒரு மூலைக்குள். அப் பாவோ வயிற்றுப்பாட்டைக் கவனிக்க ஏதா வது செய்தாகவேண்டுமென்று வெளியே போய்வருகிறார். குமார்கூட அந்த அலைக்குள் அகப்பட்டுவிட்டதாய்ச் சொல்கிறார்கள். அவனுக்கு இப்போது குமாரைப் பார்க்கவேண் டும் போலிருந்தது. அவனோடு பேசவேண்டும் போலிருந்தது. ஆசைஆசையாகக் கொப்பி யில் பெயர் எழுதித்தரச்சொன்னாளே உஷா. அவளோடு விளையாடவேண்டும் போலிருந் தது. இனி எதுவுமே முடியாது. இருவருமே இல்லை. அந்த றோசாப்பூப் போட்ட கொப்பி. அதுவா முக்கியம். அது எதற்கு வேண்டும்... இனி. எல்லாமே போய்விட்ட பிறகு. மிகமிகச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் ஆசைப்பட்டு விட்டதுபோல மிகக் கேவலமாயிருந்தது அவ னுக்கு. கேவிக்கேவி அழத்தொடங்கினான்.

"எனக்கு ஒண்டும் வேண்டாம்... ஒண்டும் வேண்டாம். எங்கையாவது மரக்கட்டையைப் பிடிச்சுக்கொண்டாவது வந்திடு உஷா... வந்திடு குமார்..."

அவனது விம்மல் பேரலைகளாய்ப் பெருக்கெடுத்து அந்த முகாமின் சுவர்களில் எதிரொலித்தது.

## பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

### கவிதைகள்



எழுதியவர்: கவிஞர் புதுவை இரத்தினதுரை

புதுவை தன் கவிதைகளில் பாடுபொருள் பற்றிய முழுத்தோற்றத்தையும், காட்சி அமைப்புக்குள் நிற் பனவாகிய மிகமிகச் சிறிய விடயங்களையும் சேர்த் துக்கொள்வது ஒரு நல்ல ஓவியன் பின்புல வர்ணத் தின்மீது கைலாவகத்தினால் அழுத்தியும், மெலி வித்தும் காட்டும் தன்மைபோல் அமைவதை உண ரலாம். இத்தொகுப்புக்கான தலையங்கமே அந்த மனப்பாங்கின் வெளிப்பாடுதான். புதுவையின் கருத்துநிலைத் துணிவும், கவித்துவ ஆளுமையும் அவரை இன்றைய சராசரி தமிழ் மனிதனின் குர லாகவும், அதிலும்பார்க்க முக்கியமாக அவனுக்கான கவிதைக் குரலாகவும் வைத்திருப்பதைக் காண லாம்.

நூலின் முன்னுரையில்
பேராசிரியர் கா.சிவத்தம்பி

வெளியீடு: நங்கூரம் பதிப்பகம்
பதிவுகாரர் ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
பக்கங்கள்: 432
விலை: ரூபா 550.00
கிடைக்கும் இடம்: விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழக யாழ்.மாவட்டச் செயலகம்.
தொலைபேசி இல.: 021 222 3897

## நைஜீரிய நாட்டுக் கவிதை

# பூம்பனிகள் மென்மையாய் வீழ்கின்றன.

எழுதியவர்: கபிரியல் ஒக்காரா
தமிழில் : வின்சென்ற் புளோறன்ஸ்



வானத்தினுடைய
கலங்கியிருந்த கண்களிலிருந்து
பூமியைத் தேடி
பூம்பனிகள்
மென்மையாக வீழ்கின்றன;
பனிக்காலக் களைப்பில்
தள்ளாடி நின்ற
எல்ம் மரங்கள் மீது
மெதுமெதுவாய் படிகின்றன.
சாவே இல்லாத பூமிமீது
வெள்ளை நிறம்
சாவீட்டு ஆடையாய்
மெதுவாய் மெதுவாய்
போர்த்தப் படுகையிலே
பனிக்காலத்தின் உபயத்தில்
ஆடைகளை இழந்துவிட்டு
அம்மணமாய் நின்ற
கிளைகள் மீது
பாரமே இல்லாத
மென்பனிகள்
படிந்து பாரிக்க
துன்பத்தில் துவளும்
இழவு காப்போராய்
அவை
மெது மெதுவாய்
வில்லென வளைகின்றன.
கணப்பிலிருந்து
கரவாய் எழுந்து வந்த
கனத்த தூக்கமொன்று
நீர்ப் பரப்பின் மேல்
மென் பஞ்சிழைகள்
வந்து படியும்
ஊறுணர்வு சேர
என் விழிகளை
அணைத்துக்கொள்கிறது.
ஆழ் தூக்கத்தினூடே
ஒரு கனவு.
பூமி சாவடைய
எல்ம் மரங்கள்
இழவு காக்கும்
கனவல்ல அது.
பறவைகளைக்
கனவு கண்டேன்.
கறுப்புப் பறவைகள்
எனக்குள்ளே
பறந்து வரக் கண்டேன்
சூரியன்களைப்
பழங்களாய் ஏந்திய..
வேரோடு பிடுங்கிகளின்
கருவிகளில்
துளைபோடும்
வேர்களைக் கொண்ட....
தென்னைகளிலே
கூடுகட்டிக் குஞ்சு பொரித்தன.
களைத்துப் போய்
நொண்டிக் கொண்டே
வேரோடு பிடுங்கிகள்
வந்தனர்.
எனது வேர்களிலே....
அவர்கள் கைவிட்ட
வேர்களிலே
சாய்ந்து கொண்டனர்.
அவர்கள் ஒவ்வொருவருக்கும்
ஒவ்வொரு சூரியனைத்
தென்னை கொடுத்தது.
தங்களின் தென்னைகளில்
கண்ணைக் கூசவைத்த
அவ்வொளிக் கோளங்களை
நாட்டினர்.
தங்கத்து ஒளிர்வை
சூரியன்கள் காட்டாததில்
பள்ளங்கள் விழ
புருவங்கள் நெரித்தனர்.
முகத்தைச் சுளித்தனர்.
நான் விழித்துக் கொண்டேன்
அந்த வேளையில்
ஓசையில்லாமல்
மென்பனி வீழ்ந்து கொண்டிருந்தது.
மாலைப் பிரார்த்தனையில்
வெண் அங்கி அணிந்த
முஸ்லிம்கள்
குனிந்து வளைவதாய்
முதுகு வளைத்த
எல்ம் மரங்கள்
குளிர்காலத்துக் காற்றில்
தள்ளாடி நின்றன.
ஆலயத்துறை தெய்வத்தின்
முகம் போலவே
புரியாத புதிராய்
பூமி பரந்திருந்தது.



# காற்று

❑ க.சந்திரா

காற்றில்லாமல் வாழ்வா
காற்று வரும்
ஆழியின் வழியால்
அவை நரம்புகளை இசைத்துக்கொண்டு,
பூக்களை அணைத்திருக்கும்
சோலையின் வழியால்
சுகந்தத்தைத் தழுவியேந்திக் கொண்டு,
வானத்தின் விந்தையை வியந்து கொண்டு,
பாடும் பறவைகளின்
குதுகலங்களைக் கூவியணைத்துக்கொண்டு
காற்று வரும்.

அது
சுகமாக இருந்தது.
சுவாசம் இதமாக இருந்தது.
ஓங்காரம் ரீங்காரித்தது...
பாலை வெளியிலும் நாதமிசைத்தது.

காற்று,
யன்னலை அடிச்சுச் சாத்தவில்லை.
யாழினை முறிக்கவில்லை.
வாசல் வழியால்
இனமாய் வந்தது...
இன்னிசை வேதமாய்க் கலந்தது.
கை கோர்த்தது....
களித்தது.
வாழ்வு இனித்தது.

இப்போது...
காற்றின் போக்கில்
ஏதோ...
கடினம் ஏறிற்று.
தென்றலின் இனிமையை அழித்துவிட்டு
தேசத்தில்
துரவுக்குள்...
காற்றுக் கறுப்பு...
மெல்ல மெல்லப் புகுந்து
வல்லின மாயிற்று.
சுவாசிக்க இயலாது மூச்சு முட்டிற்று.

காற்றின் நுழைவில் கறுப்புக் கரவு
அத்துமீறல்
அத்துமீறிய அதன் வல்லினக் கைகள்
ஊருக்குள்.
உள்மனைக்குள்நுழைந்து
ஊர்ப் பெண்ணை நிர்வாணமாக்கியது.
நார் நாராய்க் கிழித்துப் போட்டது.
பச்சை மரங்களில் தொங்கிய
நறும்பழங்கள் தொலைந்தன.
காய்கள் பிஞ்சுகள் அரும்புகள் எல்லாம்
பச்சையாய்...
குருத்துக் கக்கியவை எல்லாம்
பச்சையாய்...
அறுத்துக் கொட்டியது.

குடியிருந்த வீட்டுக் கூரையைப் பிய்த்தது
படித்த புத்தகத்தைப்
பறித்துக் கிழித்தது.
புசிக்கும் உணவில்
நாற்றத்தை வீசியது
காதல் புரிந்த தேசத்தில்
காற்றுக் கறுப்பில் புலைநெடில்
காற்றின் வல்லினக் கைகள் வீசிய
ஈனப் புழுதியில்
கண்கள் இருண்டன.
ஆயினும்,
இருட்டினுள்ளும் எம் கண்கள்
எதையோ தேடுகின்றன.
இன்னும்.









# தூரிகையால் மனிதம் வரையும் புகழேந்தி



"என்னைப் பொறுத்தவரையில் ஒருபடைப் பாளனுக்குச் சுதந்திரம் இருக்கிறதென நான் கருதுகிறேன். அந்தச் சுதந்திரத்தைத் தடுப்ப தற்கு நான் என்றும் அனுமதிக்கமாட்டேன். இந்த ஓவியங்களை ஈழத்தில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் வைத்துள்ளேன். தமிழ் நாட்டில் மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. இன்று மட்டு மல்ல 1983இல் இருந்து 2003 வரை வரையப் பட்ட ஓவியங்கள் அனைத்துமே காட்சிப்படுத் தியிருக்கிறேன். அதுமட்டுமல்ல ஒரு படைப் புக்கான அங்கீகாரம் நிச்சயமாக இருக்கிறது. எந்தப் படைப்பையும் யாரும் நிச்சயமாக வெளிப்படுத்துவதைத் தடுக்கமுடியாது. யாருடைய வாயையும் பூட்டுப்போடமுடியாது. குறிப்பிட்ட காலம்வரைக்கும் தடுத்துவைக்க லாம். ஆனால், தடுக்கத் தடுக்க அழுத்தம் அதிகமாகி ஒருநாள் வெடிக்கும். தமிழ்நாட்டில் மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள் எனப் பல்வேறு இடங்களில் இவை கண்காட்சியாக வைக்கப்பட்டிருக்கிறது. நான் ஈழத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. உலகத்தில் நடை பெறுகின்ற அத்தனை வகையான ஒடுக்கு

முறைகளையும் எதிர்க்கவும் நாம் எல்லாவித மான மனித விடுதலையை ஆதரிக்கின்றோம். உலகத்தில் அடக்கப்படக்கூடிய அத்தனை மக்களும் விடுதலை பெறவேண்டும் என்று நாம் குரல் கொடுக்கிறோம். நிறவெறியாளர்களை, மதவெறியாளர்களை, மொழி வெறியாளர்களை இப்படி எல்லாவற்றையும் எதிர்க்கிறோம். எதிர்க்கும்போதுதான் கூடுதல் பலம் உருவாகும். நமக்கென்று ஒரு அரசியல் உண்டு. அந்த அரசியலில் உள்ள ஆழம், அழுத்தம் இதெல்லாம் எமக்குப் பக்கபலமாக இருக்கிறது. பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவையெல்லாம் எனது ஓவியத்துக்குத் துணைபுரிகின்றன. ஒரு படைப்பை மிக எளிதாக முடக்கிவிடவேண்டும் என நினைத்தால் அது முடியாது. அதற்குள் முடங்குபவன் நானல்ல. என்னை முடக்கிவிட முடியும் என்று நான் நம்பவில்லை. இன்றைய ஓவியக் கண்காட்சியை உலகம்பூராக நடத்துகின்றோம். நான் இலங்கைக்கு வந்து ஓவியக் கண்காட்சி நடத்துவது எல்லோருக்கும் தெரியும். ஆக ஒரு படைப்பை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதற்கு ஒரு தடையும் இருக்கமுடியாது. அது வெளிப்படையாக இருக்கவேண்டும். அந்தப் படைப்பில் உண்மை, நேர்மை இருக்கிறது. இந்த உண்மையும் நேர்மையும் என்னை வழிப்படுத்துகின்றது."

தமிழகத்து ஓவியர் புகழேந்தியின்
நேர்காணலில் இருந்து

தமிழகத்து ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி தமிழீழ நிலப்பரப்பெங்கும் நடைபெற்று வருகிறது. மனிதனென்ற வகையிலும், தமிழனென்ற வகையிலும், விடுதலைமீது பெரு விருப்புக்கொண்ட கலைஞன் என்ற வகையிலும் இவரின் ஓவியங்கள் புதிய எல்லைகளைத் தொட்டுநிற்கின்றன. எமது விடுதலைப் போராட்டத்துக்கு நெருக்கமாக நின்று வலுச்சேர்க்கிறது. உள்ளே விடுதலை நெருப்பெரியும் ஒரு கலைஞனின் அகமறியக்கூடியதாக இவரின் ஓவியங்கள் எமக்கு பல செய்திகளைச் சொல்லிப் போகின்றன. ஓவியர் புகழேந்தியின் மானுட நேயத்துக்கு எமது வாழ்த்துக்கள்.

வெளிச்சம்










1995ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் இறுதிப் பத்து நாட்கள் நெருங்கிவிட்டது. தமிழர்களின் கலாச்சாரத்தொட்டிலைச் சிதைக்கும் முயற்சியில் மூர்க்கமுடன் எதிரி ஈடுபட்டுள்ளான். இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக ஐதீகங்களினால் உருவேற்றப்பட்டவர்கள் இப்பொழுது சிங்கள இராணுவ இயந்திரமாக உருமாற்றப்பட்டுள்ளார்கள். தமிழர்களின் ஆன்மாவை உலுப்பும் செயலுக்கு முடிசூட முயன்றுகொண்டிருக்கின்றார்கள். அதற்காக ஆயிரம் வருடமாய் தமிழ்ப் பாயிரங்களில் மட்டும் பார்த்த நேரிய வீரத்தை தன்செயலில் காட்டிடும் தேசியத் தலைவரின் பிறந்த தினத்திலோ அன்றி மறுநாள் உதிக்கும் மாவீரர் தினத்திலோ யாழ் நகரில் சிங்கக்கொடி ஏற்றிவிடத் துடிக்கின்றான். இதனால் யாழ்.மண்ணே இடிவிழுந்த சுடுகாடானது. பல இலட்சம் மக்கள் சில நாட்களில் இடம்பெயர்ந்துவிட்டனர். சில நூறு புலிவீரர்கள் மட்டும் அடிபட்ட வேங்கையின் மூர்க்கம்கொண்டு பகையுடன் மோதுகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் விடுபட்ட பிணமொன்றைப் பல நாய்கள் பங்குபோடுகின்றன. இன்னும் சில நாய்கள் வெள்ளாட்டுக் குட்டியொன்றைக் கடித்துக் குதறுகின்றன. எறிகணை, விமானக் குண்டுவீச்சுகளினால் கட்டடங்கள் இடிந்து, சரிந்து, வீழ்ந்து நொருங்குகின்றன. வெடிமருந்தின் நெடியும் ஆங்காங்கே காட்டுப் பன்றிகள்போல் இறந்து ஊதிப் பருத்துக் கிடக்கும் நாய்களில் இருந்து வீசும் துர்நாற்றமும், சிதைந்த மரங்களின் பதுமை மணமும், சிந்தப்பட்ட மானிட இரத்த வாடையும் என எல்லாம் சேர்ந்து யுத்தமேட்டு மணமொன்றைப் பிரசவிக்கின்றன. அண்ணளவாக 1 கிலோ மீற்றர் தூரமளவில் எதிரி சூழந்துவிட்டான். தென்மராட்சிக்கான தரைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. மண்டைதீவில் நிற்கும் எதிரியின் கழுகுப் பார்வையும் யாழ்.நீரேரியைக் கண்காணித்துக்கொண்டுள்ளது. யுத்தத்தின் போக்கு நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்திவிட்டது.

உள்நிற்கும் மருத்துவ அணிப் பொறுப்பாளரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றது. "இன்று



தூயவன்

இரவு பாதை உடைப்பதற்கான சண்டை நடக்கப் போகின்றது. வாழ்வா சாவா என்னும் கடைசி முயற்சி இது. இதில் வெண்டால் காயக்காரரை சாவகச்சேரி அனுப்பலாம். எல்லாரும் தயாரா இருங்கள்" போர்மேகம் சூழ்ந்த வானில் ஓர் விடிவெள்ளியாக அக்கூற்றுகள் அமைந்திருந்தன. ஆனால், நடந்ததோ தலைகீழானது, விபரீதமானது. சண்டைக்கு அணிகள் நகர்ந்துகொண்டிருக்கையில் மிதிவெடியொன்று மிதிக்கப்பட்டுவிட்டது. வெற்றி உற்சாகத்திலிருந்த எதிரி முந்திவிட்டான். சண்டையில் முந்துபவன் வெல்வான் எனும் தத்துவத்தை எதிரியே சரியாகப் பயன்படுத்தினான். விளைவு பலர் வீரச்சாவடைந்தனர். நூற்றுநாற்பதிற்கு மேலாக காயக்காரர்கள் குவிந்தனர். இறுதி நம்பிக்கையும் தளர்ந்துவிட்டது. இப்பொழுது செய்யப்படுவதற்கு எதுவுமில்லை ஒன்றைத்தவிர. பேரினவாதம் நவம்பர் 26ஆம் 27ஆம் திகதிகளில் யாழ்.கச்சேரியில் கொடியேற்றுவதைதத்தடுப்பது.

அனைவரும் பொறுப்பாளரினால் அறிவுறுத்தப்படுகின்றனர். "இங்கு நிற்பவர்கள் எல்லோரும் கரும்புலிகள் போன்று செயற்படவேண்டும். சப்ளை வராது, தனிச்சண்டை பிடிக்கவேண்டி வரும், உங்கள் பாதுகாப்பிற்கு நீங்கள்தான் பொறுப்பு. முடிந்தளவு காயக்காரரைப் பாதுகாப்போம். இரவில் மட்டும் அவர்களை வெளியேற்ற முயற்சிக்கலாம்" ஒரு கிழமைக்கு மேலாக கஞ்சி மட்டும் குடித்தவர்கள் முகத்தில் கவலை படர்ந்தது. ஒருவன் முணுமுணுப்பது கேட்கிறது. "சாகிறதுக்கு முதல் ருசியாக ஏதாவது சாப்பிட வேணும்." அப்பொழுது ஒருவன் அருகில் இருந்த வீடு ஒன்றினுள் செல்கின்றான். அவன் கழுத்துப் பட்டி கட்டப்பட்ட ஆட்டுக்கடா ஒன்றை இழுத்து வந்தான். "மச்சான்! செல்லடிக்குள்ளேயும் ஒரு கிழமையாகக் குழை போட்டு வாறன்." அவன் சொல்லிமுடிக்கவும் எறிகணைகள் கூவிவரவும் அனைவரும் பதுங்கு குழிகளினுள் நிலையெடுக்கவும் சரியாக இருந்தது. எறிகணைச் சிதறல் பட்டு அந்த ஆடும் இறந்து கிடந்தது.



ஸ்ரான்லிக் கல்லூரிப் பக்கம் காயங்கள் சேர்ந்துவிட்டன. போர்க்களச் சாரதி ஒருவன் துப்பாக்கியுடன் கோடரியையும் எடுத்துப் புறப்படுகின்றான். வீதியில் விழுந்து கிடக்கும் மரங்களை வெட்டி அகற்றினாற்தான் வேகமாகத் திரும்பிவர முடியும். போன பிக்கப் வேகமாகத் திரும்பி வருகின்றது. காயக்காரர்களுடன் வித்துடல்களும் அள்ளிப் போடப்பட்டிருந்தன. தலைகளும் கைகால்களும் குறுக்குமறுக்காகத் தொங்கிக்கொண்டிருந்தன. கள மருத்துவர்கள் அவர்கள் தூக்கி எறியப்படாமல் பிடித்துக்கொண்டு நின்றனர். வாகனம் குறுக்காகக் கிடக்கும் மரங்களையும் மின்கம்பங்களையும் அலட்சியம் செய்த வண்ணம் எகிறிப் பாய்ந்துபாய்ந்து வந்து சேர்ந்தது. மாடிக்கட்டடம் ஒன்றின் கீழ்த் தளத்தினுள் காயமுற்றவர்களுக்கு அவசர உயிர் காப்புச் சிகிச்சை மட்டும் செய்யப்படுகின்றது. அந்நேரம் இன்னொரு வாகனமும் அவ்விடம் நோக்கி விரைவாக வருகின்றது. அதனைத் துரத்துவதுபோல் எறிகணைகள் தொடராக வீழ்ந்து வெடிக்கின்றன. அதில் ஒன்று வாகனத்தின் பின் பகுதியில் பட்டு வெடித்துச் சிதறுகின்றது. எனினும் வாகனம் இவர்களிடம் வந்து நிற்கின்றது. அதிலிருந்து சாரதி முகத்தில் உணர்வுகள் எதனையும் வெளிக்காட்டாமல் இறங்குகின்றான். "இதுக்கு மிஞ்சி என்னால ஒண்டும் செய்ய ஏலாது" கூறிய வண்ணம் பின்பக்கம் போகின்றான். ஏனையவர்களும் ஓடிப் போகின்றனர். விழுப்புண்ணேற்று வந்திருந்தவர்களின் உடல்கள் சிதைந்து உயிர்கள் பிரிந்திருந்தன. போரின் அகோர நிகழ்வுகள் வாழ்வின் சாதாரண சம்பவங்களாகிவிட்டிருந்தன.

சமகாலத்தில் எதிரி உளவியல் போரையும் ஆரம்பித்திருந்தான். அதில் புலிகளின் மூத்த தளபதிகள் வன்னியில் பாதுகாப்பாக இருப்பதாகவும், இளநிலைத் தளபதிகளும் போராளிகளும் சண்டையிட்டு மடிவதாகவும், முற்றுகையில் நிற்பவர்கள் எப்படியும் இறக்கவேண்டிவரும் எனவும், ஆதலால் சரணடையும் படியும் திரும்பத்திரும்ப அறிவித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது தனிநபர் சண்டைக்கு ஏற்ப ஆயுதம் தரித்த நிலையில் மூத்த தளபதிகளான பொட்டம்மான், பானு களத்தில் நின்று நெறிப்படுத்தியமை வித்தியாசமான ஓர்மத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

பலமான உயர்மாடிக் கட்டங்களைத் தெரிவு செய்திருந்தனர். அதற்குள் வைத்து விழுப்புண் அடைந்தவர்களுக்கான சிகிச்சைகளை வழங்குகின்றார்கள். யாழ்.போதனா வைத்தியசாலையைத் தவிர்த்திருந்தனர்.ஏனெனில், அதனை இவர்கள் நிச்சயம் பயன்படுத்துவார்கள் என ஊகித்து அதன்மீது பலமான தாக்குதல்களைத் தொடுப்பான். இந்திய இராணுவம் யாழ்.நகரைக் கைப்பற்றுகையில் அதனையே செய்திருந்தது. எனினும் அருகில் இருந்த ஞானம்ஸ் விடுதி, சுபாஸ் விடுதி ஆகியன பயன்படுத்தப்பட்டன. அகோரமான முற்றுகைச் சமரின் மத்தியிலும் களமருத்துவமனைக்கான கட்டமைப்புகள் பேணப்பட்டன. இதுபோராளிகளின் சமரிடும் ஆற்றலை மேம்படுத்தியது. கட்டட மறைவுகளுக்கூடாக போராளிகளை, காயமுற்றவர்களை குருநகர்க் கடற்கரைநோக்கி நகர்த்தும் திட்டம் செயற்படத் தொடங்கியது. அவ்வேளை செறிவான எறிகணைத் தாக்குதல் ஒன்று இவர்கள் தங்கியிருந்த கட்டடத்தொகுதியின் மேல் மேற்கொள்ளப்பட்டது. பல பக்கச் சுவர்கள் இடிந்து வீழ்ந்தன. க்ந்தகப் புகையும் கட்டடத் துகள்களும் எரிமலையின் புகையாக அவ்விடத்தைச் சூழ்ந்தது. கண்கள் திறக்க முடியாது. தொடர் இருமலும் சத்தியும் மூச்சுத்திணறலும் வயிற்றுத் தசைநார்களை நோகச் செய்கின்றது. எவர் இறந்தார், எவர் உயிர் தப்பினார் எனப் பிரித்தறிய முடியாதுள்ளது. கணத்திற்குக் கணம் கட்டடத்திற்குக் கட்டடம் முழத்திற்கு முழம் என உயிர்போகும் நிகழ்வுகள் நடந்துகொண்டேயிருந்தன. இருளினுள்ளேயே நீண்டகாலம் இருப்பவனுக்கு இருள் மறைந்துவிடும். சாவினுள் வாழ்பவனுக்கு சாவின் பயம் தொலைந்துவிடும். எனினும் ஒருவர் தலையை மற்றவர் தடவி உயிருடன் இருக்கிறாயா எனக் கேட்டு உறுதிப்படுத்திக்கொண்டனர். ஆயிரம் நாகங்கள் சேர்ந்து சீறுவதாய் எறிகணைகள் காற்றைக் கிழிக்கும் சத்தமும், பல நூறு இடிகள் சில நொடிகளில் இறங்குவதுபோன்ற அவற்றின் வெடிப்புகளும், கல்லுறோட்டில் தார்த் தகரம் இழுப்பதுபோல் இயந்திரத் துப்பாக்கிகளின் தொடர்சத்தமும், யுத்த டாங்கிகளின் நிலமதிரும் இரைச்சலும் காயமடைந்தவர்களின் ஈனக்குரலும் காலடியில் ஓடும் பச்சை இரத்தத்தின் பிசுபிசுப்பும் சூழலை இறுக்கமடையச் செய்தன. அபயக் குரல் கொடுக்கும் அசரீரியாக தலைவரின் 95ஆம் ஆண்டுக்கான மாவீரர்தின உரையும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. அங்குள்ளவர்கள் கேட்கும்வண்ணம் பொறுப்பாளர் தனது தொலைத்தொடர்புக் கருவியூடாக அதனை ஒலிபரப்பிக்கொண்டிருக்கின்றார். தோல்வியிலும் ஒரு வெற்றி நினைத்ததைச் சாதித்துவிட்டோம் எனும் திருப்தி போர்க்களைப்பை அகற்றிவிட்டிருந்தது. தூசு மண்டலம் விலக ரோச் வெளிச்சத்தில் இருள் விலத்தி சிகிச்சைகளை ஆரம்பித்தனர்.



மறுநாள் வேம்படி மகளிர் கல்லூரியில் பெரும்பாலான மருத்துவ அணியினர் ஒன்றுகூடினர். அதில் எவரெவர் தொடர்ந்து உள்நின்று சண்டை பிடிப்பது எனவும் யார்யார் வெளியேறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. போராளி மருத்துவர் பொழிலன் தலைமையில் மேஜர் வாமன், கப்டன் இதயகீதன் சத்தியா ஆகியோர் உள்ளடங்கிய மருத்துவ அணியினர் உள்நின்று தொல்லைகொடுக்கும் சமர் தொடரும் அணியினருடன் இணைய ஆயத்தமாயினர். இறுதிநேரப் பிரிவிற்காக அவர்கள் ஏனையவர்களுடன் கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டனர். தங்கள் உறவினர்களுக்கும் உள்ளம் கவர்ந்தவர்களுக்குமான செய்திகளைப் போராளி நண்பர்களிடம் தெரிவித்தார்கள். பின்னர் அவர்கள் முற்றுகையிட்டிருக்கும் எதிரியினூடு புகுந்து வெளியேறி வலிகாமம் செல்வதற்கு ஆயத்தமானார்கள். ஏனையவர்கள் பின்வாங்குவதற்குத் தயாரானார்கள்.

குருநகர் ஐந்துமாடிக் கட்டிடத் தொடரிலும் ஏனைய இடங்களிலும் காயமடைந்தவர்களும் வித்துடல்களும் கிடத்தப்பட்டுள்ளன. மணித்தியாலத்திற்குப் பல்லாயிரம் எறிகணைகளை ஏவித் துடைத்தழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான் பகைவன்.

தலையிற் காயமடைந்த ஒருவனுக்கு ஒரு போராளி மருத்துவன் கட்டுப்போடுகின்றான். அப்பொழுது சற்றுத்தள்ளி விழுந்து வெடித்த எறிகணை ஒன்றின் சிதறல் போராளி மருத்துவனின் கையைச் சேதப் படுத்துகின்றது. அவன் கை காயமுற்றதால் காயக் காரனின் கண் தப்பியது. அச்சம்பவத்தில் வேறு சிலரும் உயிரிழந்தனர்.

யாழ். பண்ணைக் கடலில் மறுபக்கத்தில் மண்டைதீவிலும், சிறுதீவிலும் நிற்கும் பகைவனின் கனரக இயந்திரத் துப்பாக்கிகளும் மோட்டார்களும் இக்கரை நோக்கி எரிதணல்களைக் கக்கியவண்ணம் உள்ளன. நன்றாக இருட்டிவிட்டது. இடையில் இருக்கும் நூறு மீற்றர் தூரத்தைக் கடந்து காயக் காரரைக் கொண்டுபோய் நீரேரியில் நிற்கும் சிறு படகுகளில் ஏற்றவேண்டும். மழைத்துளிகளில் நனை யாமல் பயணிப்பதற்கு சமனான செயற்பாடு இது. காயக்காரர்களையும், வித்துடல்களையும் கொண்டு செல்லும் முதல் முயற்சியிலேயே சிலர் இறந்தனர். சிலர் காயமடைந்தனர். யாழ்.மண் இவர்களின் இரத் தத்தாலும் மார்கழிமாத முதல்நாள் மழையாலும் விறைத்துக்கொண்டிருந்தது. யாழ்.கோட்டையைக் கைப்பற்றிப் பெருமைப்பட்டவர்கள் இவர்கள். தற் பொழுது நகரத்தைவிட்டு வெளியேறவும் முடியா மல் உள்நிற்கவும் முடியாமல் திணறிக்கொண்டிருக் கின்றார்கள். எல்லையற்ற எறிகணைவீச்சின் கார ணமாக பலரை வெறியேற்ற முடியவில்லை. பின் வாங்கும் படலம் ஒத்திப்போடப்பட்டது. ஏனைய பக் கங்களினால் எதிரி முற்றுகையை இறுக்கிக்கொண்டி ருக்கிறான். அவனது டாங்கிகள் இரையும் சத்த உரப்பு அதிகரித்தவண்ணம் உள்ளது.

மறுநாள் இரவும் முன்குறித்தமாதிரிப் பின் வாங்குகின்றார்கள். மோப்பம் பிடித்த எதிரி எல்லாத் திசைகளிலிருந்தும் எறிகணை, கனரகப் பீரங்கிக் குண்டுகளால் தாக்குகின்றான். இனியும் தாமதிப்பது பெரும் அழிவில் முடிவடையும். போரிடும் ஆற்ற லைத் தக்கவைப்பதே இந்நிலையில் சிறந்த மூலோ பாயமாக இருக்கமுடியும். வெளியிணைப்பு மோட் டார் பூட்டப்பட்ட ஒரு படகுடன் பதினைந்து படகுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி மோட்டார் ஈரச் சாக்குகள் போட்டு மூடப்பட்டுள்ளது. இயந்திர இரைச்சலைக் குறைப்பதன்மூலம் எதிரியின் இலகு வான இலக்காக இவர்கள் இருப்பதைத் தவிர்ப்பதற் காக மேற்குறித்த 'தொடுவாய்'களின் உதவியுடன் அணியணியாகப் பின்வாங்குகின்றார்கள். இறுதிப்பட கில் கடைசிக் களமருத்துவனும் ஏறிக்கொள்கின் றான். இருந்த பின்னர்தான் பார்த்தான் அவர்கள் இருப்பது வாகனங்களுக்கான அமுக்க வெடிமீது என. இவர்களின் அச்சத்தை உணர்ந்த ஓட்டி கூறு கின்றான் "பயப்படாதீங்க பூஸ்ற்றர் கழற்றியிருக்குது" அவ்வேளையிலும் அவர்களுக்குச் சிரிப்பு வந்துவிட் டது. எறிகணைகளினாலும் ரவை இழைகளினாலும் பின்னப்பட்ட எரிதணல் வலைக்குகை ஒன்றினூடு பயணித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஒரு ரவையோ, சிறு சிதறலோ படகில் பட்டால்போதும் வெடிமருத் துடன் அவர்கள் இரண்டறக் கலக்கவேண்டிவரும். பிறகு எப்படிப் பயப்படாமல் இருக்கமுடியும். தீக்கோழி எதிரியைக் கண்டவுடன் தலையை நிலத்தில் புதைத் துக்கொள்ளுமாம் தனது பெருமுடலை வெளியில் வைத்தபடி. அதுபோல் பெரும்பாலானவர்கள் கைக ளால் தலையைப் பொத்திக் குனிந்தவண்ணம் அமர்ந்துள்ளார்கள்.

படகுகள் மெல்லமெல்ல அசையத் தொடங் கின. விலகிப்போகும் யாழ்.நகரைப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். வாயினூடு கைவிட்டு குடலை உருவி எடுக்கையில் ஏற்படும் அவஸ்தை, உயிர் உடல் பிரிகையில் ஏற்படும் அந்தரம் என அனைவர் மனங் களும் ஆதங்கப்படுகின்றன. மெல்லிய நீர்ப்படலம் கண்களில் திரையிடுகின்றது. கரையெங்கும் விழும் எறிகணைகள் தீப்பிளம்புகளாய் எழுகின்றன. பல நூறு பராவெளிச்சங்கள் செயற்கைச் சந்திரன்களாய் அசைகின்றன. போரின் அழகிய அகோரம் அரங் கேறிக்கொண்டிருக்கின்றது. என்னவிலை கொடுத் தேனும் யாழ்.நகரைத் தக்கவைக்க வேண்டுமெனும் முடிவு பிசுபிசுத்துவிட்டது. பகைவன் தற்காலிகமாக வேனும் பெருவெற்றியொன்றைப் பெற்றுவிட்டான். அவ்வுண்மையை ஜீரணிப்பது கடினமாகவுள்ளது. இறுதியாக இறுக்கி நிலத்தில் பதித்த தடங்களை மனம் எண்ணிப் பார்க்கின்றது. வெளிவந்து தொப்புள் கொடி அறுக்கப்பட்ட பிள்ளை ஒன்றும் துவண்டுவிடு வதில்லையே. உள்நிற்கும் கொமாண்டோ அணிகள் பகைவன் படர்ந்த பிரதேசங்களினுள் ஊடுருவிக் கொண்டிருக்கின்றன. வெளியேறிய அணிகள் தென் மராட்சியில் தரைதட்டுகின்றன.

# நேர்காணல்

## கவிஞர் சு.வில்வரெத்தினம்

நேர்கண்டவர் யதீந்திரா



சென்ற இதழின் தொடர்ச்சி...

**நீங்கள் முனைப்புடன் இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் நீங்கள் உட்பட, இன்னும் பல கவிஞர்களும் முக்கியமானவர்களாக இருந்தனர். (எ.கா. மு.பொன்னம்பலம், புதுவை இரத்தினதுரை) ஆனாலும் பிற்காலங்களில் சேரன், வ.ஐ.ச. ஜெயபாலன் ஆகிய இருவருமே மிகப்பெரிய ஆளுமைகளாகக் கொண்டாடப்பட்டனர். குறிப்பாக சேரன், ஜெயபாலன் ஆகியோர் தமிழகச் சூழலில் பெரிதும் சிலாகிக்கப்பட்டனர். அந்தக்காலத்தில் வேறு எந்தக் கவிஞரும் அத்தகையதொரு இடத்தைப் பெற்றிருக்கவில்லை. இந்நிலைமையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? இது அவர்களது ஆற்றல்சார்ந்த விடயமா? அல்லது குறிப்பிட்ட கவிஞர்கள் இருவரும் ஈழத்தவர்கள் என்ற அடிப்படையில் தங்களுக்கு வழங்கப்பட்ட இடத்தை தங்களுக்காக மட்டுமே பயன்படுத்திக்கொண்டதா?**

இதுகுறித்து நான் அந்தக் கவிஞர்கள்மீது குற்றம்சாட்ட ஒன்றுமில்லை. முதலில் குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர்களை விடுவிப்போம். உண்மையில் அவர்கள் இருவரும் அடைந்த பிரபல்யமானது அந்தக் காலத்தில் அந்தக் கவிஞர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தோடு தொடர்புபட்டதாகும். என்ன விடயமென்றால் சேரனின் 'இரண்டாவது சூர்யோதயம்' கவிதைத் தொகுதி வெளிவந்த காலத்தில் அவர் ஒரு பல்கலைக் கழக மாணவராக இருந்தார். பல்கலைக்கழகமானது அந்தக் காலத்தில் பல்வேறு போராட்ட இயக்கங்களின் மையமாகவும், போர்க்காலத்தில் முக்கிய பங்களிப்பு மையமாகவும் இருந்தது. இத்தகையதொரு சூழலில்தான் சேரனின் தொகுப்பு வெளிவந்தது. ஒரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால். அத்தொகுப்பின் வெளியீடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது நான் நிகழ்வில் ஒரு விமர்சகனாகப் பங்குகொண்டிருந்தேன். இன்னொரு விமர்சகராக வரதராஜப்பெருமாள் பங்குகொண்டிருந்தார். பல்வேறு தரப்பினரின் ஈர்ப்பையும் தன்னகத்தில் கொள்ளக்கூடியதொரு காலகட்டத்தில் தொகுப்பு வெளிவந்தது தொகுப்பின் முக்கியத்துவத்தை இரட்டிப்பாக்கியது. என்னுடைய 'காற்றுவெளிக் கிராமம்' வெளிவந்தபோதும் அந்தத் தொகுப்பின் பாதிப்பைப் பலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

தவிர தமிழகச் சூழலைப் பொறுத்தவரையில் சேரனின் தொகுப்பு வெளிவந்த காலத்தில் தமிழகத்தில் ஓர் உணர்ச்சிகரமான நிலை தோன்றியிருந்தது. 1983இல் இலங்கையில் இன வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டபோது S.V.இராஜதுரை போன்றவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக மாபெரும் கூட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தார்கள். நிகழ்வில் சேரனின் 'இரண்டாவது சூர்யோதயம்' பொதுமை வெளியீடாக இரண்டாவது பதிப்பாக வெளியீடு செய்யப்பட்டது. நான் தமிழினி மகாநாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கு வந்திருந்த நண்பர்கள் கூறினார்கள். தொகுப்பின் பிரதிகள் யாவும் நிகழ்விலேயே விற்றுத் தீர்ந்ததாகவும். சந்தர்ப்பம் காரணமாக அத்தொகுப்பிற்குப் பெரியதொரு விளம்பரம் கிடைத்ததாகவும் கூறினார்கள். எனவே இத்தகை நிலைமைகள்தான் அந்தக் காலத்தில் சேரனைப் பலராலும் அறியக்கூடியதொரு நிலையைத் தோற்றுவித்தது. இதனைப் பிறிதொரு வகையில் சொல்வதானால் 83இல் எழுந்தாடிய காற்றில் எழுந்து மிதந்த மக்களின் உணர்ச்சிகளுக்கான முகத்தை சேரனின் தொகுப்பு கொடுத்திருந்தது.

அதேபோன்று நாம் வ.ஐ.ச.ஜெயபாலனை எடுத்துநோக்கினால் அவரின் கவிதைகள் பல ஏற்கனவே தமிழக சஞ்சிகைகளான கணையாழி போன்றவற்றில் வெளிவந்தது. குறிப்பாக

ஆரம்பத்தில் தமிழகச் சூழலில் அதிகம் அறியப் பட்ட ஈழக்கவிஞராக வ.ஐ.ச.ஜெயபாலன் மட்டும் தான் இருந்தார். பின்னாளில் அ.யேசுராசாவின் கவிதைத் தொகுப்பு 'கிரியா' வெளியீடாக வந்த போது அவரும் நன்கு அறியப்படலானார். உண் மையில் அந்தக் காலத்தில் ஜெயபாலன் ஒரு போராளியாகவும் பல்வேறு இயக்கங்களுடன் தொடர்புடையவராகவும் இருந்தார். ஒரே நேரத் தில் அவர் கவிஞராகவும் போராளியாகவும் இருந் தார் என்கின்ற இரட்டை அம்சமும் அவரது பிரபல்யத்துக்குப் பின்னால் இருந்தது. எனவே சேரன் ஜெயபாலன் ஆகியோரது பிரபல்யம் வெறுமனே பிரபல்யம் தேடும் அவாவோடு தொடர்புபட்டதாக நான் சொல்லமாட்டேன். அவ் வாறு சொல்வது ஒரு கலைஞன் மீது வீணாக விரல் சுட்டுவதாக அமைந்துவிடும். உண்மையில் எழுதினால் அது மக்களின் வாசிப்பிற்குப் போகத் தானே வேண்டும். அதனை அவர்கள் சோம் பலின்றிச் செய்தார்கள். ஆனால் எங்களைப் போன்ற சிலரிடம் உள்ள பிரச்சினை நாங்கள் எழுதுவோம் ஆனால் அதனைப் பிரதியெடுத்து ஈழத்து சஞ்சிகைகளுக்கோ அல்லது தமிழக சஞ்சிகைகளுக்கோ அனுப்புவதில்லை. அது எங் களிடமுள்ள சோம்பல் தன்மையின் விளைவு.

ஆனால், பின்னாளில் 'மரணத்துள் வாழ் வோம்' தொகுப்பு வெளிவந்தபோது அது பல கவிஞர்களை அறிமுகம் செய்து வைத்தது. அதன் பின்னால் என்னுடைய கவிதைகள் விடியல் பதிப்பகத்தினரால் 'உயிர்த்தெழுகின்ற காலம்' தொகுப்பிற்காகக் கேட்டு வாங்கப்பட்டது. அத்தொகுப்பு வெளிவந்த பின்னர் தமிழகத்தில் எனது கவிதை குறித்த தேடல், மு.பொன்னம் பலம் அவர்களின் கவிதைகள் குறித்த தேடல், புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைகள் குறித்த தேடல் இப்படியாக இன்னும்பல கவிஞர் கள் குறித்த தேடல் விரிவுகொண்டது.

நான் கோயம்புத்தூரில் விடியல் பதிப்பகத் தினரின் வெளியீட்டு நிகழ்விற்கு சென்றிருந்த போது எனது 'காற்றுவெளிக்கிராமம்' போட் டோப்பிரதி எடுத்துப் பலராலும் படிக்கப்பட்டதாக அங்கு வந்திருந்தோர் தெரிவித்தனர். ஒரு படைப் பாளி என்ற வகையில் அது எனக்கு மகிழ்ச்சிக் குரிய ஒன்றுதானே! எனவே சேரனும், ஜெயபால னும்தான் அங்கு முக்கியத்துவம் கொடுத்து பேசப்படுகின்றார்கள் என்றில்லை. ஒரு காலத் தில் அந்நிலைமை இருந்தது உண்மைதான். ஆனால், நான் அதுகுறித்து ஒருபோதும் பொறா மைப்பட்டதில்லை. ஈழக்கவிஞர்கள் இருவர் அங்கு அதிகம் தெரியவந்ததும், அதனூடாக எங்களது பிரச்சினைகள் மக்கள் மத்தியில் பர வலாகியதும் எனக்கு மகிழ்ச்சியைத்தான் ஏற் படுத்தியது. இன்று பலரும் அறியக்கூடிதொரு நிலை உருவாகியுள்ளது. உண்மையில் புலம் பெயர் சூழலில் உள்ளோரை ஒரு சந்தையாகக் கருதும்நிலை இருந்தாலும்கூட பல கனிதியான தொகுப்புக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மணிமேகலை பிரசுரம் போன்றவை ஈழத்தின் சீணித்துப்போன பக்கங்களைக் காட்டும் நூல்



களை வெளியிட்டாலும்கூட நல்ல தொகுப்புக்கள் பல வெளிவரத்தான் செய்கின்றன. ஆனால், அந்த தேடலுக்கு ஏற்ப நாங்கள் தேடலின் விரி வாக்கத்தை அதிகரித்திருக்கிறோமா அல்லது தேங்கிப்போய் நிற்கிறோமா? என்பது எங்களை நாங்களே சுயவிசாரணை செய்துகொள்ள வேண் டிய விடயமாகும்.

பொதுவாகத் தமிழ்த்தேசியம் சார்ந்து இயங்கும் படைப்பாளிகள் இனவாத அரசி யலுக்கு ஆட்பட்டவர்கள் என விமர்சிக்கப் படுவதுண்டு. எமது சூழலில் இயங்கும் சில படைப்பாளிகள்மீது அவ்வாறான குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படாமலில்லை. தமிழ்த் தேசியம் சார்ந்து சிந்திக்கும் ஒரு

படைப்பாளி என்ற வகையில் இதுகுறித்து உங்களது எதிர்வினை?.

என்னுடைய முழுக் கவிதைகளை யும் வாசிப்பிற்குள்ளாக்கிவரும் ஒருவர் இவ் வாறான குற்றச்சாட்டை என்மீது வைக்கமுடி யாது. ஏனென்றால் தமிழ்த்தேசியப் போராட்ட காலத்தில் எந்தவொரு இடத்திலும் நான் ஒரு தமிழ்த்தேசிய போராட்டக்காரனாக என்னைச் சித்தரித்துக்கொண்டவனல்ல. தமிழ்த்தேசிய விடு தலைப்போராட்டத்தின் நியாயமான பக்கங்களை நான் இன்னுமொரு இனத்தினைச் சேர்ந்தவனாக இருந்திருந்தாலும்கூட நான் இதையேதான் பேசியி ருப்பேன். ஏனென்றால் எங்களுடைய தமிழினத் திற்கு உள்ளேயே இருந்த ஒடுக்கப்பட்ட மக்க ளுக்கு எதிரான போக்கை அன்றைய தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலித்த விடுதலைக்கூட்டணி யினர். மேற்கொண்டபோது அதற்கு எதிராக நாங்கள் போராடியிருக்கிறோம். நான், மு.தளை யசிங்கம் போன்றோர் சிறுபான்மைக்குள் ஒரு சிறுபான்மையாகச் சொல்லப்பட்ட மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காகப் போராடியிருக்கிறோம். அன்று அந்த மக்களின் அடிப்படை உரிமைகளான தண்ணீர் அள்ளுவதற் கான உரிமை, கோயிலுக்குள் செல்வதற்கான உரிமை போன்றவைகூட மறுக்கப்பட்டிருந்தது.

அன்று எங்களது போராட்டத்திற்கெதிராக இருந்தவர் அப்போது தீவுப் பகுதியின் பாராளு மன்ற உறுப்பினராக இருந்தவரும் இன்றைக்கு பெரும் கல்விமானாகவும் பெரும் புலவராகவும் புகழ்ந்துபேசப்படும் கா.பொ.இரத்தினம் அவர் கள். அவரது தூண்டுதலால் அவரது ஆதரவா ளர்களாலும் பொலிஸாராலும் நாங்கள் எச்சரிக் கப்பட்டோம். நாங்கள் எச்சரிக்கையைப் பொருட் படுத்தாமல் இயங்கியதால் இறுதியில் சிறையில் தள்ளப்பட்டோம். எனவே நாம் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் என்னும்போது தமிழ்த் தேசியத்தினுள் அடங்கும். இன்று தலித்துக்கள் என்று சொல்லப்படும் மக்களுக்காக நிரம்பவும் போராடியிருக்கிறோம். இன்றுவரை அவ்வாறான மக்கள் தமிழ்த் தேசியப் போராட்டத்தினால் கவ னிக்கப்படாமல் போய்விடுவார்களோ என்ற ஆதங்கத்துக்கு விடைசொல்லியாக வேண்டும் என்கின்ற கருத்துக்களுக்கு எதிரான கருத்துக்கள் எனக்கில்லை. ஏனென்றால், எமது தமிழ்த் தேசிய மானது அதற்குள் உள்ளடங்கும் உப பண்பாடு கள் பற்றிய கரிசனைகள் உடைந்து போகுமள

## நம்பிக்கை விளைநிலம்

தேசமெலாம் புதுச் செங்கதிர் சூழ்ந்திடும்
திக்கு வெளித்திடுமே – நின்ற
தீமை களைந்திடுமே – எங்கள்
சிந்தை தெளிந்திடுமே – வருங்
காலம் புதையலாய்க் கையிற் கிடைத்திடும்
கவலை தொலைந்திடுமே – புதுக்
கவிதை மலர்ந்திடுமே – உயிர்க்
கனவு பலித்திடுமே!

பட்ட மரங்கள் துளிர்க்கும்., எரிபட்ட
பாட்டன் வயல் சிரிக்கும் – அடை
பட்ட முட்டை பொரிக்கும் – நிலம்
பாத்திகட்டித் துளிர்க்கும் – எங்கள்
அட்ட திக்கின் கரி சாம்பல் அகற்றிட
அமுத மழை தெறிக்கும் – எங்கள்
அயலின் தலை சிலிர்க்கும் – சூழும்
அவலத்தினை நொிக்கும்.

•

இந்தக் கனவொடு எங்கள் கவிதைகள்
இன்றும் இருக்கிறது – இடர்
ஏற்றும்... உழைக்கிறது – பயம்
இன்றி நிமிர்கிறது – இளஞ்
சந்ததி செய்யும் தவங்கள் ஜெயித்திடும்
சத்தியம் சாற்றிடு – இதை
சாதனை சொல்கிறது – வெல்லச்
சங்கு எடுத்தூது.

❑ த.ஜெயசீலன்



விற்கு சரியானதொரு தேசியக் கட்டமைப்பு செய்யப்படவில்லை என்கின்ற ஆதங்கம் எமக்குண்டு. அவ்வாறானதொரு கட்டமைப்பை நோக்கி நாம் நகரவேண்டிய தேவைப்பாடு உள்ளது. இதை சில சமாதான செயற்பாட்டாளர்கள்கூட கூறுகிறார்கள். குறிப்பாக தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரித்துப் பேசிவரும் ஜெயதேவ உயன்கொட போன்றவர்கள் தமிழர் தேசிய அரசியல் கூறுபட்டுப் போவது பற்றி கூறுகிறார்கள். அது மிக ஆபத்தானது என்றும் சொல்கிறார்கள். ஏனென்றால் தமிழ்த் தேசியம் கூறுபட்டுப் போகுமானால் எங்களது உரிமைகளை வென்றெடுக்க முடியாமற் போய்விடும். எனவே, அவர்களால் இப்படிப் பார்க்க முடியுமாக இருந்தால் ஏன் நாங்கள் பார்க்கக்கூடாது. ஆனால் நான் அந்தப் பார்வையை நான் தமிழனாக இருக்கின்றேன் என்பதற்காக மட்டுமே வரித்துக்கொண்டிருக்கின்றேனா? என்பதுதான் இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம்.

எனவே ஒரு கவிஞன் அல்லது படைப்பாளி என்பவன் உதாரணமாக தமிழர் தேசிய விடுதலைப்போராட்டத்தினல்ல, தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆஸ்தான கவிஞர் என பேசப்படும் புதுவை இரத்தினதுரை அவர்கள்கூட மானுடம் சார்ந்த விரிந்த பார்வையற்றவர் என நாம் கூறி விட முடியாது. அவர்கள் மானுடம் சார்ந்த பார்வை நின்றும் நோக்கியவர்கள்தான். அதற்கான விரி வாக்கத்தை எய்தக்கூடிய குணாம்சத்தை உடை யவர்கள்தான். இது புதுவைக்கு மட்டுமல்ல எல்லாப் படைப்பாளிகளுக்கும் பொருந்தும். உண்மையில் படைப்பாளிகள் என்பவர்கள் உளரீதியாக மிகுந்த வியாபகத்தன்மை உடையவர்கள். அவர்கள்மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்களை மிகுந்த ஆராய்வுடன்தான் முன்னிறுத்த வேண்டும்.

என்னுடைய படைப்புகளினூடாக தமிழ்த் தேசியம் என்பது ஒருபோதும் தன்னளவில் கறைபட்டுவிடக்கூடாது என்பதில் நான் மிகுந்த அக்கறை உடையவனாக இருந்திருக்கிறேன். அந்த வகையில்தான் கிழக்கு மாகாணத்தில் பக்கத்துப் பக்கத்துக் கிராமங்களில் இருந்த தமிழ் - முஸ்லிம் மக்கள் அடிபட்டுக்கொண்ட போது நான் அதுபற்றி 'குருதிக்காட்டோரங்கள்' என்ற கவிதையை எழுதினேன். அது காலத்துயர் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. ஒரு மொழி பேசும் மக்களே தமக்குள் அடிபட்டுக்கொண்ட போது நான் ஒரு தமிழ்பேசும் இனம் என்ற வகையில் அவர்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமென பேசுகிறேன். அந்தக் கவிதை வரிகளைக்கூட சொல்லமுடியும்

தொழுகைக்குக் குனிந்த தலைகளை
கூப்பிய கையோடு மன்றாடிகளை
அவர்களும்தான் இவர்களும்தான்
வெட்டிக்கொண்டே இருக்கிறார்கள்.
பூமாதேவியின் இருதயத்தில் குருதிதேக்கிக் குழியிடல்
குளியலிட்டுக் குளியலிட்டு.
புனித யுத்தப் போர்வை போர்த்தி அலைகிறார்கள்.

என்று நான் பேசுகிறேன். இந்த விடுதலைக்காட்டில் எது பூக்கும். பூக்களை, பிஞ்சுகளை, காய்களை வெட்டியெறிந்த காட்டில் என்ன பூக்கும் என்று நான் கேட்கிறேன். இது எனது எதிர்நிலை அம்சம் என்று காட்டுவதற்காக நான் கூறவில்லை. எங்களை நாங்கள் மிகுந்த கறையற்றவர்களாக நிறுவிக்கொள்ள வேண்டும் என்கின்ற அக்கறை உடையவனாக நான் இருந்து வந்திருக்கின்றேன். இதேபோன்றே யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தொடர்பாக நான் நிலுவை என்ற கவிதையொன்றை எழுதியிருக்கிறேன். அது நெற்றிமண் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. நான் ஒரு தமிழ்த்தேசிய இனத்தைச் சார்ந்தவன் என்ற வகையில் எங்களுடைய போராட்டம் எந்தவகையிலும் கொச்சைப்படுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதில் இன்றும் மிகுந்த அக்கறை உடையவனாகத்தான் இருக்கின்றேன். எந்த வகையிலும் தமிழ்த் தேசியம் ஒரு குறுகிய சிந்தனைத் தளத்தினுள் சுருங்கிவிடக்கூடாது என்பதிலும், எங்களுடைய விடுதலைப்போராட்டம் உலக நாகரிகத்துக்கும் உலக வரலாற்றிற்கும் பங்

களிப்புச் செய்வதாக அமைந்திருக்கவேண்டும் என்பதிலும் சிரத்தை உடையவனாக இருக்கிறேன். அந்த வகையில் ஒரு சக பயணியாக இருக்கும் ஒரு படைப்பாளி முற்றுமுழுதாக ஒரு சித்தாந்தத்தினை அப்பழுக்கற்ற வகையில் உள்ளே விழுங்கிக்கொண்டு அதற்கேற்ற வகையில் துப்பிவிடும் தன்மை உடையவன் அல்ல நான். எங்களுடை சரியான பக்கங்களையும், தவறான பக்கங்ககளையும் ஒரே தராசில் வைத்துப் பேசியவனாக வரலாறு என்னைக் கணிக்க வேண்டும். அந்த வகையில் ஒரு போராளிக்கும், கவிஞனுக்கும் உரிய கடப்பாடு சமமாகவே இருக்கிறது.

ஈழத்து இலக்கியத்தைப் பொறுத்த வரையில் 80களுக்குப் பின்னர் தோன்றிய முக்கியமானதொரு போக்கு போராளிகள் மத்தியிலிருந்து பல படைப்பாளிகள் தோன்றியமையாகும். இந்நிலைமையானது ஈழத்து இலக்கியத்தை முற்றிலும் புதியதொரு தளத்திற்கு நகர்த்தியது எனலாம். இதுபற்றி உங்களது அவதானம் எத்தகையது.?

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்துடன் ஒரு சந்திப்பு நடைபெற்றது. அது 1990ஆம் ஆண்டு. அந்தச் சந்திப்பின்போது போராட்ட நிகழ்வுகளை ஈழத்துப் படைப்பாளிகள் தங்களது படைப்புக்களில் பிரதிபலிக்கவேண்டும்

> “போராட்ட அனுபவங்கள் என்பது போராளிகளுக்கு இருப்பது போன்று வெளியில் இருக்கும் எங்களைப் போன்றவர்களுக்கு இல்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை வாழ்நிலைமைகளை நாங்கள் படைப்பினூடாகப் பேசமுடியும். ஆனால் போர்க்கள அனுபவங்களை எங்களால் வெளிப்படுத்த முடியாது.”

என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அப்போது நிகழ்வில் அதுபற்றி நான் சில கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தேன். உண்மையில் போராட்ட அனுபவங்கள் என்பது போராளிகளுக்கு இருப்பது போன்று வெளியில் இருக்கும் எங்களைப் போன்றவர்களுக்கு இல்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை, வாழ்நிலைமைகளை, நாங்கள் படைப்பினூடாகப் பேசமுடியும். ஆனால் போர்க்கள அனுபவங்களை எங்களால் வெளிப்படுத்த முடியாது. எனவே, போராளிகள் மத்தியிலிருந்து கவிஞர்கள், நாவலாசிரியர்கள். சிறுகதைப் படைப்பாளிகள் தோன்றக்கூடிய சூழல் உருவாக வேண்டும். போராளிகள் மத்தியில் அதற்கான வாசிப்புச்சூழல் பரிமாற்றங்கள் இடம் பெறவேண்டும். அப்போதுதான் ரஷ்ய போர்க் கால இலக்கியங்கள் பேசப்படுவதுபோன்று எங்களது போர்க்கால இலக்கியங்களும் பேசப்படும் நிலை தோன்றும் என்று நான் அந்த நிகழ்வில் கூறியிருந்தேன்.

உண்மையில் இன்று அத்தகையதொரு சூழல் உருவாகியிருக்கிறது. அப்பொழுதே - ‘விடியலுக்கு முந்திய மரணங்கள்’ என்ற நாவல் சுபாஸ் என்ற போராளியால் எழுதி வெளியிடப்பட்டது. அது கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதல் சம்பவங்களைக் களமாகக் கொண்ட நாவல். அதனை நாவல் என்று சொல்வதைவிட புதியதொரு வடிவத்துக்கான முயற்சியாகவே இருந்தது. அதன் பின்னர் மலரவனின் படைப்புக்கள், வில்லுக் குளத்துப் பறவைகள் போன்ற தொகுப்பு எல்லாமே எமது இலக்கியத்தின் புதிய போக்கினை கட்டியங் கூறுபவையாக இருந்தன.

இன்று பல படைப்பாளிகள் தோன்றியிருக்கிறார்கள். அதேவேளை போராட்ட வரலாறு என்னும்போது நாம் ஒரு காலகட்டத்தை மறந்து விடக்கூடாது. வரலாறு என்பது எப்போதும் ஒரு பக்கத்திலிருந்து மட்டும் அணுகப்படுவதில்லை. வென்றவர்களின் வரலாறு மட்டும்தான் எழுதப்படும். தோற்றவர்களின் வரலாறு எழுதப்படுவதில்லை என்று சொல்வார்கள். வரலாறு பலதரப்பட்டவர்களால் எழுதப்படும்போது வரலாறு பல முகங்களைக் கொண்டதாக அமைந்துவிடுகிறது. இந்த வகையிலே 80 களுக்குப்பின்னர் தோன்றிய பல்வேறு இயக்கங்களிலிருந்தும் பல கவிஞர்களும் எழுத்தாளர்களும் உருவாகியிருக்கிறார்கள். இன்று பல்வேறு இயக்கங்களும் பாராளுமன்ற அரசியலூடாக தேசியத்துக்காக ஒன்றுபட்டு நிற்கும்போது அந்த விடயங்களை நாம் பேசாமல் விடுதல் சரியல்ல.

அந்த வகையில் பல இயக்கங்களிலிருந்தும் பல சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன. பல நாடக முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பல நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்ட பலருடனும் எங்க

ளுக்கு அப்போது தொடர்புகள்கூட இருந்திருக்கின்றன. அவர்களில் பலர் இன்று புலம்பெயர்ந்துவிட்டாலும் அங்கும் பல படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். அவை எல்லாவற்றையும் வாசிக்கக் கிடைக்கவில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்தும் பல படைப்பாளிகள் உருவாகியிருக்கிறார்கள். குறிப்பாகப் பல பெண்போராளிகள் படைப்பாளிகளாக உருவாகியிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்களது கவிதைகள் அடங்கிய 'தமிழீழப் பெண்களின் கவிதைகள்' தொகுப்புப் பற்றி சுட்டும்விழி சஞ்சிகையில் விரிவாகப் பேசியிருக்கி றேன். குறிப்பாக மலைமகள், அம்புலி, அலையிசை போன்ற பல பெண் படைப்பாளிகள் முக்கியமானவர்கள். மலைமகள் போன்ற படைப்பாளிகள் குறுகிய தேசியவாதத்தைத் தாண்டி பிரபஞ்சமளாவும் பார்வையுடையவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய சூழலின் பின்னால் எங்களுடைய வாழ்வியல் நெருக்கடியும் அடித்தளமாக இருக்கிறது. மு.பொன்னம்பலம் அவர்கள் ஒரு கவிதையில் சொல்வதுபோன்று நெருக்கடியில் பூத்த மலர் ஏனென்றால் வாழ்வியல் நெருக்கடியானது. அந்த நெருக்கடியிலிருந்து தப்புவதற்கான ஆற்றலை வழங்கியது. இது போராளிகளுக்குள்ளும் நிகழ்ந்தது. பல்வேறு கள அனுபவங்கள் போராட்ட வழிமுறை மாற்றங்கள் இவையெல்லாம் அவர்களுக்குப் புதிய பார்வைகளையும் புதிய அனுபவங்களையும் வழங்கின. அவை படைப்புகளாக வெளிவரும்போது இலக்கியத்திலும் ஒரு புதிய பார்வையும் புதிய பாய்ச்சலும் ஏற்பட்டது.



நூல் அறிமுகப் பகுதிக்கு
படைப்பாளிகள் மற்றும்
வெளியீட்டகங்களிலிருந்து
இரண்டு புத்தகங்கள்
வரவேற்கப்படுகின்றன.
படைப்புகளுக்கான
விமர்சனங்களையும்
எதிர்பார்க்கின்றோம்.

வெளிச்சம்

## அப்பாவும் வீடும்

அப்பா வீடு கட்டுகிறார்.

சீமெந்து மணல் கல் மரந்தடி
இப்படியாக எதுவும் அவரிடமில்லை
கைவசம் அவரிடம் இருப்பதெல்லாம்
என்றோ ஒருநாள் வரைந்து வைத்த
கட்டுமானத் திட்டமும் படமும் மட்டுமே.

அவருக்கு மிகவும் பிடித்த பூசலாரை மட்டும்
மானசீகக் குருவாகக் கொண்டு
அப்பா வீடு கட்டுகிறார்.

தன் வயதொத்த ஆனால் பலம் குன்றாத
அந்த வேம்பின் கீழிருந்துதான்
அதைப்பற்றிச் சிந்திக்கிறார்.
அதோ அவருடைய கண்களில்
பயம் கலந்த ஏக்கம் தெரிகிறது
வீடு கட்டும் வேலைகளுக்கிடையேயும்
நடக்கப்போகும் அக்காவின் திருமணம் பற்றியும்
மாப்பிள்ளை வீட்டார் பற்றியும் சிந்திக்கிறார்.

இப்பொழுது அப்பாவின் கண்கள் சிவக்கின்றன.
கல்லறைக் கூட்டுக்குள் துயிலும் என் தம்பியையும்,
துயிலுமில்லத்தையும் நினைத்துக்கொள்கிறார்
அதில் அவருக்கோர் ஆத்ம திருப்தி
இருப்பதாக எனக்குப் படுகிறது.

இதோ இக்கணத்தில் அப்பாவின் முகம் கை கால்
அனைத்து அவயவங்களிலும் அம்மாவின் கண்ணீரைப்போல்
மிக வலிமையான சோர்வு தென்படுகிறது.
வீட்டுக்காக நிலையம் பார்த்த இடத்தில்
குறையாகக் கிடக்கும் அத்திபாரக் கிடங்கையும்
பக்கத்தில் பாழடைந்து கிடக்கும்
பழைய வீட்டின் இடிபாடுகளையும் பார்க்கிறார்.

சில நிமிடங்கள், அப்பாவின் இதயத் துடிப்பினைப்போல்
வேகமாகத் தற்கொலை செய்துகொள்கின்றன
இப்பொழுது நாளாந்த வயிற்றுப்பாட்டுக்காக
துருவேறிக் கிரீச்சிடும் சைக்கிளில் எதுவித
சலனமுமின்றி அப்பா போய்க்கொண்டிருக்கிறார்.

நாளைக்கும் தனக்கு மிகவும் பிடித்த
பூசலாரை மானசீகக் குருவாகக் கொண்டு
அப்பா வீடு கட்டுவார்.

வேல்.லவன்

மனநடை – 7

# கால நதியின் கரையொதுங்கிய மனிதர்கள்

❑ நாரைதன்

**கோ**ழிக்குஞ்சுகள் அரிக்கன் லாம்பைச் சுற்றி, இரும்புவலைத் தடுப்புக்கு அண்மையில், உமிப்படுக்கையின் கணகணப்பில், தாயின் இறக்கை அரவணைப்பு என்று ஏமாந்து குமையலாக உறங்கு கின்றன.

மிருதுவான இளஞ்சிவப்பு புரிவளையக் கால்களால் என்கைகளை மிதித்தேறி உணவுத் தானியப் பாத்திரத்தில் சறுக்கியும் சறுக்காமலும் விழுந்துபறந் தடிக்கும் அழகு மனதின் இருட்டறைக்கு வெளிச்சம் போட்டது. கறுத்த நீர் மினுமினுக்கும் பொட்டுக் கண்கள் கதைகள் பல பேசின. தலைகள் நடன நர்த்தனம் போல் அசைந்தன. மெல்லிய கீச்சொலிகள் ஒன்றாகி ஓசைகள் பிரிக்கப்படாத இசையாகக் காதை நிறைத்தன. வெள்ளை நிறத்திலும், வெண் மஞ்சள் நிறத்திலும் சிறகுகள் வெளிக்காட்டின. பின்பு கூட்டில் வசதியாய் ஓடிப்பறந்து திரிந்தன. இந்த மகிழ்ச்சிப் பரம்பலையும் காலம் வெட்டிப் பிளந்தது.

அதன் பின்பு,

கால்கள் விறுத்தம் கெட்டு கரடுமுரடாகிப் போய் பொருக்குப் பிடித்திருந்தன. கொண்டைப் பூக்கள் கறுப்பேறி மடிந்து சாய்ந்தன. ஓர்மோன் செயற்பாடு ஓய்ந்துபோனால் இப்படித்தானா?

கிழமைக்கு ஒரு முட்டையிடும் பேடுகளுக்குத் தீனி போடுவதில் பணம் விரயமானது. இதிலிருந்து விடுபட இறைச்சிக் கோழிகளாக கூட்டைவிட்டு அகன்றன. இருந்தபோதிலும் இளம் குஞ்சுகள் தந்த சுகானுபவம் மன மடிப்புகளிலிருந்து விலக மறுப்பது ஏன்?

இது மனிதர்களின் கதை.



கிழவி மிகவும் சிரமப்பட்டு, யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடி பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து உரப்பையுடனும் பொல்லுடனும் ஏறிக்கொண்டாள். முழுமையாக நரைத்துவிட்ட முடி. பற்கள் ஒன்றோ இரண்டோ காவி பிடித்தபடி மிஞ்சிப்போயிருந்தன. தோல் சுருங்கி பொருக்குப் பிடித்திருந்தது.

பூமிக்குச் சுமையாகிப்போன அக்கிழவியின் உடல் ஒரு காலத்தில் எல்லா வசீகரங்களையும் சிறப்பாகக் கொண்டிருந்த தடயம் எதுவுமே தெரியவில்லை. வயோதிபத்தின் கைவரிசை இம்மியும் பிசகவில்லை. கிழவியை ஏறவிடாமல் முண்டியடித்த இளசுகள் ஆண்களும் பெண்களும்தான்.

இந்த கணினிக் கற்கைநெறிப் பட்டாளம் பேருந்தை நிறைத்தது. கிழவி நிற்க முடியாமல் கஷ்டப்படுவதை எவரும் கவனித்ததாக இல்லை. இளவட்டங்கள் தமிழ்ச்சினிமாவில் கற்றுக்கொண்ட பாடங்களை மனதில் இருத்திப் பரீட்சை எழுதிப்பார்த்தனர். சிலர் சித்திபெற்றிருக்கக் கூடும். ஓர்மோன்களின் திருவிளையாடல் மனிதரை விட்டு வைத்திருக்கவில்லை. படைப்பூக்கம் முடிவிலாத்தொடரா? சைகைகள், பேச்சுகள், சிரிப்புகள் பேருந்தை சனக்குவியலோடு பழக்கியெடுத்தன.

"தொண்டமனாறு செல்வச் சந்நிதிக்கு ஒரு டிக்கற் தா மோனை"

கிழவி கையிலேந்தியிருக்கும் உரப்பையில் அவளின் முதுசொம் அடங்கும். எந்த நேரமும் நிலத்தில் பொத்தென விட்டுவிட்டுப் போய்விடலாம் என்பதனாலா கிழவி தனது உடமைகளைச் சுருக்கிக் கொண்டாள்? அவளின் வேர்கள், அடிகொடிகள் பற்றி எவருக்குத் தெரியும்?

ஈற்றில் முருகன் அழைப்பு அவளைப் பயணிக்க வைக்கிறது போலும்.

"அந்தக் காலத்தில் ஆச்சி என்ன ஆட்டம் ஆடியிருப்பா. இப்பவும் முகத்தில தெரியுதடா மச்சான்"



பேருந்துக்குச் செவியிருந்தால் இப்படி எத்தனை சொல்லும்.

இது இன்னொரு கதை.

அவருக்கு வயது 75 இருக்கலாம்.

இன்னும் உயிரோடுதான் இருக்கிறார் என்ற செய்தி வியப்பாக இருந்தது எனக்கு. பல வருடங்களுக்கு முன்கண்ட முகம். எல்லா அவலங்களையும் இந்த மண்ணில் இருந்தபடியே கடந்து வந்திருப்பவர். அவருக்கென்றொரு உலகம் தனியாக விரியக்கூடியது. நடை, பேசும்போது தலையசைக்கின்ற அவருக்கே உரித்தான இயல்பு என்பன அவரின் வயோதிப காலத்திலும் எனக்கு இனங்காட்டின. படலையைத் திறந்து உள்ளே போனபோது விரல்களை கண்மடல்களின்மேல் வைத்து, ஒளியை வடிகட்டிக் கூர்ந்து பார்த்தார். முதல் நாள் யாழ்ப்பாணம் வைத்தியசாலை முன்பாகக் கண்டு பேசிய மனிதர் ஏன் இப்படிப் புதிராகப் பார்க்கிறார்?

திடீரெனத் தெளிவு பெற்று விறுக்கு நடையுடன் என்னை அணமிக்கிறார் அவர். பேசிக்கொண்டே இருவரும் வீட்டை நோக்கி நடந்தோம். பெரிய காணி. 15 பரப்புக்குக் குறையாது. மா, பலா, தென்னை மரங்கள் நிழல் பரப்பியிருந்த காணிநிலம். அந்தக் காணியின் பூர்வீகக் கதையைச் சொன்னார். தனது பேரனார் வளர்த்த எத்தனையோ மரங்கள், எறிகணைகள், குண்டுகள் வீச்சில் சிதறிப்போய்விட்டதாகச் சொன்னார்.

திண்ணை, நடை, மாடக்குழி, மண்சுவர், மரக்கப்புகள் என்றிருந்த பரம்பரை வீட்டை கல்வீடாக நான்கு அறைகள் மண்ட

பம் எனப் பெருஞ்செலவில் ஒப்பேற்றிக் குடிபுகுந்த போது அவருக்கு ஊரில் ராச மரியாதை. கோகிலாக்கண்டி வயல், கச்சாய் தென்னந்தோப்பு என்று முன்னோர்கள் தேடிவைத்த நிலபுலங்கள் அரச ஊழியனாக இருந்தபோதிலும் செல்வச்செழிப்பில் அவரையும் குடும்பத்தையும் இருத்தி வைத்தன. இன்று அவரின் கதைவேறு.

பிரிகேடியர் ஒருவன் 'வீடு நன்றாக இருக்கிறது' என்று வந்து குடியேறியதால் இந்த வீடு 'பப்படம் மாதிரி உடைஞ்சுபோகாமலிருக்கு' என்கிறார்.

மகன் பிரான்ஸிலிருந்து குடும்பத்தோடு வந்து இருக்கப்போறார். வீட்டைத்தாருங்கோ என்று சிங்களம், இங்கிலீசில் எல்லாம் பேசி ஒருமாதிரி ஓம் எண்டு சொல்லி, போன மாதம் தான் எழும்பினவன் மனமில்லாமல்தான் மகன் வராவிட்டால் தான் திரும்பவும் வருவேன். வேறு யாருக்கும் கொடுக்கப்படாது என்று 'கொண்டிசன்' போடுறான். அப்பு, ஆச்சி வளர்த்த செம்பவிரியன் பிலாப்பழத்திலை ருசி கண்டவன் விடுவனோ? கிழவனார் இப்பொழுது வீட்டில் தனிச்சீவியம். மனைவி இறந்து 8 வருடங்கள். உறவினர்களின் ஒழுங்கில்லாத சாப்பாட்டோடு அவரின் காலம் கழிகிறது. கிழவனார் மகன் வருவான் என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார். பிரிகேடியரின் ஆட்கள் இடைக்கிடை வந்து எட்டிப்பார்த்துக் கொண்டு போகின்றனர்.



தேங்காய் பொறுக்கிக்குவிப்பது, மட்டைகளை அடுக்கி வைப்பது, காணியைக் கூட்டித் துப்புரவு செய்தல், பலாக்காய்கள் மாங்காய்கள் முற்றிவிட்டனவா எனப் பார்ப்பது என்பன கிழவனாரின் தற்போதைய பொழுதுபோக்கு. கதைபேச்சுக்கு ஆளில்லை. மகன் அனுப்பிவைத்திருந்த கைத்தொலைபேசி அவர் படுத்துறங்கும் ஓலைப்பாயில் தலையணையருகே கிடக்கிறது.

மகன் பிரான்ஸிலிருந்து எப்பொழுதாவது பேசுவான். 'அப்பாவுக்குப் பென்சன் வருகிறது, வரும்படிகள் இருக்கும், அப்பாவுக்கு ஏன் காசு' என்பது அவனின் தீர்மானம்.

ஆனாலும் அயலவர்களிடம் -

"அப்பாவுக்கு ஏதுமெண்டால் உடனே அறிவிச்சுப்போடுங்கோ'' எனத் தனது தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்திருப்பதும் கிழவனாருக்குத் தெரிந்திருக்கிறது. கொள்ளிவைக்க முன்னேற்பாடு செய்யும் மகன் ஒருமுனையில், மறுமுனையில் இங்கு "அவன் இங்கை வந்தால் உழைக்கத் தேவையில்லை. என்ர ஒரே ஒரு மகன் காணி பூமியளைப் பார்த்தால் சும்மா இருந்து சாப்பிடலாம். ஏதோ இந்தியன் ஆமி தேடித் திரியிறான் எண்டு வெளிக்கிடேக்கை நான் மறிக்கேல்லை. தாயின்ரை செத்தவீட்டுக்கும் வராமல் எங்கயோ நாட்டில் அலைஞ்சு திரிஞ்சனி. இப்ப வரலாம் தானே அவன் பலதையும் யோசிச்சு நான் கண்ணை மூடுறத்துக்கிடையில வருவான் எண்ட நம்பிக்கையிலதான் தம்பி இதுக்கை தனியாக் கிடக்கிறன். பொருள் பண்டம் எல்லாத்தையும் கொண்டுவருமோ தம்பி" எனக் கூறி முடிக்கிறார் கிழவனார்.

சந்திப்பிள்ளையார் கோயிலின் கும்பாபிஷேகத்துக்கு நாள்குறித்தாயிற்று. இனிவரும் இரண்டு மாதங்களுக்குத் 'தடல்புடல்' வேலைதான். வெளிநாடுகளில் உள்ள ஊர்வாசிகள் தங்களின் தூதுவர்கள் மூலம் தாராளமாகவே அன்பளிப்புச் செய்தனர். எப்படியிருந்த கோயில். எப்படிக்காட்சியளிக்கிறது என ஊர்மக்கள் மகிழ்ச்சி கொண்டாடினர். ஆலய பரிபாலனசபை அலுவலகத்தில் வழுக்கைத்தலை, நெற்றிநிறைந்த வீபூதியுடன் கிழவனார் ஒருவரின் முகம் இரும்புக் கம்பிச் சிறையினூடாகத் தெரிந்தது. கணக்குவழக்குகளைச் சரி பார்க்கிறார் போலும். வயது 70 க்கு மேலாகியும் கண்ணாடி பாவிக்காமல் ஒற்றைகளைப் புரட்டுகிறார். அவர் தனது வாழ்க்கையின் பக்கங்களை ஏற்கனவே மூடிவிட்டார்போல் இருக்கிறது. மேற்குலக ஊர்தேசம் போய்ச் சேர்ந்துவிட்ட அவரின் உறவுகளின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து ஒருமுறை கட்டுநாயக்கா போய்ச்சேர்ந்தார். மக்களின் ஒழுங்கு

எல்லாம் மிகச் சிறப்பாகவே இருந்தது. குளிர், அடைபட்ட வாழ்க்கை பிடிக்கவில்லை என மூன்று மாதங்களில் தனியாக ஊர்வந்து சேர்ந்தார். இப்பொழுது ஆலயத்தொண்டு, சமூகசேவை என அவரின் பொழுது கழியும்.

இங்கிலாந்து நாட்டில் இருபது வருடம் கழித்து ஊருக்கு வந்த வயோதிபப் பெண்ணொருத்தி அவரின் முன்பாக வந்து நிற்கிறாள். தனது பிள்ளைகள் பெயரில் இந்த அன்பளிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள் என நோட்டுக் கட்டுகளை அவரிடம் நீட்டினாள். அவரின் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தன. அவரின் கண்கள் நிலைத்து நின்றன. காலநதி எதிர்நோக்கி வேகமாக ஓடியது.

"நீங்கள் கனகசபை வாத்தியாரின் மூத்த மகளெல்லே?"

அந்த வயோதிபப் பெண் சிரித்தவாறு தலையசைத்தாள்.

"சரியாக மாறிப்போனீர்கள்" என்றார் கிழவனார்.

"நீங்கள் பாக்கிய லட்சுமியின் அண்ணனெல்லே?"

கிழவனார் தலையசைத்தார்.

ஒருவரை ஒருவர் காணாவிட்டால் (இளமைக் காலத்தில், ஓர்மோன்கள் உயர் வலுவில் செயற்பட்ட காலத்தில்) உறக்கமே இல்லை என்ற பைத்தியங்களாக இருந்ததை இருவரும் இந்தச் சந்திப்பில் மீள்நினைவு கொண்டதாக இல்லை.

குழந்தை விளையாடிய பொம்மையைப் பறித்தால் அழும். வேறொரு பொம்மையைக் கொடுத்தால் அழுகை நின்றுவிடும். என்பதுபோலத்தான் இவர்களின் வாழ்க்கையும் அமைந்திருக்கக் கூடும் கிழவனார் உரிய பற்றுச்சீட்டுக்களை கொடுத்து "எப்ப உங்களின் 'பிளையிட்'. கும்பாபிஷேகம் வரைக்கும் நின்றுபோனால் நல்லது" எனக் கிழவனார் வழியனுப்புகிறார்.

*(தொடரும் ..)*

## ஒரு மகா(ன்) வருகைக்கான அழைப்பு

பூகம்ப வெடிப்பினூடே
பூமியைப் பிளந்து புறப்பட்டு வருவாயென்றோ
வானைப் பிரித்து வந்து
அவதாரம் எடுப்பாயென்றோ
எதிர்பார்த்து எதிர்பார்த்து
ஏங்குகிறது உலகு.
பிறைக்கு அபயம் தந்த பிரானும்
குரைகடல் கோணேச்சரத்திலும்
நல்லெழில் மாதோட்ட நன்னகரிலும்
புண்ணிய நீர்த்தல நகுலேச்சரத்திலும்
பாவநாசமும் பாலாவியும் பறிக்கப்பட்டு
வீட்டுக்காவலில் விசாரிக்கப்படுகிறார்
புலித்தோலை அணிந்ததினால்போலும்.
மாமுகத்தை நீக்கியருளிய உன்
மருகனும் கடுங்காவல் ஆயுள் கைதியானான்.
அருணகிரிக்கருளிய பன்னிருகை வேற்பெருமானும்.
பிணிதீர் மாணிக்க கங்கையும்
வள்ளி மலையோடு வரலாறும் பறிகொடுத்து
வாய்மூடி மௌனியானான்.
ஆழியிலே உலகை அமிழவிழாமல்
அன்றொரு நாள் கூர்ம
வடிவெடுத்து நீ அமர்ந்த
தலத்தின் முன் கரிய பின்னிரவில்
வைத்துக்கட்டிய போதி மாதவனும்
புன்னகை சிந்துகிறான்.
உனக்கு முன் தானமர்ந்த பெருமையினால்.
கீதாகேசனே!
தமிழ்க்குடிதனை நெருக்கி
கோணேசன் ஆழவும்
தேரேறி மாவையவன் தெருவுலா வரவும்
கீரிமுகம் மாற்றி தவமும் அலையில் நாம்
பிதிர்க்கடன் செய்யவும்
அன்னம் பாலிக்கும் சந்நிதியானும்
சிலம்புத் தேவியும் மீண்டபெற்ற
சீரான மகிமைபோல்
சுழலும் நின் சக்கராயுத வேகத்தில்
எம் உரிமை கிடைக்கவும்
நவபாத்திரம் தாங்கியும்
சீரடையார் மாந்தரென்றே
புரவியில் வாளேந்தி வருவேனென்று
கனன்ற நாயகனே
நாநிலத்தவரின் மனமாசினை நீக்கி
வழிப்படுத்த வாராயோ வாராயோ புறப்பட்டு?

❑ வி.குணபாலா

# முக்தி - முனை மூன்றாண்டுகளுக்குப் பின்னும்...

❑ அ.அன்ரனி

**யுத்தநிறுத்தம், ஒப்பந்தம் கைச்சாத்து, சர்வதேச அனுசரணையுடன் பேச்சு, இடைக்கால நிர்வாகம் பற்றியதான ஆய்வு இப்படியாக அரசியல் சார்ந்த நடவடிக்கைகள் பல நடந்தும் பிரயோசனங்கள் ஏதுமற்று கடந்துவிட்டது மூன்றாண்டு காலம். இப்போ பொதுக்கட்டமைப்பு என்ற ஓர் தரிப்பிடத்தில் வந்து நிற்கின்றது. சமாதான பெயர் தாங்கிய அரசாங்க பஸ்.**

கடுகதி வேகத்தில் புறப்பட்ட சமாதானம் நோக்கிய பயணம் ஆரம்பத்தில் உச்ச வேகத்தில் ஓடியது உண்மைதான். இடையில் சில தரிப்புக்கள், தடைகள், இப்படியாய் ஆடி அசைந்து ஊர்ந்து இப்போ தடம் புரண்டு விடுமோ என்றஞ்சுமளவுக்கு பிழையான ஓர் தரிப்பிடத்தில் வந்து நிற்கின்றது. இருந்தும் பொதுக்கட்டமைப்பு எனும் புதுப் பெயர் மாட்டலுடன் மீண்டும் ஓடிமுடிக்க நினைக்கின்றது. அரசின் அந்த பஸ்.

மூன்றாண்டு காலம் முடிவடைந்து விட்டது. மக்களின் எதிர்பார்ப்புக்கு பலன்தரும் நடவடிக்கை எவையும் அரசதரப்பினரால் மேற்கொள்ளப்படவில்லை. நாட்டின் நன்மைக்கு ஏதாவது பயன்தரும் அநுகூலங்கள் ஏற்படுத்தப்பட்டதா என்றாலும் இல்லை.

தம்மால் சமாதானம் கொண்டு வரப்படும் எனும் மூலதனத்தை முன்வைத்தே இன்றுவரையான அரசியல் வியாபாரம் சிங்கள அரசியல் கட்சிகளினால் நடாத்தப்படுகின்றது. சமாதான நோக்கில் இலாபம் ஈட்டப்படாவிட்டாலும் நாளைய அரசியல் இருப்பிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்திக் காய்கள் நகர்த்தப்படும் இவ்வழிமுறையையே சந்திரிக்காவும் பின்பற்றுகிறார். தனது கபடத்தனமான அரசியல் நடவடிக்கைகள் பேரினவாதிகளை குஷிப்படுத்த வேண்டுமென்பதிலும் நாளைய தனது அதிகார இருப்புக்கு அந்நடவடிக்கை வழிகோல வேண்டுமென்பதிலும் அவர் தீவிரம் காட்டுவது வெளிப்படையாகத் தெரிகின்றது.

தமிழர் தரப்பு முன்வைத்த தன்னாட்சி அதிகார சபை வரைபை அரசு புறம்தள்ளிவிட்டு அதை பேரினவாதிக்கட்சிகள் மீது பழிபோட்டு விட்டார்களா இப்போ புதிதாய் பொதுக்கட்டமைப்பு என்றதொரு புதிய நாடகத்துக்கான திரைச்சீலையை திறந்துள்ளார்கள். இந்த நடவடிக்கையானது தமக்கும் தமது கோரிக்கைக்கும் எந்த வித பலனையும் தராது என்பதை எம்மக்கள் கடந்தகால கசப்பான பாடங்களிலிருந்து கற்றுக்கொண்டமையினால் பிதற்றிக்கொள்ளாமல் இருக்கின்றனர்.

1948 முதல் சிங்கள தேசம் பதில் தருமென எதிர்பார்த்து எதிர்பார்த்துக் களைத்துப் போனதும் சிங்கள தேசத்தின் புத்திஜீவிகள் என தம்மை இனங்காட்டும் பேரினவாதிகளுக்கு ஞானம் பிறக்கும் தமக்கொரு காத்திரமான தீர்வு இவர்களால் கிடைக்கும் என்றும் எதிர்பார்த்து தோற்றுப்போனதும் இன்னும் அவர்கள் மனதை விட்டகலவில்லை.

சிறுபான்மையினராகிய தமிழரை நசுக்கவெனவும் அடக்கி ஆளவெனவும் சட்டக்கோவைகளையும் அரசியல் யாப்புகளையும் திட்டமிட்டு தயாரிக்கும் சிங்களக் கட்சிகள், அதனை நடைமுறைப் படுத்தவும் தவறுவதில்லை. ஆனால், அந்த யாப்புகளும் சட்டங்களும் கொண்டுள்ள மனித சுதந்திர குழிபறிப்பிற்கான விடயங்களை களைய இன்றுவரை எந்தக் கட்சிகளும் முயலவில்லை. இவ்விடயத்தில் சிங்கள மக்களும்தான் தவறி

ழைத்துவிட்டனர் என்பது புரிகின்றது. அரசு தமிழர்கள்மீது பாராமுகமாய் இருப்பதையும் நடத்துவதையும் கண்டும் காணாததுபோல் இருந்ததும் அரசின் போர்த்தெரிவிற்கு 80 வீதமானவர் ஆதரவும் கொடுத்தனர். அதனை ஒவ்வொரு தேர்தல் தெரிவின்போதும் வெளிக்காட்டுவர். அந்த செயல்களுக்கெல்லாம் பரிகாரம் இப்போது கிடைக்கிறதல்லவா? போர் அவர்களையும் இந்நாட்டில் நிம்மதியாய் வாழ வழி செய்ததா? ஏதோ ஓர் அழுத்தத்தை அவர்களும் சுமந்தார்களல்லவா? அதன் தார்ப்பரியமே இன்றுவரை யான தொடர் போருக்கும் அது சார்ந்த அழிவுக்கும் வழிகோலியதல்லவா? ஆகவே இனிமேலாவது அரசின் நடவடிக்கை உண்மையான அணுகுமுறையுடன் இருக்க வேண்டுமென்று அழுத்தம் கொடுக்க வேண்டாமா?

பேரினவாதிகளைக் குஷிப்படுத்தவும், ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்கவும் சில அதிரடி நடவடிக்கைகள் தற்போதும் நடந்தன. பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும், ஆட்சிப்படியேற அரசியல் கொள்கை ஏதுமற்றவர்களுடன் கூட்டுவைத்ததும், நன்றாக நடந்துமுடிந்தது. தமது அரசியல் சுயலாபத்துக்காக மக்கள் நலனை நிராகரித்துவிட்டு சிங்கள அரசபூதம் தனியே யுத்தமுனை நோக்கிய நகர்விலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. மூக்கிருக்கும் வரை சளியாகத் தொடரும் இந்நிலைமை தொடர்கின்றபோது வெளிநாட்டு அழுத்தத்திற்கும், அவர்களது ஆலோசனைகளுக்கும் கட்டுப்பட்டு இலங்கை அரசு தனது விடாக்கண்டன் போக்கிலிருந்து இறங்கி வந்து தமிழர் தரப்பை அரவணைக்குமா? தமிழினத்தின் ஏகப்பிரதிநிதிகளான புலிகளுடன் பேச்சு மேசையில் உண்மை முகத்துடன் பேசித் தீர்க்க முயலுமா? ஒட்டுமொத்தத்தில் கடந்த மூன்றாண்டுக்கு மேலாய் முக்கி - முனகி கருக்கட்டப்பட்ட 'சமாதானக் குழந்தை' இலங்கைத் தீவில் இன்னமும் பிரசவமாகாது தள்ளிப் போவது கவலைக்கிடமே.

உண்மையில் தற்போதைய காலகட்டத்திலேதான் தமிழினம் அதிகமாக ஏமாற்றப்பட்டதெனலாம். மின்இணைப்பும் பொருட்தடை நீங்கிய வரவுகளும் வெளிப்படையான யுத்த சன்னதம் இல்லாத வாழ்வும் எல்லாமே தமக்குக் கிடைத்த தான மாயையை மக்களுக்குள் ஏற்படுத்திவிட்டன. இனியென்ன சமாதானம்தான் என்றும் அரசாங்கம் நியாயமான வழியில் தம்மை அணுகுவதாகவும் தமிழ் மக்களில் அநேகமானவர்கள் நம்பினார்கள். ஏன் இந்நாட்டின் பெரும்பான்மை சிங்கள மக்களும் தான் நம்பினார்கள். ஆனால், நடப்பதென்ன?

போரால் பாதிக்கப்பட்ட எங்கள் மக்களது புனர்வாழ்வுக்கென சர்வதேசம் அள்ளிக்கொட்டிய வளக் குவிப்பிலிருந்து பெறப்பட்ட உதவிகள் எங்கு எவ்வாறு எதற்குச் செலவுசெய்யப்படுகின்றன என்பது மட்டும் இருட்டாகவே இருக்கின்றது. கேவலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கென வந்த குவிப்பின் பெரும்பகுதி என்னவானது? பிள்ளையைச் சாட்டிப் பூதம் திண்ட கதையாய் அரச பூதம் அனைத்து உதவிகளையும் மென்று விழுங்கிவிட்டு கட்டாயப் போருக்கு ஆயத்தமாவது உண்மையில் பாரிய மனிதமீறலே.

இதனாலேயே புரிந்துணர்வு ஒப்பந்தமானது போரில் ஈடுபட்ட அரசாங்கத்திற்கும் போரால் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பினரிடையேயும் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக நம்பிக்கையீனத்தையும், மனக்கசப்புகளையுமே ஏற்படுத்தி நிற்கின்றது. அந்தளவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கொண்டுள்ள அம்சங்கள் எதனையும் அரச தரப்பு மதிக்கவும் இல்லை. கடைப பிடிக்க முயற்சிக்கவும் இல்லை.

அண்மையில கூட மட்டக்களப்பில் புதிய முகாம்கள் நிறுவப்பட்டதும், அதிரடிப்படையினரின் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களும் எதை எடுத்தியம்புகின்றன.

சமாதானத்தை வலியுறுத்தி ஒலித்த பல குரல்கள் இன்று இலங்கை அரசியலில் இல்லை. அத்தோடு பேரினவாத அரசின் நோக்கமும் நிறைவேறிவிட்டது போல்தான் தெரிகின்றது. இழந்த மூலவளங்களை ஈடுசெய்வதற்கான நிதியுதவி ஏதோ கணிசமாகக் கிடைத்துவிட்டது. படைக்கலங்களும் போதியளவிற்கு வாங்கிக் குவித்தாயிற்று. போரைச் சார்ந்த அதிகாரிகள் பலரை இராணுவத்தின் உயர்பதவிகளில் இருத்தியாயிற்று. நாளைய சண்டைக்கான ஒத்திகைகளும் பார்த்தாயிற்று. இனி அவர்களுக்குத் தேவை 'சமாதானமல்ல'. அவர்கள் மொழியில் சொல்வதனால் 'சமாதானத்தைக் கண்டடைவதற்கான போரை' ஆரம்பிப்பது எனும் வழிமுறையைத் தொடர்வதே.

உருப்படியான சட்ட ஆலோசனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அதுமாத்திரமன்று உதவும் நாடுகள் வலியுறுத்தும் அரசியல் ஆலோசனைகளுக்கும் கட்டுப்படாத தன்மையுடனேயே அரசு நடந்து கொள்கின்றது. பேச்சுவார்த்தை மேசைக

ளில் முன்மொழியப்பட்டு ஏற்படுத்தப்பட்ட சமாதானத்தின்பாலான அமைப்புகளுக்கும் கட்டமைப்புகளுக்கும் ஒத்துவராத தன்மையுடனும் நடந்துகொள்கின்றது. ஆரோக்கியமான காரியம் எவையும் நடைமுறைப்படுத்தாவிட்டாலும், சர்வதேச அனுக்கிரகத்தையும் செல்வாக்கினையும் மூலதனங்களையும் பெற்றுக்கொள்ளுமுகமாக ஏமாற்று அரசியல் நவடிக்கைகளோ அரங்கேற்றப்பட்ட வண்ணமே உள்ளன. அதில் ஒரு அங்கமே பொதுக் கட்டமைப்புசார்ந்த நடவடிக்கையும் அதற்கான ஆதரவைப்பெற கண்டியில் கூடிய உதவி வழங்கும் வெளிநாட்டுப் பிரமுகர்களின் தரிசனமும் அங்கு மேற்கொள்ளப்பட்ட யுக்திகளும் ஆகும்.

சிங்கள அரசியல் தலைமையினால், அரசியல் பழிவாங்கல்களினால் காலம் காலமாக எவ்விதம் தமிழினம் வஞ்சிக்கப்பட்டு வருகின்றதென்பதை சிங்கள அடிமட்டம் தொடங்கி அதிகாரத்தில் உள்ளவர்வரை முதலில் புரிந்துணர வேண்டும். அது தவிர எந்த ஒப்பந்தமும் இங்கு சமாதானத்தை எட்ட வழி செய்யாது. ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் ஓங்கிய விடுதலைக் குரல்களை நன்கு புரிந்துகொண்டு புரிந்துணர்வுடன் கூடிய விட்டுக்கொடுப்புக்கும் அரசதரப்பு தயாராக வேண்டும். இதை சிங்களப் பேரினவாதம் எப்போது புரிந்துகொள்ளப் போகிறது.? இதற்கான காலகட்டத்தை ஏற்படுத்தி முழுச் சிங்கள தேசமும் எப்போது அரசுக்கு எதிராய் அழுத்தம் கொடுக்கப்போகிறார்கள்.

சகல ஆட்சியதிகாரத்தின் வலுவான தலைமையாக இருக்கும் சிங்களத் தலைமைகள் தமக்குச் சாதகமான விடயங்களில் மாத்திரம் தமது *Power* ஐ வெளிக்காட்டத் தவறுவதில்லை. போர் சார்ந்த நடவடிக்கைகளிலும் தமது தனித்த குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வார்கள். ஆனால் சிறுபான்மையினரான தமிழரின் தார்மீகப் போராட்டத்தின்பால் எடுக்கப்படும் சமாதானத்தை கண்டடைவதற்கான முடிவுகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் மாத்திரமே அரசியலில் பல கில்லாடிகளானவர்களினதும் பேரினவாதக் குண்டர்களினதும் ஆதரவை வேண்டிநிற்கும் இந்த நிராகரிப்புக்கென்றே திட்டமிட்டு தனது கூட்டணி அரசியலுக்குள் பலரை ஊதிப்பெருக்கி வைத்துள்ளார் சந்திரிகா அவர்கள்.

இந்த விதத்தில் பார்க்கப்பட வேண்டிய நிகழ்வுகளே பலகாலங்களாக இந்நாட்டில் நடைபெறுகின்றன. சமாதானத்தை கண்டடைய மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளாயிருக்கட்டும். வரையப்பட முனைந்து பின்னர் கரைந்துபோன ஒப்பந்தங்களாக இருக்கட்டும் அல்லது தன்னாட்சி அதிகாரசபை பகிர்ந்தளித்தல், இடைக்கால நிர்வாகம் சார்ந்த ஆராய்வாயிருக்கட்டும் இறுதியில் அனைத்து நிராகரிப்புக்கு பின்னாலும் இந்த வகை மேற்கூறிய சாக்கடை அரசியல் கூத்தாடிகளின் கைங்கரியமே இருந்தன. முடிவான பொதுக்கட்டமைப்பு சார்ந்த நடவடிக்கையொன்று இப்போ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னாலும் அரசின் ஏமாற்று அரசியல் நாடகம் இருக்குமென்பதை சொல்லித்தான் புரியவேண்டியதில்லையே.

நடந்து முடிந்த ஆறு சுற்றுப்பேச்சுவார்த்தையிலும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. தன்னாட்சி அதிகாரசபை வரையும் ஏதோ காரணம் காட்டி மறுதலிக்கப்பட்டுவிட்டது. இப்போ பொதுக்கட்டமைப்பு என்றதொரு புதிய வரைபை காட்சிக்கு விட்டதுமல்லாமல் உலகத்துக்கும் நாட்டு மக்களுக்கும் ஏதோ தான் சந்திரிகா இக் கட்டமைப்பு விடயத்தில் சாதிக்கப்போகின்றார் எனும் பிரமையை வெளிப்படுத்தி தன்னை மிதப்படுத்திவிடத் துடிக்கின்றார்.

சந்திரிகா அவர்கள் சமாதானத்தைக் கண்டடைய எடுக்கப்படும் முடிவுகள் எதற்கும் அரசியல் கொள்கைகள் ஏதுமற்ற கட்சிகளையும், கும்பல்களையும் காரணங்காட்டி தப்புவது அவரது வெளிப்படையான கபடத்தனத்தையே கோடிட்டுக்காட்டுகின்றதல்லவா?

இருந்தும் ஒப்பந்தம் கைச்சாத்தாகி அமுலில் இருந்ததாக காட்டப்பட்டு பல குழறுபடிகளையும் மீறல்களையும் அரச தரப்பு புரிந்திட்டபோதும் இன்னமும் புலிகள் காட்டிவரும் பொறுமையும் புலிகளின் விட்டுக்கொடுப்புடனான அர்ப்பணித்த தன்மைகளுமே இற்றைவரை ஒப்பந்தம் சிதைக்கப்படும் நிர்ப்பந்தம் ஏற்படாது காப்பாற்றப்பட்டு வருகின்றது. "றப்பராக சமாதான காலகட்டம்" இழுபட ஏதுவாக அமைந்துள்ளது என்றும் கூறலாம். சந்திரிகா அரசின் கடும்போக்குக்கு எதிராய் புலிகளும் வரிந்து கட்டிக்கொண்டு மல்லுக்கு நின்றிருந்தால் இலங்கையின் இன்றைய நிலை கேள்விக்கிடமே.

இது இல்லாதிருக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ரணிலோ இப்போ அரசியலில் *Power* ஏதுமற்றவராகிவிட்டார். பேச்சுக்களில் ஈடுபட்ட அவர் கட்சியில் இருந்த அரசியல் சாணக்கியம் மிகுந்தவர்கள் கட்சியிலிருந்து விலகியும்விட்டனர். ஒப்பந்

தம் கைச்சாத்தாகும் நாட்களில் இந்நடவடிக்கையை எதிர்த்தவராகவும், கடுமையான ஓய்வு பெற்றும் விமர்சனத்திற்கும் உள்ளாக்கியவருமான சந்திரிகாவோ இப்போ சகல ஆட்சியதிகாரமும் தாங்கிய தலைவராக. விதைத்தவர் யாரோ பயிரைப் பராமரிப்பவர் யாரோ எனும்நிலை இப்படித் தொடர்வதால் அறுவடை எப்படியிருக்கும் சமாதானம் என்ன நிலைக்குள்ளாகப்போகின்றது என்பதை எண்ணும் போது வேதனையாக உள்ளது.

எதற்கும் ஒத்துவராத தன்மையுடன் நடந்து கொண்டதனால் கடந்த காலப்போரில் மூக்குடை பட்டபோதும் திருத்திக்கொள்ளாத அரசு மீண்டும் போருக்கு ஆயத்தம் செய்வது கேலியாக உள்ளது. ஏதோ காலத்தை இழுத்தடிக்கவும் சமாதான மாயையை ஏற்படுத்தி போராடும் இனத்திற்குள் பிளவுகளை ஏற்படுத்திவிடவும் துடிக்கிறது அரசு. அதனில் சிறுவெற்றியடைந்ததினால் இன்னும் கொஞ்சக்காலம் தற்காலமாகிய போருமல்லாத, சமாதானமுமல்லாத, சூனியமானதொரு காலகட்டத்தை இன்னும் கொஞ்சக் காலம் இழுத்தடிக்க முயல்கின்றது. நாடும் உலகும் குழம்பாதவண்ணம் பற்பல பெயர் சூட்டல்களுடன் அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் அரங்கேற்றும். ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் தொடர்ந்து தமது கொத்தடி மைச்சாதனத்தை பற்பல பெயர் மாற்றலுடன் எங்கள் தலைமீது வஞ்சகப் பொறிமுறையைக் கையாண்டு சுமத்திடவே துடிப்பர், அதற்கு நாம் இடம்கொடுக்கக்கூடாது.

ஆட்சிப் பொறுப்புக்கள் மாறும். அரச தலைவர் முகங்கள் மாறும். கூட்டுகள் சேர்வதும், பின் அரசியலில் அதிரடி மாற்றங்கள் நிகழுவதும் வழமையாக இருக்கும். ஆனால், ஒடுக்குமுறை பேரினவாத சிந்தனைக்கு அனுகூலமாகும் அரசியல் சாசனத்தில் மட்டும் மாற்றங்கள் நிகழ வாய்ப்பிருக்காது. அத்தோடு சிங்கள மேலாதிக்க வர்க்கத்தினரிடையே மனமாற்றம் ஏற்படாது போவதற்கு சாத்தானின் வேதம் ஓதும் பௌத்த துறவிகளிடையேயும் ஏமாற்று அரசியலில் தம்மை ஊறவைத்து கொழுத்துப்போன மிதவாதிகளிடையேயும் மனமாற்றம் முதலில் ஏற்படவேண்டும். அதுவரை இந்த நாடும், நாட்டு வளங்களும், உருப்படுமா என்பது கேள்விக்குறியே.

வெளிநாட்டு அனுசரணை, இராஜதந்திரிகள் பிரசன்னம், அவர்களது ஆலோசனைகள் இவை யாவும் சரிந்துபோன எம்வாழ்வை நிமிர்த்தப் போதுமானவையல்ல. இழந்தவைபோக புலிகளின் அணுகு முறையால் உண்மையை ஓரளவேனும் புரிந்துகொள்ள சர்வதேசத்திற்கு சிங்கள அரசின் கபடத்தனத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவர நாளை எமது தேவையை இன்றே நன்குணர வேண்டும். விடுதலை வேண்டிநிற்கும் மக்களெனும் மன நிறைவுடன் தொடர்ந்து போராடுவோம். வெளிநாட்டுப் பிரசன்னம் இனி இத்தீவில் சமாதானத்தை கொண்டுவரும் எனும் மாயைக்குள் அமிழ்ந்து நாம் அழிந்து போகக்கூடாது. சுருட்டும், வெளிநாட்டுச் சுங்கானும் உருவத்தில் மாறுபட்டவை ஆனால், அவை தாங்கிவரும் புகை மனித உயிருக்கு ஆபத்து அவ்வளவே.

## தூங்காத என் காதலி

அழு காதலி
காதல் வந்ததே எனக்கு
உன்னைக் கண்ட பிறகுதான்.
கைபிடிக்கக் கிடைத்ததும்கூட
எனக்குக் கிடைத்த அதிஷ்டமன்றி
வேறென்ன?
என் உயிருக்கு மட்டுமல்ல
நீ காவல், என் தேசத்துக்கும் தானே.
ஆதலாலல்லவா
உன்னை என்னில் சுமக்கின்றேன்.
நீ என்னோடு இல்லாதவரை
கூடத் தீண்ட நினைக்கும்.
கூடவே நீயிருந்தால்
சீறும் புயலும் ஆறி அடங்கும்.
வல்லமையின் வடிவம் நீ.
வலியும் நோவும் வருவது சகஜம்
வதைபடினும் பணியா
வாழ்வு கிட்டுமெனில் அதுபோதும்.
நான் தூங்க நேரிடினும்
தூங்காத என் காதலியே!
என்னையே நம்பாத நான்
உன்னை மட்டுமே நம்புகின்றேன்.
ஏனென்று தெரியுமா?
என் வாழ்வு மட்டுமல்ல
என் தேசத்தின் வாழ்வும்
உன் கையிற்தான்

□ வேலணையூர் சுரேஷ்

# சரஸ்வதி

❑ ச.யோகநாதன்



வானத்தின் நட்சத்திரங்கள் எல்லாம் இடம் இழந்துபோய் இருந்தன. கண்ணுக்கு எட்டிய வரையில் இருள்தான் விரிந்து பரவியிருந்தது. எந்த ஓசையும் இல்லை. மௌனமே பயங்கரமாக முழுப் பகுதியையும் ஆக்கிரமித்திருந்ததுபோல ஒரு இறுக்கம் நிலவியது. மௌனத்தைக் கலைத்துக் கொண்டு ஒரு கன்று சத்தமிட்டது. பிறகு தானாகவே அது சோகத்தோடு அடங்கிப் போயிற்று. வெகு தொலைவில் ஐயோ என்றொரு அலறல் தீனமாகக் கேட்டது. இவை எல்லாவற்றுக்கும் எந்தப் பலனுமில்லாமல் அந்த இடம் முழுவதும் நிசப்தத்தில் ஆழ்ந்து கிடந்தது. வேப்பமரம் ஒன்றின் அருகே சிலர் படுத்திருந்தது இருளுக்குப் பழக்கப்பட்ட கண்களில் லேசாகவே புலனாயிற்று.

கமலம் கண்களை உறுத்திக் கொண்டு இந்தப் பகுதிகளை வெளிச்சப்படுத்த முயன்றாள். குரல்கள்தான் ஆட்களை அவளுக்கு மெல்லமெல்ல அடையாளப்படுத்தின. அவர்களின் குரலில் கமறல் பிணைந்து தெரிந்தது. இந்தக் குரல்களை மற்றைய நேரத்திலாயின் அவள் சட்டென்று அடையாளம் தெரிந்துகொள்வாள். ஆனால், இப்போது அது சாத்தியப்படவில்லை. நெற்றியில் கைகளை வைத்துக்கொண்டு வலது கைப்பெருவிரலால் வருடினாள். யாரோடு எதைப் பேசலாம்.

இது ஒரு கலகலப்பான இடம். எந்த நேரமும் பெண்களின் குரல் களிப்பும், மகிழ்ச்சியுமாய் உல்லாசப்பட்டுக் கொண்டிருந்த இடம். சட்டென்று எழும் சிரிப்புகள் அந்தப் பகுதி முழுவதையும் சந்தோஷத்தை அள்ளி இறைக்கும். அப்போதெல்லாம் ஒரு நாள் கூட தாங்கள் மௌனமாகவோ, சோகமாகவோ இருப்பார்கள் என்று அவர்கள் கனவிற்கூட நினைத்துப் பார்த்ததில்லை. தூரத்தில் அலையெறியும் கடல் இப்போது முற்றிலுமாய் ஓய்ந்து போய்க் கிடந்தது. இது வழமைக்குமாறான ஒன்று. எப்போதும் அலைகள் பரபரக்கும் அந்தக் கடற்கரையோரம் இப்போது மௌனத்தில் ஆழ்ந்துபோய்க் கிடந்தது.

கமலம் தலையில் அடித்துக் கொண்டாள். பொருமிய அலைகளுடன் திடீரென்று பூரித்து தென்னை மர அளவுக்கு உயர்ந்து ஆத்திரத்தோடு சுற்றுப்புறம் யாவையும் அள்ளியெடுத்துச் சென்ற அந்த மூர்க்கம் இப்பொழுது எங்கே மறைந்து போயிற்று? கொஞ்ச நேரந்தான் அந்த இடத்தையும், மக்களையும், வீடுகளையும், மரஞ்செடிகளையும் அந்தக் காற்றும், கொடும் மழையும் கௌவிக்கௌவித்தின்றன. வெறியோடு காறித்துப்பின. உதாசீனத்தோடு அடையாளங்களைப் பரப்பிவிட்டு அங்கிருந்து மறைந்து போயின. எத்தனை பேரைத் துண்டுதுண்டாகப் பிரித்து அது அள்ளித் தின்றது, சிதறி எறிந்தது என்று இன்றுவரை ஒருவருக்கும் தெரியாது. சிதறிய மயானமாய்க் கிடக்கும் அந்தச் சின்னஞ்சிறிய கிராமம் அடையாளமே காண முடியாமல் இப்போது சிதறிப் போய்விட்டது. தூரத்தில் யாரோ தனியாக அழும் குரல் கேட்டது. கமலம் அந்தக் குரலை உற்றுக்கேட்டாள். அழுகையால் வரண்டு கனத்த அந்தக் குரல் சரஸ்வதியின் குரல் போல அவளுக்குத் தோன்றிற்று. நன்றாக உற்றுக் கேட்டாள். ஆர்வத்தோடு கவனித்துக்கேட்டாள். அதுவேறு யாரோவுடைய குரலாக இவள் மனதுக்குத் தெரிந்தது. சரஸ்வதி என்றால் இந்த நேரத்திற்கு அவள் அருகேதான் வந்து அணைத்துக்கொண்டு நிற்பாள். தயவோடும், பரவசத்தோடும் பேசுவாள். அவள் குரலிலே எந்தக் குழந்தையையும் தன்னருகே கூப்பிட்டு கைகளைப் பற்றி சந்தோஷமாக ஏதாவது செய்யச் சொல்லும்.

சரஸ்வதி கடலோடு முற்றாக அள்ளுப்பட்டுப்போய்விட்டாள் என்பதுதான் இந்தக் காலம் வரை பேச்சாக இருந்தது. இந்த மண்ணிற்கு அவள் ஒரு புதுமையாக வந்து வாய்த்தாள் என்று அவளது ஆசிரியர்களும், சினேகிதிகளும் புகழ்ந்தபோதெல்லாம் மௌனம் செறிந்த புன்னகையால் அவள் தலையைக் குனிந்துகொள்வாள். "இந்தக் கல்வி" கடவுள் அருளாலேயே இவளுக்கு இவ்விதம் சாத்தியமாயிற்று என்று கருணாகரன் ஆசிரியர் அடிக்கடி சொல்லுவார். இவள் பல்கலைக்கழகத்துக்குச் சென்று பல உச்சிகளைத் தொடுவாள் என்று அவளது ஆசிரியர்கள் சொல்லும் போதெல்லாம் மௌனம் செறிய லேசாகப் புன்னகை செய்வாள் அவள். எந்தக் காலத்திலும் எந்தக் கேள்விக்கும் அவள் தடுமாறி யோசித்ததில்லை. ஏற்கனவே தெரிந்து வைத்தவள் போல லேசான புன்னகையோடு சட்டென்று மௌனமாகிவிடுவாள். அதாவது தகப்பனுக்கு மகளின் மீது நிறையக் கனவுகள் இருந்தன. அந்த ஊரிலேயே அவள் உச்சத்தை அடைகின்ற திறமைசாலியாக வருவாள் என்று மற்றவர்கள் சொல்கிறபோது அவரின் முகம் முழுப் புன்னகையிலும் அமிழ்ந்துபோகும்.

தூரத்தில் சிலர் ஒன்றாக அழும் குரல் கேட்டது. நெஞ்சைக் கசிய வைத்தது அந்த அழுகுரல். தமது பெண் பிள்ளைகளை இழந்து போனவர்களால் எழுப்பப்பட்ட தீனமான அந்த அலறல் ஓசை கமலத்தின் நெஞ்சத்தைத் தொட்டது.

மனிதரால் எவ்வளவுக்கு அழமுடியும். துயரங்கள் தோளுக்கு மேலாக அமுத்திக் கனக்கும்போது அவர்கள் என்ன செய்வார்கள். யாருக்கு யார் ஆறுதல் சொல்வது. இந்தக் கரையோரக் கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும்

உயிர் இழப்புக்கள் இருந்தன. கொடூரமான வானங்கள் அவர்களை அங்குமிங்குமாய் துயரத்துள் தூக்கி எறிந்திருந்தன. யாருக்கு யார் ஆறுதல் சொல்ல முடியும். மௌனத் தோடான பார்வை முற்றாகவே கலங்கிப் போயிருந்தது.

அந்தக் கிராமத்தில் எல்லோராலும் விரும் பப்பட்ட பெண் சரஸ்வதி. தகப்பன் நடேசு



அவளுக்கு வைத்த பெயர் பலரையும் அப் போதே பரவசப்படுத்தியிருந்தது. இந்தப் பெய ருக்கே மிகவும் பொருத்தமானவள் அவ ளென்று எல்லோரும் சொல்லுகிறபோது அவ ளுடைய முகம் தன்னடக்கத்தால் பொலிவு றும்.

இந்தக் கொடிய சம்பவம் நடந்து 10 நாட் கள் ஆகிவிட்டன. இன்னும் பலருடைய உட லைக் கண்டெடுக்க முடியவில்லை. சரஸ்வதி யின் தகப்பன் தன்னுடைய மகளைத் தேடாத இடமே இல்லை. தலை தலையாக அடித்துக் கொண்டார். ஆனால் அவருக்கு இன்னும் நம் பிக்கை விட்டுப்போகவில்லை. கடவுளுக்குத் தான் வைத்த நேர்த்திக் கடன்கள் நிச்சயமாக பலனளிக்கும் என்று அவர் நம்பினார். இத னால் வேதனை நிறைந்த முகத்தில் கண்ணீர் தனது சுவடுகளைக் கீறவில்லை. ஒரு மூலை யில் உட்கார்ந்து பெருமூச்சோடு இருப்பார் அவர்.

அன்று நிலவு லேசாக வெளிச்சத்தை அள்ளியெறிந்திருந்தது. உருவத்தை இழந்த கடற்கரைக்கு ஒருமுறை போய்வரலாம் என்ற நம்பிக்கையோடு அவர் கடற்கரைக்குச் சென் றார். கடற்கரையில் ஒரே சத்தமாய் இருந்தது. தயங்கியபடி எட்டிப்பார்த்தார். ஒரு உருவம் சீலையினுள் சுருண்டு கிடந்தது. சிவப்பு நிற சீலை உடுத்திய உரு இவர் மனதை என்னவோ பளீரென்று அறைந்தது. அது சரஸ்வதி அணி யும் ஆடைபோல அவருக்குத் தென்பட்டது. தன்னை மறந்து மகளின் பெயரைக் கூறியபடி அலறினார். அந்த இடமே அதிர்ந்தது. நின்ற வர்களெல்லாம் தடுமாறினர். சரசு வா, சரசு வா என்ற சத்தம் எங்கும் வீரிட்டு எழுந்தது. இந்தப் பெண்ணை நோக்கி எல்லோரும் பாய்ந்து சென்றனர். முகத்தைக் கூர்ந்து பார்த் தனர். எவருடைய முகத்திலும் தெளிவு வர வில்லை. ஒருவர் மட்டும் அந்தப் பெண் ணுயை உடலை நிமிர்த்தினார். "இது சரஸ்வ திதான், சரஸ்வதிதான்" என்று அவர் சொல் லியவாறே அந்த முகத்தை நிமிர்த்தினார். பிறகு இது நடேசுவின் மகள்தான் என்று அவரை ஒவ்வொருவரும் மௌனமாகப் பார்த் தனர்.

திடீரென்று நடேசு எல்லோரையும் பார்த் தார். சத்தமிட்டுச் சிரித்தார். "ஓமோம் இது என்ரை மோள்தான். இவள் படித்துப் பெரிய ஆளாய் வரப்போறாள். நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போங்க. நான் என்ரை பிள் ளையைக் கூட்டிக்கொண்டு மெல்ல மெல்ல பள்ளிக்கூடத்துக்குப் போறன்." என்று சொல் லியபடியே அந்தப் பெண்ணை வாரித் தூக் கிக்கொண்டார் அவர். சுற்றி நின்ற எல்லோ ரும் கவலை கனத்த மௌனத்தோடு அவரைப் பார்த்தனர். பின்னர் தலையைக் குனிந்து கொண்டனர்.

# புரட்சிகர ஆயுதமாக எழுந்த சிவராம் சில நினைவுகள்

■ யதீந்திரா



-1-

திரு.சிவராம் அவர்களுடனான முகம் பார்த்த முதல் அறிமுகம் இப்படித்தான் நிகழ்ந்தது. 2003ம் ஆண்டு நானும் எனது சில நண்பர்களும் இணைந்து கருத்தரங்கொன்றை நடாத்தினோம். அது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சாதக பாதகங்களை தமிழ் நிலை நின்று பரிசீலிக்கும் நோக்கிலான கருத்தரங்கு. இதில் பிரதான பேச்சாளராக சிவராம் அவர்கள் கலந்து கொண்டிருந்தார். ஒரு தடைவைக்கு பலதடைவை தொடர்புகொண்டுதான் அவர் சம்மதத்தைப் பெற்றேன். அன்றிலிருந்து அவர் படுகொலை செய்யப்படும்வரை அந்த முதல் அறிமுகமும் தொடர்பும் நட்பாக நீடித்தது எனலாம்.

நிகழ்வில் அவர் பேசத் தொடங்கியதும் முதலில் நான் எரிச்சலடைந்தேன். ஏனென்றால் நாம் அவருக்கு பேசக்கொடுத்த தலைப்பு வேறு அவர் பேசிய தலைப்பு வேறு. "தமிழ் தேசிய அரசியலில் ஜனநாயக வழித் தலைமைகளின் பங்கு" என்பதுதான் நாங்கள் கொடுத்த தலைப்பு. அந்த நேரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாகியிருந்ததும் அது குறித்துப் பல விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததுமே அந்த தலைப்பை நாம் தெரியக் காரணம். இதில் சுவார்ஷியமான விடயமென்னவென்றால் தனது பேச்சை முடிக்கும் தறுவாயிற்தான் எங்களுடைய தலைப்பை அவர் உச்சரித்தார்.

"இது எல்லோரும் ஓரணியில் நிற்கவேண்டிய காலம் இந்த நேரத்தில் ஜனநாயகவழித் தலைமைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை"

பின்னர் அவரது எழுத்துக்களோடு எனது பரிச்சயத்தை அதிகரித்துக்கொண்டபோதுதான் அவர் ஜனநாயவழித் தலைமைகள் என்ற அரசியல் அர்த்தப்படுத்தலை ஏன் நிராகரிக்கிறார் என்பதும் அதன் அரசியல் உள்ளடக்கம் என்ன என்பதையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இங்கு நாம் கவனிக்கவேண்டியது அவர் ஜனநாயகம் என்ற கருத்தை நிராகரிக்கவில்லை. ஜனநாயகவழித் தலைமைகள் என்ற அரசியல் அர்த்தப்படுத்தலையே நிராகரிக்கிறார். பின்னர் இதுபற்றி சிறிது பார்க்கலாம்.

சிவராம் அவர்களுடன் நான் நான்கு அல்லது ஐந்து தடவைகள்தான் நேரில் பேசியிருப்பேன். மற்றும்படி அவ்வப்போதான சில தொலைபேசி உரையாடல்கள். அவருடன் பழகியதிலிருந்தும் அவருடைய எழுத்துக்களோடு பரிச்சயப்பட்டதிலிருந்தும் அவர் தொடர்பான என்னுடைய புரிதல். சிவராம் மிகவும் தெளிவான நெகிழ்வற்ற சில அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டவர். சிங்கள பெருந்தேசியவா தம் குறித்த எல்லா கேள்விகளுக்கும் அவரிடம் விடை இருப்பது போல் தெரிகிறது. சிங்கள அரசு ஒரு போதும் ஒரு நிலைமாற்றத்தை அடையப்போவதில்லை என்பதில் அவர் மிக இறுக்கமான பார்வையை வரித்திருந்தார். அவரது இந்தப்பார்வை சிவராம் ஒரு யுத்த விரும்பி என்றவாறான விமர்சனத்தை சிலர் முன்வைக்கவும் காரணமாகியது. ஆனால் எந்த விமர்சனமும் அவரது பார்வையின் இறுக்கத்தை தளர்த்தியதாக குறிப்பில்லை. எந்த அரசியல் நெகிழ்வற்றதென அவர் இறுதிவரை கூறிவந்தாரோ எந்த அரசியிலிடம் தமிழ்மக்கள் விமோசனத்தை எதிர்பார்க்க முடியாது என இறுதிவரை கூறிவந்தாரோ

அந்த அரசியலே அவரைக் கொன்றது. எந்த அரசியல் பலமாக இருக்கவேண்டுமென இறுதிவரை கூறி வந்தாரோ அந்த அரசியலே எதிரிகள் அவரை குறி வைக்கக் காரணமாகியது. சிவராமை கொன்றதனூடாகவும் சிங்களம், தமிழர் தேசத்திற்கு ஒரு தெளிவான செய்தியைச் சொல்லித்தான் இருக்கிறது.

-2-

எனது அறிதலுக்குட்பட்டவகையில் தமிழ்ச் சூழலில் தனது எழுத்துக்களை ஒரு புரட்சிகர ஆயுதமாகப் பயன்படுத்திய ஒருவரை குறிப்பிடுவதானால் முதலில் நினைவுக்குவரக் கூடியவர் சிவராம்தான். அந்த அடிப்படையிற்தான் நான் இந்த நினைவுக் குறிப்பிற்கு "புரட்சிகர ஆயுதமாக எழுந்து" என தலைப்பிட்டிருக்கிறேன். தத்துவம் பற்றி கூறும் ஆபிரிக்க மார்க்சியர் அமில்கர் கப்ரால் தத்துவம் ஒரு புரட்சிகர ஆயுதம் என்பார். அதனையே சற்று மாற்றியிருக்கிறேன். அமில்கர் கப்ரால் 1973இல் காலனியாதிக்க கூலிப்படைகளால் சுட்டுக்கொல்லப் பட்டவர் என்பதும் இந்த இடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

உண்மையில் சிவராமை நினைவு கொள்ளுதல் என்பது வெறுமனே ஒரு ஊடகவியலாளரை நினைவு கொள்ளுதல் என்ற அர்த்தமுடையதல்ல. அது ஒரு சடங்காச்சாரமான நினைவு கூறலுமல்ல. தமிழ் தேசியம் பலமாக இருக்க வேண்டுமென உறுதியாக கூறிவந்த ஒரு அரசியல் கருத்தியலாளரைத்தான் நாம் இந்த இடத்தில் நினைவு கொள்கிறோம். தமிழ்த் தேசியம் உயிர்ப்பாக இருப்பது மட்டுமே தமிழ்மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்க முடியுமென உறுதிபடக் கூறிவந்த ஒரு போரியல் ஆய்வாளரைத்தான் நினைவு கொள்கிறோம். எங்களுக்குத் தெரியும் விடுதலைப்புலிகளையும் தமிழ்த்தேசிய அரசியலையும் ஏற்றுக்கொள்ளாத எவருக்கும் சிவராமின் இழப்பு ஒரு பொருட்டல்ல. ஆனால் தமிழ்த்தேசியம் குறித்தும் அதனைப் பலப் படுத்தவேண்டிய வரலாற்றுக் கடப்பாடு குறித்தும் சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் இது பேரிழப்பு. தமிழ் தேசியத்தில் வாழும் பல அறிவார்த்தமான கருத்தாளர்கள் ஒரு இடைவெளி ஏற்பட்டுவிட்டதாக உணர்வதையும் நானறிவேன்.

சிவராமின் கொலையால் துயருறும் நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலி என்ன? சிவராம் தமிழ் அரசியல் ஆய்வுச் சூழலில் ஏற்படுத்திய புதிய முறையியல்சார்ந்த பார்வையை, புதிய வீச்சை, மரபார்ந்த ஊடக தரிசன உடைவை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதுதான். ஏனென்றால் நாம் விடுதலைக்காகவும் தேசியத்திற்காகவும் வாழ்பவர்களால்மட்டுமல்ல அதற்காக தம்மை அர்ப்பணித்து மடிந்து போனவர்களாலும் பலம் பெறும் ஒரு சமூகமாக உருப்பெற்றுள்ளோம். இது எமக்கு மட்டுமல்ல, விடுதலை வேண்டிநிற்கும் எல்லாத் தேசிய சமூகங்களுக்கும் பொருந்தும். தவிர இது தேசியத்தின் குணாம்சமும்கூட.

-3-

இனி அவருடைய எழுத்துக்கள் குறித்து எனது சில அவதானங்களைப் பகிர்ந்துகொள்ள விழைகிறேன். தமிழ் ஊடகத்துறையை பொறுத்தவரையில் பொதுநிலையில் நின்று பார்க்கும்போது சிவராமின் சிந்தனை ஒரு 25 வருடங்கள் முன்னோக்கி இருப்பது போன்ற தோற்றத்தைக் காட்டுகிறது. திருகோணமலையில் அவரது நினைவுக் கூட்டத்தில் பேசும் போதும் நான் இதனைக் குறிப்பிட்டுச் சொன்னேன். ஆனால் சற்று ஆழமாகப் பார்த்தால் அவர் முன்னோக்கிச் சிந்திக்கவில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. அவர் விடுதலைப்போராட்டத்தின் நகர்வுக்கு சமாந்தரமாக சிந்தித்தார் என்பதுதான் சரியானது. இதுவே அவர் முன்னோக்கி சிந்திப்பது போன்ற தோற்றத்தைக் காட்டியது. இதற்கான காரணத்தை நமது சமூகநிலையில் நின்றும் பார்க்க வேண்டும். ஒரு விடுதலை அரசியலால் வழிநடத்தப்படுகின்ற சமூகத்திற்கேயுரித்தான அறிவுத் தேடல், புலமைத்துவ உழைப்பு எமது சமூகத்தை பொறுத்தவரையில் திருப்திகொள்ளக் கூடியநிலையில் இல்லை. விடுதலைப்போராட்டம் வளர்ந்த அளவுக்கு எமது சமூகம் வளரவில்லை. நமது கடந்த இரு தசாப்தகால தமிழ் ஆய்வுச்சூழல் எவ்வாறு இருக்கின்றது என்பதை விபரம் அறிந்தோர் அறிவர். சிவராம் விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சிக்கும் அதன் திசைவழி நகர்வுகளுக்கும் ஏற்ப சமாந்தரமாக தனது சிந்தனையை நகர்த்திச் சென்றார். இது அவர் முன்னோக்கிச் சிந்திப்பது போன்ற தோற்றத்தைக் காட்டியது. உண்மை, பலரால் போராட்டத்தின் நகர்வுக்கு ஈடுகொடுத்து சிந்திக்க முடியவில்லை என்பதுதான். இதற்கு சிவராமின் பரந்த அறிவுகாரணமாக இருக்கக்கூடும். முக்கியமாக மார்க்சிய முறையியல் சார்ந்த அறிவு, போரியல் அறிவு, மானுடவியல் அறிவு போன்றவற்றின் ஊடாக உருப்பெற்ற ஆளுமையை அவர் கொண்டிருந்ததும் அவருடைய சிந்தனை முறைக்கு காரணமாக இருக்கலாம். சிவராம் ஒரு மார்க்சிய அடித்தளத்

தில் இருந்து வந்தவர் என்பதையும் நாம் மறக்கக் கூடாது. அவரது நுணுகிய அரசியல் ஆய்வறி விற்கு அவரது மார்க்சிய முறையியல் சார்ந்த அறிவு தான் காரணமாக இருக்குமோ எனவும் நான் நினைக்கிறேன்.

சிவராமின் கருத்துக்களில் நான் அவதானித்த பிறிதொரு விடயம் அவரது பார்வையில் சமரசம் என்பதற்கான இடைவெளி மிகவும் குறைவாக இருந் தது, இல்லை என்றுகூடச் சொல்லலாம். அவர் எங் களுடைய கருத்தரங்கில் பேசியது இப்பொழுதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அந்த வேளை யில் ஐக்கியதேசியக் கட்சி ஏதோ பெரிதாக தரப் போகின்றது என்ற மாயை நமது ஊடகங்கள் சொல் லிக்கொண்டிருந்த வேளையில் புரிந்துணர்வு ஒப்பந் தம் பற்றிய அவரது பார்வை முற்றிலும் மாறுபட்டி ருந்தது.

"யுத்தத்தினூடாக தோற்கடிக்க முடியாத விடுதலை இயக்கங்களை ஆதிக்க அரசும் அந்த ஆதிக்க அரசுக்கு முண்டுகொடுக்கும் ஏகாதிபத்திய சக்தி களும் இவ்வாறான ஒப்பந்தங்களின் ஊடாக தோற் கடிக்க முயல்கின்றன. பலம் பொருந்திய விடுதலை இயக்கமான கொலம்பிய விடுதலை இயக்கம் (FARC) இவ்வாறானதொரு ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த காலநீட்சியைக்கொண்டு அமெரிக்க உத வியுடன் பலவீனப்படுத்தப்பட்டது. நாகா இயக்கத் திற்கும் இதுதான் நடந்தது"

பின்னர் அவர் சாள்ஸ் அன்ரனி படையணியின் "நெருப்பாற்று நீச்சலில் பத்து ஆண்டுகள்" என்னும் நூல் வெளியீட்டில் உரையாற்றும் போதும் இந்தக் கருத்தையே வலியுறுத்தியிருந்ததை அவதானிக்க முடிந்தது. அதேவேளை இத்தகைய சூழலை எதிர் கொள்வதற்கு அவ்வாறான போராட்ட வரலாறுகள் மக்கள் மத்தியில் சொல்லப்பட வேண்டியதன் முக்கி யத்துவத்தையும் வலியுறுத்தியிருந்தார். (இக்குறிப்பு வெளிச்சம் சஞ்சிகையில் இடம் பெற்றுள்ளது)

நான் நினைக்கிறேன் கடந்த மூன்றுவருடங்க ளுக்கும் மேலாக நீடித்திருக்கும் இந்த ஒப்பந்தச் சூழலில் அவரது மேற்படி பார்வை மாற்றமடைந்திருப் பதற்குச் சான்றில்லை. அவர் இறுதியாக எழுதிய "எரிக்சொல்கெய்மின் வருகையும் தமிழ்த் தேசியத் தின் நெருக்கடியும்" என்ற கட்டுரைவரை அதே பார் வைதான். அவர் இவற்றை தமிழ்த்தேசியம் பல மாக இருக்கவேண்டும் என்ற அர்த்தத்தில்தான் முன் வைத்தார் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவரது எழுத்துக்களுள் என்னை ஈர்த்த பிறி தொரு விடயம் பிரித்தாளும் தந்திரங்கள் குறித்த ஆய்வு. ஆதிக்க சக்திகள் ஒடுக்குமுறைக்கு எதி ராகப் போராடும் சமூகத்தில் பிளவுகளை ஏற் படுத்தி, அவற்றை நிரந்தரமாக்கி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை முடக்குவதற்கு இடை யறாது முயன்று வருகின்றன. இந்த அடிப்படை யில் மிதவாதி – தீவிரவாதி என்ற அரசியல் பிரிவு நிலைகள் எவ்வளவு ஆபத்தானது என்பதை விளக் குகிறார்.. அதன் முக்கியத்துவம் கருதி ஆய்வின் ஒரு சிறு பகுதியை இணைக்கிறேன்.

"மிதவாதி – தீவிரவாதி என்பது நவீன பிரித்தா ளும் உத்திகளின் அடித்தளமாக விளங்கும் ஒரு கருத்தியல் ஆகும். ஒடுக்கப்பட்ட மக்களின் போராட் டங்களை மழுங்கடிப்பதற்கும் ஒடுக்கும் அரசுகள் ஏகாதிபத்தியங்கள் என்பவற்றை அண்டிப்பிழைக் கும் சந்தர்ப்பவாதிகளுக்கு அறிவியல் - சமூக – அரசியல் உயர் அந்தஸ்தை வழங்கிவிடவும் வல் லரசுகள் ஏகாதிபத்தியங்கள் என்பவற்றின் ஒடுக்கு முறை அதிகாரத்தின் அடித்தளத்தை கேள்விக்குள் ளாக்குபவர்களை, எதிர்ப்பாளர்களை நாகரீகத்திற் கும், மனித விழுமியங்களுக்கும், பகுத்தறிவுக்கும் எதிரான கும்பல் என சித்தரிப்பதற்கும் மேற்படி மித வாதி – தீவிரவாதி அல்லது பயங்கரவாதி என்ற முரண்சோடி மிக நுட்பமாக பயன்படுத்தப்படுகிறது.

எதிர் கொரில்லா போரியலின் முக்கிய அம்சங் களான அமைதிப்படுத்தல் (Pacification) மற்றும் ஒரு வரையறைக்குள் முடக்கிவைத்தல் (Contain ment) என்பவற்றிற்கு இந்த மிதவாதி – தீவிரவாதி (பயங்கரவாதி) என்னும் முரண்சோடி மிக அடிப் படையானதாகும். நீதியும் நியாயமுமுள்ள போராட் டங்களை குருட்டுத்தனமானதாகக் காட்டி அவற்றை நியாயத்தன்மை அற்றவையாக்க (delegitimize ) மிதவாதி – தீவிரவாதி என்ற பிளவை ஒடுக்கு முறைக்கு எதிராக போராடும் தேசத்தில் அல்லது வர்க்கத்தில் உண்டாக்கி அதை நுட்பமாகப் பேணி வளர்த்து அந்தச் சமூகத்தின் போராடும் உளவலுவை சிதைப்பதை நவீன ஏகாதிபத்தியங்கள் ஒரு பெரும் அறிவுத்துறையாகக் கொண்டுள்ளன...

என்னைப் பொறுத்தவரையில் புலிகள் களத் தில்பெற்ற பல பெருவெற்றிகளின் பலாபலன்களை கணப்பொழுதில் இல்லாதொழிக்கக்கூடிய வல்லமை இந்த மிதவாதம் பயங்கரவாதம் என்ற உத்திக் குண்டு."

அவரது இந்த ஆய்வுகளை படித்தபோதுதான்

எங்களுடைய தலைப்பை அவர் நிராகரித்ததையும் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இன்றும் இந்தப் பிரித்தாளும் தந்திரம் பலவழிகளிலும் அரங்கேறிக்கொண்டுதான் இருக்கிறது. தென்பகுதி இனவாத புத்திஜீவிகளும், அரசியலாளர்களும் கூட்டணியைச் (TULF) சேர்ந்தவர்களை பெரிய அறிவாளிகள் என்றும் பண்பாளர்கள் என்றும் அழுத்திச் சொல்லும்போதெல்லாம் நாம் சிவராமை நினைத்துக்கொள்வோம். ஒரு பிரபலமான தமிழ்ப் பெண் புத்திஜீவி "விடுதலைப்புலிகளுக்கு ஆங்கிலம் தெரியாததன் காரணத்தால்தான் அவர்கள் வன்முறை நாட்டம் உடையவர்களாக இருக்கிறார்கள்" என எழுதியிருப்பதையும் நான் இந்த இடத்தில் நினைவு கொள்கிறேன். அரசியல் அரங்கில் மட்டுமல்ல சமூகத் தளத்திலும் இந்த பிரித்தாளும் தந்திரம் பலவாறான நிலைகளிலும் அரங்கேறிக் கொண்டு தான் இருக்கிறது.

சிவராமின் ஒட்டுமொத்த எழுத்துக்களை திரட்டிப்பார்க்கும்போது சிலவேளை நமக்கு முரண்புள்ளிகளும் தென்படக்கூடும். அவ்வாறு முரண்புள்ளிகள் தென்பட்டாலும் அது ஆச்சரியப்படுவதற்குரிய ஒன்றுமல்ல. முரண்படுவதற்கு முன் சிவராமின் ஆற்றலையும் பணியையும் அங்கீகரித்துவிட்டு முரண்படுங்கள். அதுவே ஒரு புத்திஜீவியை அணுகுவதற்கான நாகரிகமும்கூட. முரண்பாடு சிவராமுக்கு பிடிக்காத ஒன்றல்ல.

-4-

முடிவாக

சிவராம் பற்றி மேலும் சில வரிகள்.

இன்று சிவராம் ஒரு இடைவெளியை விட்டுச் சென்றிருக்கிறார். இது ஒரு கொலையால் உருவாகிய இடைவெளி. எப்பொழுதும் அதிகாரத்துவங்களை, கேள்விக்குள்ளாக்குபவர்களை ஆதிக்க சக்திகள் அச்சத்துடனேயே பார்க்கின்றன. இறுதியில் அழித்தும் விடுகின்றன. ஒரு சிந்தனையாளனின் கருத்துக்கள் ஒரு மனிதனின் நம்பிக்கை என்ற அடிப்படையில் பார்க்கப்படுவதில்லை. பல நம்பிக்கைகள் இருக்கமுடியும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமையின் விளைவுதான் இது. இது மூன்றாம் உலகு முழுவதும் விரவிக்கிடக்கும் ஒரு துர்ப்பாக்கியம். தமிழ்த்தேசியம் என்பது சிவராமின் நம்பிக்கை.

தமிழ்த்தேசியம் பலமாய் இருக்க வேண்டுமென ஒரு தசாப்தத்திற்கும் மேலாக ஒலித்துவந்த ஒரு குரல் இன்று நின்றுவிட்டது. அதன் அதிர்வுகள் நின்று விடப்போவதில்லை. சிவராமின் இழப்பால் தமிழ் அரசியல் ஆய்வுச்சூழலில் ஒரு இடைவெளி ஏற்பட்டிருப்பது என்பதில் கருத்துபேதத்திற்கு இடமிருக்கமுடியாது. ஆனால் அது ஒரு நிரந்தமான இடைவெளியாக இருக்குமென நான் கூறமாட்டேன். அவ்வாறு நான் கூறினால் அது சிவராம் நம்பிய மார்க்சிய இயங்கியலுக்கே முரணானதாகும். இந்த இடைவெளி நிரம்பும் காலம் வரவே செய்யும்.

நாட்டிற்கும் சமூகத்திற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்களை "வரலாற்று நிலத்தை உழுபவர்கள்" "அந்த நிலத்திற்கு உரமாக அமைபவர்கள்" என்று இரண்டுவகையில் பாகுபடுத்துகிறார் கிராம்ஷி. இந்த இரண்டு வகைப்படுத்தலுக்குள்ளும் சிவராம் அடங்கிப் போகின்றார்.

நாட்டிற்கும் சமூகத்திற்குமாக வாழ்பவர்களை கொல்லமுடியும் ஆனால் அவர்களின் கனவுகளைக் கொல்லமுடியாது.


## புத்தகப் பண்ணைக்குப் புதிய வரவு



சமகால சர்வதேச அரசியல்

ஆசிரியர்: கே.ரீ.கணேசலிங்கம்

வெளியீடு: கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 200.00

தமிழில் அரசியல், பொருளாதார அறிவியலைத் தரும் நூல்கள் அதுவும் சாதாரண மனிதர்களுக்கு ஏற்ற வகையிலானவை மிகக் குறைவு இந்த முயற்சியில் ஈடுபடவேண்டிய நம்நாட்டுப் புத்திஜீவிகளின் செயற்பாடுகள் இன்றும் போதாமலே இருக்கிறது. அந்த வகையில் இந்நூல் ஒரு நன்முயற்சி.

நூலின் முன்னுரையில்

**திரு.சி.குமாரவேள்.**

# நன்மதி

❑ வேரற்கேணியன்

அமைதியாம் சமாதானமாம்
'அவர்கள்' தோளில் மட்டும் ஏன்
அச்சுறுத்தும் துப்பாக்கி?

எங்கள் இல்லங்களில் 'அவர்கள்'
அகதி முகாம்களில் நாங்கள்.

தமிழர் ஊர் நகரங்கள் அழிந்து
தரைமட்டமாகிக்கிடக்க அருகே
பௌத்த தூபிகளை
உயர்த்திக் கட்டுகிறார்கள்.
வணக்கத் தலங்களின் எதிரே
விகாரைகள் கட்டுகிறார்கள்.
கல்வேலிகளை உடைத்தெடுத்து
காவலரண் அமைக்கிறார்கள்.

உள்ளூர் உற்பத்திகளை
புறக்கணித்து அந்நியப் பொருளில்
ஆர்வமூட்டும் விளம்பரங்கள்.
தெற்கே போகிறது தமிழன் தேட்டம்
தேய்ந்து கிடக்கிறது வடகிழக்கு.
பற்றுச் சிட்டையுடன் சந்தியில்
பொலிஸார் அரசுக்கு
வரி சேகரிக்கும் அக்கறை.

குற்றவாளிகள் பக்கத்தில் நிற்க
நிரபராதிகளைக் கைதுசெய்கிறார்கள்.
இடம்பெயர்ந்தவர் வீடுகளை
ஆக்கிரமிக்கும் அடாவடிகளுக்கு
அரச சிப்பாய் காவல்.
எங்கள் கடலில் மீன்பிடிக்க
தூரதேசத்தவர் வருகிறார்கள்
துரத்தியடிக்கும் கடமை இல்லை
இலங்கை கடற்படைக்கு.



நிதியுதவும் நாடுகள் தரும் கோடிகள்
வடகிழக்கைப் புனரமைக்க அல்ல
தென்னிலங்கையை வாழவைக்க.

போர் செய்யோம் பேசுவோம்
என்று [illegible]ப்பீர் நாளும்... எனில்
ஏன் இந்தக் கெடுபிடிகள்?

அமெரிக்காவிடம் இந்தியாவிடம்
பெருங்கப்பல் வாங்குவதும்
பயிற்சி பெறுவதும் எதற்காக?

படைபலம் மும்மடங்காகப்
பெருக்குவதேன் ஈராக்குக்கு அனுப்பவா?
அல்லது -
பெரும்படை நடத்தி
எங்களை மீண்டும் போருக்கழைத்து
வென்றிடலாம் என்ற கனவா?
பெரமுனயின் போர்ப்படை
இருபத்தையாயிரம் துணையிருக்கு
என்ற துணிவா?

"கேடுவரும் போது மதி
கெட்டுவரும்"
முதுமொழி கற்றதில்லையா
வேண்டாம் கெடுமதி, கேள் அம்மா
போர் ஒழித்து நாட்டை
வளப்படுத்துதல்தான் நன்மதி.

# கறைபடிந்த இரத்தம்

❑ துவாரகன்



மண்ணில் இருந்து
முழுதாய்த் தலைகாட்டிய
அந்தத் துருப்பிடித்த
இரும்புத் துண்டைக் கண்டபோது.
ஏனோ: இந்த மனசு
மீண்டும் பயப்பிடுகிறது.

தம்பி அதைத் தூக்கி வந்தபோது
முப்பது அடி தோண்டியும்
தண்ணீர் வராத
பக்கத்து வளவுப் பாழடைந்த கிணற்றுள்.
நான் தான் தூரநின்று
எறிந்து விட்டு வந்தேன்.

'பொம்மர்' அடித்துச் செத்துப்போன
என் மாமாவை
'லாண்ட் மாஸ்ரர்' பெட்டியில்
நீளக் கிடத்தி வந்தனர்.
மார்பில் ஒரு சிவப்புப் பொட்டு மட்டுமே.
அப்போதும் அதை நான் காணவில்லை.

கடலில் இருந்து கூவி வந்த
ஒரு குண்டு
'லைற் போஸ்ரில்' பட்டுத் தெறித்து.
'வேலையண்ணா' செத்துப்போனார்.
அப்போதும் அதை நான் காணவில்லை.

மாலை நேர முன்னிருட்டில்
அந்தப் பெட்டியில் அவனைச் சுமந்து சென்றேன்.
உப்பளத்தில் இழந்ததென
ஒரு காலும் இல்லாமல்
நீட்டிப் படுத்திருந்தான்.
அப்போதும் அதை நான் காணவில்லை.

விசர் நாயாக வந்தவர்கள்.
மான் காட்டுத் திடலில்
'கந்தசாமி' அண்ணாவைச் சுட்டுச் சென்றனர்.
அப்போதும் நான் அதை காணவில்லை.

நான் கண்டதெல்லாம்
பிசுபிசுத்த பச்சை இரத்தம்.
உறைந்துபோன கருஞ்சிவப்பு இரத்தம்
யாருக்குத் தெரியும்?
அந்தத் துருப்பிடித்த இரும்புத் துண்டில் கூட:
யாரோ ஒருவரின்
கறைபடிந்த இரத்தமும் ஒட்டியிருக்கலாம்.

வாழ்த்து மடல்கள் வடிவமைப்பா
அழைப்பிதழ்கள் வடிவமைப்பா
புத்தகங்கள் வடிவமைப்பா
உங்கள் எந்தத் தேவையாயினும்
எங்களிடம் வாருங்கள்
நாங்கள் உங்களுக்கு
அழகாக அச்சிட்டுத் தருவோம்.

# நிலா பதிப்பகம்

பிரதானசாலை, கிளிநொச்சி.






தமிழக ஓவியர் புகழேந்தியின் தூரிகை வண்ணம்.